கல்கி



KALKI ஜூலை 15, 1956 4 அணா



L. 261-50 TM

இந்தியாவில் தயாரித்தது

மலர் 15
இதழ் 50

கல்கி
பொருளடக்கம்

[illegible] ஆனி 32

ஜூலை 15, 1956

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

பூதேவியை விடுதலை செய்!



ரஸ்ஸல் முதலான உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் பலர் அணுகுண்டு சோதனை அபாயத்திலிருந்து உலகை விடுவிக்கும்படி வல்லரசுகளுக்குப் புத்திமதி கூறி வருகிறார்கள். அன்று விபீஷணன் புத்திமதியை ராவணன் கேளாததால் அரக்கர் குலம் அழிந்தது. ஆனால் சீதேவி விடுதலை பெற்றாள். இன்று விஞ்ஞானிகளின் வார்த்தையை வல்லரசுகள் கேட்க மறுத்தால் வல்லரசுகளோடு உலகமே அழிய நேரிடலாம்.



மலர் 15 | இதழ் 50

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ௵ | ஆனி 32

பிளவுக்கு மருந்து

சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்னையில் கூடிய தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் தட்சிணப் பிரதேசம் சம்பந்தமாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் பார்த்தோம்.

காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் 20 பேர்களில் 13 பேர் கூட்டத்துக்கு வந்திருந்தனர். அதில் ஒருவர் அமிருதசரஸ் காங்கிரஸ் தீர்மானத்தை எடுத்துச் சொல்லிப் பேசியதாகச் சொல்லப்படுகிறது. இது அநேகமாக ஒரு நாடகமாகத்தானிருந்திருக்க வேண்டும். அந்த வியாஜத்தை வைத்து, திரு காமராஜர் அமிருதசரஸ் காங்கிரஸ் தீர்மானத்தைக் கவனிக்க வேண்டியதில்லை என்று அழுத்தமாகச் சொல்லி விட்டார்.

இப்பொழுது மகத்தான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் படும் சமயமாக இருப்பதால் காங்கிரஸின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய தட்சிணப் பிரதேச விவாதத்தில் இறங்க வேண்டாம் என்பது தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்த தீர்மானத்தின் சாரம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கிய பண்டித ஜவாஹர்லால் நேரு, பந்த் போன்ற தேசத்தின் பெருந் தலைவர்களே, "பன்மொழி ராஜ்ய அமைப்புக்கு வேண்டிய காரியங்களைச் செய்யுங்கள்" என்று அமிருதசரஸ் காங்கிரஸில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெறுவதற்காகவே பன்மொழி ராஜ்யங்கள் வேண்டும் என்று நன்றாக வற்புறுத்தியிருக்கிறார்கள். தட்சிணப் பிரதேசத்தைப் பிரதமர் நேருவும், பந்த் அவர்களும் ஆதரித்துத் தீர்மானத்தில் சேர்த்ததற்கும் இதுவே காரணம்.

காங்கிரஸ் மேலிடத்தார் செய்த தீர்மானத்தை ஆதரித்துத் தட்சிணப் பிரதேச அமைப்பிலுள்ள நலன்களை நாம் பன்முறை எழுதி வந்திருக்கிறோம். என்றாலும் வரப் போகிற தேர்தலையும் மறந்துவிட வில்லை. இந்தத் தேர்தல் சமயத்தில் தமிழ் நாடு காங்கிரஸின் கொள்கை எப்படியிருக்கவேண்டும் என்பதையும் 'கல்கி' ஜூன் மாதம் 24-ம் தேதி இதழில் பின்வருமாறு எழுதியிருந்தோம்:

"ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பொதுப்படையாகவாவது, தட்சிணப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டிலாவது புது ஏற்பாட்டுப் பிரச்னையைத் தேர்தல் பிரச்னையாக்கக் கூடாது. தேர்தலில் யார் யோக்கியர்கள் என்பது மட்டுமே கேள்வி. மொழி வெறியையாவது, அதை வெறுக்கும் கொள்கையையாவது தேர்தல் பிரச்னையாக்கக் கூடாது. ஆக்கினால் வெறி வளர்ந்து கொண்டே போகும். விஷத்துக்கு விஷத்தை மருந்தாகக் கொடுப்பது போலாகும். தேசத்தின் நன்மைக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்களைச் சரியாக நிறைவேற்றுவதே சட்டசபையினரின் நோக்கமாக இருக்க வேண்டும்."

** ** ** **

சமீப காலத்தில் தட்சிணப் பிரதேசக் கொள்கைக்கு வரவரக் காங்கிரஸ்காரர்களிடையேயும் பொது மக்களிடையேயும் ஆதரவு பெருகி வருகிறது. இதைக் கண்டு தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி பயப்படுகிறது. இது வரப் போகும் தேர்தலைக் கெடுத்து விடுமோ என்று அஞ்சுகிறது. காங்கிரஸுக்குள் பிளவு உண்டாக்கி ஒற்றுமையைக் கலைக்குமோ என்று பயப்படுவதாகச் சொல்லிக் கொள்கிறது.

இதற்கு ஒரு மருந்து உண்டு. அது சற்றுக் கசப்பான மருந்து. ஒப்புக் கொள்வது கஷ்டம். ஆயினும் அதை எடுத்துக் காட்டுகிறோம்.



காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு லண்டனில் நடைபெற்ற சமயம் எலிஸபெத் மகாராணி பக்கிங்காம் அரண்மனையில் அவர்களுக்கு ஒரு விருந்துபசாரம் நடத்தினார். மகாராணியுடன் இந்தியப் பிரதமர் நேருஜி, இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா, பாகிஸ்தான் பிரதமர் முகம்மதலி முதலான ஒன்பது காமன்வெல்த் நாட்டுப் பிரதமர்களையும் படத்தில் காணலாம்.

தட்சிணைப் பிரதேசப் பிரச்னை தேர்தல் பிரச்னையாகக் கூடாது. காங்கிரஸ்காரர்களுக்குள் பிளவு உண்டாக்கக் கூடாது என்று விரும்பினால் தட்சிணைப் பிரதேசத்தைப் பகிரங்கமாக ஆதரிப்பவர்களில் சிலரைத் தேர்தலில் அபேட்சகர்களாகப் பயப்படாமல் எடுத்துக்கொண்டு ஆதரிப்பதே தக்க மருந்தாகும்; நல்ல பரிகாரமுமாகும். இப்படிச் செய்தால், இந்தப் பிரச்னையினால் காங்கிரசுக்குள் ஒரு பிளவுமில்லை என்பது பொதுஜனங்களுக்கு விளங்கும்.

அப்படிச் செய்யாமல், ''நாங்களே வைத்தியர்கள், உயிர் இருக்கிறது, அல்லது போய் விட்டது என்பது எங்களுக்குத் தெரியும்; அந்தப் பிரச்னை செத்துப் போய் விட்டது; மயானத்துக்கு எடுத்துச் செல்லுங்கள்'' என்று சொல்கிறார்கள், த. நா. கா. கமிட்டியினர். இப்படிச் சொல்வதற்கு இவர்கள் எங்கே, எந்தப் பரீட்சையில் தேர்ந்துவிட்ட வைத்தியர்கள்?

''அமிருதசரஸ் காங்கிரஸ் மகாநாட்டில் தீர்மானித்தது வெறும் தவிடு, நாங்கள் சொல்லுவதுதான் அவல்'' என்று இவர்கள் சொல்லுவதைப் பொதுஜனங்கள் ஒப்புக்கொள்வதற்கில்லை. நாட்டுக்கு நல்லது என்று பாரதத் தலைவர்கள் ஏகமனதாகத் தீர்மானித்ததை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்வது கடமை; காங்கிரஸ் கமிட்டியின் கடமை; பதவியிலிருக்கும் காங்கிரஸ் தலைவர்களின் கடமை. அந்தக் கடமைகளைச் செய்யவில்லை. அதற்கு மாறாக அதைப் புறக்கணித்தும் எதிர்த்துப் பேசியும் விட்டு. இப்போது, ''இது செத்துப் போய் விட்டது'' என்று சொல்லுவது ஒரு யுக்தியேயாகும். மோசடி!

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பதவிகளிலிருக்கும் காங்கிரஸ்காரர்களின் இந்த மோசமான நிலையைத் தமிழக மக்கள் உணராமலில்லை. உணர்ந்து, த. நா. காங்கிரஸ் தன் கடமையில் தவறி விட்டது என்று கூப்பாடு போட்டார்கள். தட்சிணைப்பிரதேசத்தை ஆதரித்துத் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். ஆனால் த. நா. கா. கமிட்டியினரோ இவர்களைப் பார்த்து, ''இல்லை; நீங்கள் வாய் திறக்கக் கூடாது. உங்கள் பிரச்னை செத்துப் போய் விட்டது'' என்று கூறுகிறார்கள். இது பிரேதம் எடுப்பவர்கள் வாசலில் உட்கார்ந்து அவசரப்படுவது போலாகுமே தவிர வேறில்லை.

''இந்த ராஜ்ய அமைப்பைப் பற்றிய விவாதம் நமக்குள் இந்தத் தேர்தல் சமயத்தில் வேண்டாம்; பிறகு மெள்ள இவ்விஷயத்தை ஆலோசித்துக் கொள்ளலாம்'' என்று உண்மையில் த. நா. காங்கிரஸ் கமிட்டியார் விரும்பினால் அதற்கு ஒரே ஒரு மருந்து மேலே நாம் சொன்ன மருந்துதான்.

இந்தப் பிரச்னையில் அபிப்பிராய பேதம் கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாமல் காங்கிரஸில் ஈடுபட்டிருக்கும் இருதரப்புக்காரர்களையும் தேர்தலில் பேதமின்றிக் காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்ந்

தெடுக்க வேண்டும். கழகத்தாரைப் பொருட்படுத்தாமல் இவ்வாறு செய்வதே கழகக் கும்பல்களைத் தோற்கடிக்கும் வழியாகும். இல்லாவிடில் சென்ற குடியாத்தம் தேர்தலில் ஏற்பட்ட குழப்பம் மறுபடியும் எல்லா விடங்களிலும் ஏற்படும்.

'அயோக்கியர்கள்' என்று பட்டம் பெற்றவர்களை நீக்கி, பொதுஜனங்கள் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு, இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று காங்கிரஸ்காரர்களில் வேறுபடுத்தாமல் யோக்கியர்களைத் தேர்ந்தெடுத்து நிறுத்தினால் வெற்றி நிச்சயம்.

அமெரிக்கா எங்கே போகிறது?

ருஷ்யா கம்யூனிஸ்டுகள் தங்களுடைய பழைய கொள்கைகளையும் முறைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக விட்டுக் கொடுத்து வருகிறார்கள். மற்ற நாடுகளுடன் சிநேகமாகவும் யுத்த தளவாடப் போட்டியின்றியும் வாழ விரும்புவதாக வாயாரச் சொல்லுகிறார்கள். அதற்கேற்பக் காரியத்திலும் செய்து காட்டி வருகிறார்கள். ஆனால் நம் நண்பர்களாகிய மேற்கத்தியார் இந்த மாறுதலை வரவேற்கவே விரும்பவில்லை. மாறுதலைப் பார்க்கவே பிடிக்கவில்லை. 'அவர்கள் கெட்டவர்கள், நாம் நல்லவர்கள்' என்று சொல்லிக் கொள்ள இடமில்லாமல் செய்து வருகிறார்களே என்று வருத்தப்படுகிறார்கள்.

ருஷ்யர்களின் நல்ல போக்கைக் கண்டு சந்தோஷப்படுவதற்குப் பதிலாக வருத்தப்படுகிறார்கள். தங்கள் மன வருத்தத்தை ஏளனம் செய்வதிலும் பரிகாசப் பேச்சிலும் மறைத்து மூடி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். முக்கியமாகத் தங்கள் நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

விஷ குண்டுகளை அடியோடு விலக்கிவிட வேண்டும்; பரீட்சார்த்தமாக நடத்தும் விஷ வெடிகளை உடனே நிறுத்திவிட வேண்டும் என்று ருஷ்ய சர்க்கார் சொல்கிறார்கள். அந்தப்படி எல்லா நாடுகளும் ஒப்புக்கொண்டு தீர்மானித்து விடலாம் என்கிறார்கள் ருஷ்யர்கள். எல்லா விஞ்ஞான நிபுணர்களும் 'இந்த வெடிகள் வேண்டாம்' என்கிறார்கள். இந்தியா, ஜப்பான் முதலிய ஆசியநாடுகளும் இவ்வாறே சொல்லுகிறார்கள். மேற்கத்தியார் அது முடியுமா என்று தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல. ''ஒரு கட்சியிலும் சேர நாங்கள் விரும்பவில்லை. தனித்து வாழ்வோம்'' என்று சொல்லுகிறவர்கள் சுத்த மூர்க்கர்கள், உலக நன்மைக்குத் துரோகம் விளைவிப்பவர்கள் என்று இந்தியாவையும் மற்ற நடுநிலைமை வகிக்கும் நாட்டினர்களையும் அமெரிக்கா ஏசுகிறது.

முக்தி நெறி அறியாத மூர்க்கர்களை என்ன சொல்வது? அத்தன்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய சித்த மலத்தைத் துடைத்தருள வேண்டும்.

''விஷ குண்டுகளைப் போட்டுத்தான் தீருவோம். வேறு யார் பேரிலும் விழாது. விரோதிகளின் தலைமேல்தான் விழும். நீங்கள் பயப்பட வேண்டாம். நாங்கள் அஸ்திரங்களை விசுவாமித்திரரிடம் கற்றுக் கொண்டிருக்கிறோம். குறி தவறாமல் செல்லும்'' என்று சொல்லுகிறார்கள். இதைப் பொய் என்று காட்டவே கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு அணு சக்தி ஆலையில் வெடி விபத்து ஒன்று நடந்தது. விபத்துகள் உண்டாகிய பிறகாவது ஞானத்தைப் பெறுவார்களா? ஆண்டவன் சித்தத்தை யார் அறிவார்கள்!

மொத்தத்தில், போகும் போக்கைப் பார்த்தால், அமெரிக்கா உலகத்தினின்றே தனிப்பட்டுப் போகும்போல் தோன்றுகிறது.

தமிழர்களுக்குப் புதிய சோதனை

இந்தியாவில் சமீப காலம் வரையில் தீண்டாமை எவ்வளவு கடுமையாயிருந்து வந்ததோ அதே போன்ற நிலைமை இப்பொழுது யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் இருந்து வருகிறது. இந்த நிலைமையை பாஷை வெறியர்கள் சிலர் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். தீண்டத் தகாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சுமார் இரண்டு லட்சம் யாழ்ப்பாணத் தமிழர்களும் உண்மையில் ஆதிச் சிங்களவர்களென்றும், அவர்களைப் பிறகு குடியேறிய தமிழர்கள் அடக்கி ஒடுக்கிச் சகல உரிமைகளையும் பறித்துப் படுமோசமான நிலைமையில் வைத்திருப்பதாயும் ஒரு சிங்கள அங்கத்தினர் இலங்கைப் பார்லிமெண்டில் சொன்னார். தாழ்த்தப்பட்ட இந்த இரண்டு லட்சம் தமிழர்களும் சிங்களத்தை ஆதரித்தால் அவர்களுக்குச் சகல உரிமைகளும் கிடைக்குமென்று விஷமப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட நிலைமையிலிருக்கும் தமிழ் மக்கள் அமைதியாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்து கொண்டு வருகிறார்கள். பாஷை வெறியர்களின் ஆசை வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துத் தங்களுடைய தாய் பாஷையான தமிழ் மொழியைத் துறந்து விட அவர்கள் தயாராயில்லை. அதே சமயம் ஆலயப் பிரவேசம் போன்ற தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு ஜாதி இந்துக்கள் இணங்காவிடில் விரிவான முறையில் சத்தியாக்கிரகம் செய்வதற்கும் அவர்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தாமலே அவர்களுடைய கோரிக்கைகள் விரைவில் நிறைவேறி, அவர்கள் மற்றத் தமிழர்களுடன் ஐக்கிய மடையும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்பதற்கான அறிகுறிகள் தோன்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

என்ன செய்தி?

பூதானமும் பொதுஉடைமையும்

காங்கிரஸ்வாதிகளில் பலர் பூதானப் பணியில் ஈடுபட்டிருப்பதால் அடுத்த தேர்தலில் காங்கிரஸின் செல்வாக்கு பெருகலாம் என்பதை உணர்ந்து கம்யூனிஸ்டுகள் ஒருவிசித்திரமான பிரசாரத்தில் இறங்கி யிருக்கிறார்கள். தங்கள் கொள்கைக்கும் பூதானத்துக்கும் வேற்றுமை யில்லை என்று அவர்கள் கூறத் தொடங்கி யிருக்கிறார்கள். இந்தக் கூத்து வெறும் கேலிக் கூத்து என்ற உண்மையை விநோபாஜி சுட்டிக் காட்டியிருக்கிறார். பூதானத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை; சட்ட சம்மதமான திருமணத்துக்கும் கள்ளக் கடத்தலுக்கும் எவ்வளவு வேற்றுமை உண்டோ, அவ்வளவு வேற்றுமை பூதானத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் இருக்கிறது என்பதை ஐயம்திரிபுக்கு இடமின்றி விளக்கியிருக்கிறார்.

சட்டத்தின் உதவி கொண்டு நிலச் சீர்திருத்தம் செய்வதையே விநோபாஜி விரும்பவில்லை. அப்படியிருக்க, தனிப்பட்டோர் சொத்துகளைப் பலவந்தமாகப் பறிமுதல் செய்ய விரும்பும் கம்யூனிஸ்டுகள் பூதான இயக்கத்துக்கும் தங்கள் கொள்கைக்கும் வேற்றுமை இல்லை என்று கூறுவது விந்தையல்லவா!

பீதி ஒழிய ஒரே வழி

லண்டன் மாநகரில் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த சுமார் அறுபது கோடி மக்களின் பிரதிநிதிகளான காமன்வெல்த் பிரதமர்கள் செய்துள்ள முடிவுகளை உலக மக்கள் ஆர்வத்துடன் கவனிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

உலக மக்கள் பெரும்பாலோர் வாழும் ஆசிய நாடுகளை அனுசரித்துப் போக வேண்டும் என்ற எண்ணம் பிரிட்டனிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் வலுப்பெற்று வருகிறது. எனவே, இந் நிலையில் மகாநாட்டின் முடிவுகள் குறிப்பாக ஆசியா மக்கள் வரவேற்கத்தக்க முறையில் அமைந்திருக்கின்றன. ஏன், உலக சமாதானத்தில் ஆர்வம் கொண்ட சகலருமே போற்றத் தக்க முறையில் காமன்வெல்த் பிரதமர்களின் அறிக்கை அமைந்திருக்கிறது எனலாம்.

காமன்வெல்த் பிரதமர்கள், ருஷ்யாவின் மனமாற்றத்தை அமெரிக்கத் தலைவர்களைப் போல் வெறும் வேஷம் என்று தள்ளி விடாமல், ருஷ்யா தன் ராணுவத்தைக் குறைத்துக் கொள்ளத் தீர்மானித்திருப்பதைப் பாராட்டியிருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் நல்லுறவை அபிவிருத்தி செய்து கொள்ள ருஷ்யா முன் வந்திருப்பதையும் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். ருஷ்யாவுக்கும் மற்றப் பெரிய வல்லரசுகளுக்கும் நட்பு ஏற்படுமாயின், உலகத்தில் யுத்த பீதி ஒழிந்து, உலக சமாதானம் ஏற்படுவதற்கு நிச்சயம் வழி உண்டாகும் என்றும் காமன்வெல்த் மாநாட்டு அறிக்கை கூறுகிறது. அதாவது அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் நட்பு ஏற்படுமாயின் அணுகுண்டு, ஜலஜ குண்டு யுத்த பீதி ஒழிந்து விடும் என்பதையே காமன்வெல்த் பிரமுகர்கள் அவ்விதம் மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.


நேருஜியைத் தலைவராகக் கொண்ட பாரத நாட்டின் கொள்கைகளே காமன்வெல்த் மகாநாட்டின் அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன. அதே சமயம் நேருஜியின் தியாகம், தொண்டு, வெற்றி, அஞ்சாமை, துவேஷமின்மை, ராஜதந்திரம், ஜனநாயகப் பற்று முதலிய குணாதிசயங்களைப் பாராட்டி லண்டன் மேயர் நேருஜிக்கு லண்டன் நகர சுதந்திரப் பிரஜை என்ற பட்டம் அளித்து, நமது தலைவரைக் கௌரவித்திருக்கிறார். இவை யெல்லாம் பாரத மக்கள் பெருமை யடைய வேண்டிய விஷயங்கள் அல்லவா?

சைப்ரஸ் விஷயம்

'துருக்கி ஒப்புக் கொள்ள வில்லை. ஆகையினால் சைப்ரஸை விடமுடியாது' என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தீர்மானித்து விட்டார்கள். இந்தியாவில் கிளப்பிய ஆட்சேபணைகளும் இதைப் போன்ற ஆட்சேபணைகள்தான். சைப்ரஸில் உள்ள பழைய குடிகள் முக்கால் பங்கு கிரேக்க இனத்தார்கள். சிறு அளவில் முஸல்மான்களும் இருக்கிறார்கள். இதனால் என்றென்றைக்கும் அந்நிய ஆதிக்கமே கதி என்று முடிவு கட்டலாமா? துருக்கி அரசாங்கத்தினுடைய ஆட்சேபணையை இப்போது கொண்டு வந்து புகுத்தியிருக்கிறார்கள். இதனால் அந்தத் தீவில் நல்வாழ்க்கை கெட்டுப் போய் வேற்றுமையும் பகைமையும்தான் விளையும்.

சுதந்திர இயக்கங்களை இம்மாதிரி அடக்கி, அந்நிய ஆட்சியை நீடித்து

பசுவின் கதி!



''பண மூட்டைகளை' ஆதரிப்பதாகக் காங்கிரஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டுவது எதிரிகளின் தேர்தல் வித்தை!'' என்று சமீபத்தில் திரு காமராஜர் கூறினார்.

பண மூட்டைகளாயினும் அன்னக் காவடிகளாயினும் பால் கறக்கத்தான் வருகிறார்கள். தீனி போடுவார் இல்லை.

வந்த முறை தீர்ந்துபோனதாக எண்ணினோம். இன்னும் சில நாள் நீடிக்கும் போலிருக்கிறது!

ஆத்திரப் பேச்சு

பாகிஸ்தான் முதன் மந்திரி முகமத் அலி லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் மகாநாட்டில் மீண்டும் காஷ்மீர் பிரச்னையை எழுப்பிக் குட்டையைக் குழப்பப் பார்த்தார்.

முன்னம் நடைபெற்ற ஸீட்டோ மகாநாட்டிலும் பாக்தாத் மகாநாட்டிலும், சம்பந்தமில்லாமல் காஷ்மீர் பிரச்னையை எழுப்பி வேடிக்கை பார்த்த முகமத் அலி, இம்முறை படு தோல்வியடைந்தார். லண்டனில் இருந்த பத்து நாட்களும் ஒவ்வொரு மந்திரியாகப் பேட்டி கண்டு எப்படியாகிலும் காஷ்மீர் பிரச்னையைக் கிளப்புவது என்று தீர்மானித்த முகமதலியின் முயற்சி வெற்றி பெறவில்லை; காமன்வெல்த் மந்திரிகள் அனைவரும் நேருவுக்கும், இந்தியாவுக்கும் மனக் கசப்பை யுண்டாக்கக் கூடிய எந்தக் காரியமும் செய்ய விரும்பவில்லை.

லண்டனில் தோல்வியுற்றுத் திரும்பிய முகமதலி, தமக்கு காமன்வெல்த் மகாநாட்டில் செல்வாக்கு இல்லாமல் போனதற்குக் காரணம் தம் உடன் இருக்கும் லீக் கட்சியினர் தமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததே என்று எரிந்து விழுந்திருக்கிறார். அந்த ஆத்திரத்தில் ஒரு புதுக் கட்சியே ஆரம்பிக்கப் போவதாக லண்டனில் சொல்லியிருக்கிறார். பாகிஸ்தானை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!

நிறவெறியின் விளை

நமது உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கென்யா தலைநகரான நைரோபிக்கு விஜயம் செய்கையில் அவரைக் குதூகலமாக வரவேற்கும் நோக்கத்துடன் அந்நகரின் தெருக்களை அலங்காரம் செய்ய வேண்டும் என்று பலரும்

யோசனை கூறினார்கள். ஆனால் அந்த யோசனையை, வெள்ளையரின் பெரும்பான்மை வோட்டைக் கொண்டு நைரோபி நகர சபை நிராகரித்து விட்டது. ஜனத்தொகை, செல்வாக்கு, உயர்ந்த கொள்கை முதலிய சகல அம்சங்களிலும் உலகிலே முன்னணியில் நிற்கும் பாரத நாட்டின் உதவி ஜனாதிபதியைக் கௌரவிப்பது தங்களைத் தாங்களே கௌரவித்துக் கொள்வதாகும் என்ற சிறந்த சம்பிரதாயத்தை நைரோபி நகரசபைப் பிரதிநிதிகள் அறிந்து கொள்ளாதது வருந்தத்தக்கது.

அத்தகைய முடிவினால் அவர்கள் தங்கள் அற்ப புத்தியையும் நிறவெறியையும் துவேஷ மனப்பான்மையையும் விளம்பரப் படுத்திக் கொண்டதைத் தவிர வேறு ஒரு பலனும் இல்லை.

புகாருக்கு இடமில்லை

பாலாற்று நீர் சம்பந்தமாக மைசூர் ராஜ்ய சர்க்காருக்கும் சென்னை ராஜ்ய சர்க்காருக்கும் இடையே 1882-ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தை மீறி மைசூர் சர்க்கார் பாலாற்று நீரைக் கோலார் பிரதேசத்தில் உபயோகித்து வருவதாகவும் அதனால் சென்னை சர்க்காருக்குப் பாலாற்றுத் தண்ணீர் கிடைப்பதில்லை என்றும் நீண்ட காலமாகவே ஒரு புகார் இருந்து வருகிறது. இப்போது இந்த விவகாரத்தில் மத்திய சர்க்கார் தலையிட்டுப் புகாருக்கு நியாயமில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் நீர்விசைக் கமிஷனரும், மைசூர், சென்னை ராஜ்ய என்ஜினீயர்களும் கோலார் ராமசமுத்திரம் பிரதேசத்தை நேரில் பார்வையிட்டுப் புகாருக்கு நியாயமில்லை என்று கூறி விட்டார்கள். அப்படியானால் பாலாற்று நீர் எங்கே போயிற்று என்ற கேள்வி எழுகிறது. ஆயினும் இத்தகைய புகார்களுக்கு இனி இடமில்லாதபடி செய்து மேற் கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி மூன்று சர்க்கார்களும் யோசனை கூறியிருக்கிறார்கள்.

இறைவன் அருளால் நிறைய மழை பெய்து பாலாற்றின் இரு கரையும் பெருக வேண்டும் என்பதுதான் அந்த யோசனையாயிருக்குமோ!

பனித்துளி

“அணுகுண்டு போட்ட பிறகு ஜப்பானியச் சிறுவன் ஒருவனுக்கு இரத்த சோகை பீடித்திருக்கிறது.” —செய்தி

போட்ட பிறகு என்ன? அணுகுண்டு விழப்போகிறது என்றாலே நமக்கெல்லாம் இரத்த சோகை பீடித்து விடுமே!

★

“ஸ்ரீ நடராஜர் கோயில் ஆயிரக்கால் மண்டபத் திருப்பணி ஆரம்பமாகி விட்டது. வேலை முடிவதற்குக் குறித்த காலத்துக்கு மேல் ஆனாலும் ஆகலாம்.” —செய்தி

ஆயிரக்கால் மண்டப வேலை ஒரு கால் தாமதமானாலும் பரவாயில்லை!

★

“தமது குறை தீர்க்கப்படும் என்று மேயர் உறுதி அளிக்கும் வரை தாம் நின்று கொண்டே ஸ்டிரைக் செய்யப் போவதாக ஒரு நாகபுரி கார்ப்பொரேஷன் அங்கத்தினர் கூறினர்.” -செய்தி

மேற்படி அங்கத்தினர் ஒருவேளை சென்னை நகர பஸ் ஸ்டாப்பில் நின்று நின்று பழக்கமானவராயிருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம்!

“மின்சாரத்தால் கருவி இயங்கக் கூடிய தம்புரா ஒன்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.” —செய்தி

கச்சேரியின் சாரமான கட்டத்தில் மின்சாரம் தகராறு செய்யாமல் இருக்க வேண்டுமே!

★

“சர்க்கார் சப்ளை செய்துள்ள அரிசி பார்ப்பதற்கும் சமையல் செய்வதற்கும் நன்றாக இருக்கிறதென்று டி. யு. ஸி. எஸ். காரியதரிசி அறிவிக்கிறார்.” —செய்தி

வாஸ்தவம்தான்: சாப்பிடுவதற்குத் தான் நன்றாயில்லை!

★

“காஷ்மீரில் இப்போது பாக்கிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதியை அப்படியே விட்டு விடுவதாக இந்தியா கூறியும் பாக்கிஸ்தான் சர்க்கார் அதற்குச் சம்மதிக்க வில்லை.” —செய்தி

எவ்வளவு விட்டுக் கொடுத்தாலும் பாக்கியையும் கொடு என்று கேட்கும் புத்திபடைத்ததால்தான் மேற்படி சர்க்காருக்குப் ‘பாக்கிஸ்தான்’ சர்க்கார் என்று பெயர் வைத்தார்களோ?



எக்லா
தென் இந்தியா
விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க
தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப்போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண கால நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம். மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால் குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
காலஸ்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE

கடல் கண்ட கனவு



அத்தியாயம் 15

மறைந்த இருவர்

கொடும்பாளூர்க் கானகத்தின் கோவிலிலே இருண்ட இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு குதிரைகளின் காலடி ஓசை கேட்டது.

பத்து, இருபது, முப்பது, நாற்பது என்று வரிசை வரிசையாக நூறு குதிரைகள் 'பட பட' என்று நெரிந்து கொண்டு சென்றன — நூறு குதிரைகள்! இந்த நூறு குதிரைகளிலும் ஈட்டியும், கேடயமும், உடைவாளும் தாங்கிய வீரர்கள் எந்த வினாடியும் சண்டைக்கு ஆயத்தமாக இருப்பவர்களைப் போலக் கண்ணும் காதும் கூர்மைப் படுத்திக் கொண்டு செல்கிறார்கள். இந்த நூறு குதிரைகளுக்கும் மத்தியில் உயரமான வெள்ளைக் குதிரை ஒன்றிலே உதய சந்திரன் செல்கிறார்.

குதிரைகள் காற்றாகப் பறந்து கானகத்தின் கோவிலை வளைத்து நின்றன. மறு வினாடி மட மட என்று வீரர்கள் குதிரையிலிருந்து கீழ் இறங்குகிறார்கள். நூறு குதிரை வீரர்களும் கோவிலுக்குள் நுழைய முயலும்போது உதய சந்திரன் ஏதோ ஓர் அடையாள ஓசையை எழுப்புகிறார். உடனே தென்னைமரத்திலிருந்து தேங்காய் விழுவது



சோமு

போல, கானகத்தின் மரங்களிலிருந்து 'தொப்' 'தொப்' என்று இருபது முப்பது மனிதர்கள் — முரடர்கள் — கையிலே கோல் தாங்கியவர்களாகக் குதிக்கிறார்கள். அந்தக் கோலின் நுனிகளில் துணி சுற்றியிருக்கிறது.

"ஏற்றுங்கள் தீவட்டியை!" என்று உத்தரவிடுகிறார் உதய சந்திரன்.

கொடும்பாளூர்க் கோயிலைச் சுற்றித் திடீர் என்று நடு ஜாமத்தில் வெயில் காய்வது போல அத்தனை பிரகாசத்தோடு தீவட்டிகள் வெளிச்சம் வீசுகின்றன. அந்தத் தீவட்டிகள் நூறு வீரர்களுக்கும் பாதையைக் காட்டுகின்றன.

நூறு வீரர்களில் ஐம்பது பேர்கள் மட்டும் கோவிலுக்குள் நுழைகிறார்கள். சில தீவட்டிகள் அவர்களோடு செல்கின்றன.

வீரர்களைப் பின் தொடர்ந்து செல்கிறோம். அவர்கள் அதே பிராகாரத்தில் நுழைந்து குகை மண்டபத்துக்குச்செல்லும் வாசலில் செல்கிறார்கள்.

பயங்கரமான ஈட்டிகளும், விஷம் தடவிய வாள்களும், கேடயங்களோடு மோதுகின்றன.

"பிடி! விடாதே! வளைத்து மடக்கு!" என்று உத்தரவுகள் பிறக்கின்றன.

தீவட்டிகளின் வெளிச்சத்தில் ஈட்டிகள் மோதுகின்றன. வாள்கள் பளீர்



பளீர் என்று மின்னல் வீசுகின்றன. மாமல்லபுரத்து விடுதித் தலைவனோடு வந்த முரடர்களும், அவனுடைய கூட்டாளிகளும் வளைக்கப்பட்டு விட்டார்கள்.

பயங்கரமான சண்டை நடக்கிறது. மயக்கம் போட்டு விழுந்த அந்த ஐந்தாவது மனிதரின் உடம்பை ஒரு படியின்மேல் கிடத்தியிருக்கிறார்கள். வீரர்கள் ஒருவரோடு ஒருவர் மோதி, தலைகள் உருளுகிற சமயத்தில் வாளைச் சுழற்றியவாறு பாய்ந்த உதயசந்திரன் நேரே அந்த ஐந்தாவது மனிதரின் உடம்பைக் கிடத்தியிருந்த படிக்கு அருகே சாடுகிறார். மயங்கிக் கிடக்கும் அந்த வீரரை லாகவமாகத் தமது இடது கரத்திலே ஏந்தித் தூக்குகிறார். கேடயத்தையும் வாளை





யும் சுருளிகளைப் போல வீசிக்கொண்டே அந்தக் களத்திலிருந்து வெளியேறி, இரகசிய வாசலிலே வந்து, அதில் பக்குவமாக நுழைகிறார். மிகவும் கவனமாக அந்த வீரரின் உடம்பைத் தன் மேனியிலே சாய்த்தவாறு பிராகாரத்துக்குக் கொண்டு வருகிறார். இப்பொழுது அவரைச் சுற்றி அவருடைய வீரர்களில் நான்கு பேர் அவருக்குக் காவல் செய்தவாறு வளையமாக வகுத்துக் கொண்டு நடக்கிறார்கள். உதய சந்திரன் கோயிலின் வெளியே வந்ததும், அவர் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வீரன் அருகிலே ஓடி வந்து மயங்கிக் கிடக்கும் உடம்பைத் தனது கைகளிலே ஏந்திக்கொள்கிறான். மீண்டும் அடையாள ஓசை எழுப்புகிறார் உதயசந்திரன். பிராகாரத்திலிருந்து அவருடைய வீரர்கள் வெளியே வருகிறார்கள். கையும் காலும் கட்டப்பட்ட நான்கு மனிதர்களோடு உதயசந்திரனின் வீரர்கள், அவரை நோக்கிச் சாடி வருகிறார்கள்.

“எல்லாரும் தீர்ந்தார்களா?” என்று கேட்கிறார் உதயசந்திரன்.

“ஆமாம், ஆனால்......” என்று தயங்குகிறான் தளபதி.

“ஆனால் விடுதித் தலைவனையும், சித்திரமாயனையும் தவிர! அப்படித்தானே?” என்று கேட்கிறார் உதயசந்திரன்.

“ஆமாம்” என்ற பாவனையில் அந்த வார்த்தைகளை மறுத்துச் சொல்லாமல், பயத்தோடு நிற்கிறான் தளபதி.

“சரி, கவலையில்லை. இந்த இரகசிய மண்டபத்திலிருந்து இன்னொரு கிளைப் பாதை செல்கிறது என்று எனக்குத் தெரியும். பிறகு பார்த்துக் கொள்ளுவோம், அந்த இருவரையும். இப்பொழுது இந்த நான்கு மனிதர்களையும் உயிருக்குச் சேதம் இல்லாமல் கொண்டு செல்லுங்கள்!” என்று உதயசந்திரன் உத்தரவிடுகிறார்.



மயக்கம் போட்டு விழுந்த ஐந்தாவது மனிதரைத் தவிர, மற்ற நான்கு பேரும் கையும் காலும் கட்டப்பட்டு இருக்கிறார்கள் அல்லவா? அவர்களை நான்கு வீரர்கள் சேர்ந்து நான்கு குதிரைகளில் ஏற்றுகிறார்கள். அடுத்த கணம் நான்கு பேரும் தாங்களும் குதிரைகளில் ஏறிக் கொள்கிறார்கள்.

“நீங்கள் செல்லலாம், உங்களுடைய துணைகளோடு!” என்று கட்டளையிடுகிறார் உதயசந்திரன்.

நூறு குதிரை வீரர்களில் ஐம்பது பேர் அங்கிருந்து புறப்படுகிறார்கள். மற்ற ஐம்பது பேரும் உதயசந்திரனோடு நிற்கிறார்கள்.

“இந்த ஐந்தாவது மனிதர் மயக்கம் போட்டு விழுந்து இருப்பதால் இவரை மிகவும் கவனமாகக் கொண்டு செல்ல வேண்டும். அந்தப் பொறுப்பு என்னுடையது. இவரை என்னுடைய குதிரையில் ஏற்றி வையுங்கள்!”

மின்னல் வேகத்தில் உத்தரவுகள் வருகின்றன. மின்னல் வேகத்திலேயே அந்த உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள் வீரர்கள்.


“திவட்டிகள் அணையலாம்!”

இந்த உத்தரவு வந்ததும், கொடும்பாளூர்க் கானகம் மறுபடியும் இருளிலே மூழ்கிக் குளிக்கிறது.

குதிரைகளின் குளம்போசை கேட்கிறது. முதலிலே சென்ற ஐம்பது வீரர்கள் வலதுபுறம் திரும்பிச் சென்றார்கள். மற்ற ஐம்பது வீரரும் இடதுபுறமாகத் திரும்புகிறார்கள், உதயசந்திரனின் தலைமையிலே.

“நாம் இப்பொழுது தஞ்சாவூர்ச் சாலையிலே செல்கிறோம்” என்கிறார்.

கொடும்பாளூர் நகரத்தைத்தாண்டி உதயசந்திரனும், அவரோடு அந்த ஐந்தாவது வீரரின் மயங்கிய சரீரமும்,


பேனாக்களில் முன்னணியில் நிற்பது....
இந்தப் பேனாக்கள்
தலைசிறந்தது
எனப் புகழ்பெற்றவை
இணையற்ற மதிப்பும்
வாய்ந்தவை
Mercury
RAJA
Renault
மெர்க்குரி
ரூ. 6/-
ராஜா
ரூ. 4/4
ரெனால்ட்
ரூ. 3/12
பி. ரமண்லால் & கோ.,
பம்பாய்-3
தயாரிப்பாளர்கள்:
பிரகாஷ் மெட்டல் ஒர்க்ஸ்
பம்பாய்-4


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது சொத்தையும்
மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள்
அவை
COLGATE
COLGATE
RIBBON DENTAL CREAM

'வெயிற்காலத்து வயிற்றுக் கோளாறுகளை' தளதளக்கும் பானம் நிறுத்துகிறது



வெயிற்காலத்தில் உங்கள் வயிறு மிகச் சுலபமாகக் கெட்டுவிடுகிறது. குளுமையான தளதளக்கும் ஒரு கிளாஸ் ஈனோ வயிற்றுக் கோளாறுகளை சமாளித்து உங்கள் தேக ஆரோக்யத்தைச் சீராக்குகிறது. ஈனோ எளிமையானது எனினும் அற்புத சக்தி வாய்ந்தது: விரைவில் புளிப்பு மிகுதியாலுள்ள அஜீர்ணம், 'நெஞ்செரிச்சல்' வாயுப் பொருமல் முதலியவற்றை நிச்சயமாக நிவர்த்திக்கிறது. உங்களுக்கு பேதியாக வேண்டுமென்று விரும்பினால் காலி வயிற்றில் கொஞ்சம் பெரிய 'டோஸ்' உட்கொள்ளவும்.

மிகக் குளுமையானது,
புத்துணர்ச்சியளிப்பது!

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

'ஈனோ' மற்றும் 'ப்ருட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ட்ரேட் மார்க்குகள்.
ENO, 1709 A (Tam.)

இவர்களைச் சுற்றி ஐம்பது படை வீரர்களும், செல்கிறார்கள். அமாவாசையின் இருட்டிலே கொடும்பாளூர் அரண்மனையைக் கடந்து அப்பாடி ஒரு குதிரைப் படை செல்வது இது வரை இல்லாத ஒரு புதிய சம்பவம்! இந்த ஒரு சம்பவம் பிற்காலத்தில் தமிழ் நாட்டின் சரித்திரத்திலேயே எத்தனை பெரிய மாறுதலை உண்டாக்கி விட்டது என்பதைப் புகழ் பெற்ற கல் வெட்டுக்கள் அதிசயத்தோடு பேசிப் பேசி மகிழ்கின்றன.

எத்தனையோ நய வஞ்சகத்தோடு மாமல்லபுரத்து விடுதித் தலைவன், சித்திராங்க பூபதியைச் சூழ்ச்சி வலையிலே பிடித்தான். ஆதிரையன் தன்னுடைய பிடியிலிருந்து நழுவி விடுவானோ என்று சந்தேகித்து ஏதேதோ முன்னேற்பாடுகள் செய்தான். தெற்கு மண்டலங்களின் அதிபதிகளுடைய ஒத்தாசை வேண்டுமே என்று கருதிக் கானகக் கோவிலைச் சூழ்ச்சிக் கூடமாக மாற்றுவதற்கு முனைந்து நின்றான். ஆனால் அவன் எதிர்பார்த்த விஷயங்கள் எதிர்பார்த்த முறையில் நடவாதவாறு குழம்பியடித்த சம்பவம் இதுதான். இதுவே பிற்காலத்தில் உதய சந்திரனின் அரசியல் சாமர்த்தியத்துக்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்கியது!

அத்தியாயம் 16

நனவும் கனவும்

படிம விலாசத்துக்குள்ளே யாழ் நங்கை நுழைந்து வந்ததைக் கண்டதும் பூபதி பதறிப் போய் எழுந்தான். அவனுக்கு உடம்பெல்லாம் பனிக் கட்டியாக உறைந்தது. அந்த இளம் நங்கையை அவன் அந்த நேரத்தில் தன்னுடைய அறையில் எதிர் பார்க்கவேயில்லையல்லவா?

"ஏன் உங்களுக்கு உடம்பெல்லாம் இப்படிப் பதறுகிறது?" என்று கேட்டாள் நங்கை. இந்தக் கேள்விக்குப் பூபதி பதில் சொல்லவில்லை.

"நீங்கள் என்னை இந்த நேரத்தில் இங்கே எதிர்பார்க்கவில்லை. அப்படித்தானே?" என்று கேட்டாள் நங்கை மறுபடியும்.

"ஆமாம்" என்று சொன்ன பூபதி அதற்குமேல் என்ன சொல்வதென்று தெரியாமல் ஒரு விநாடி மிரள மிரள விழித்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, "பெரியம்மா அவர்கள் எங்கே? அந்தக் கிழவர் எங்கே? நீங்கள் மட்டும் இப்பொழுது இங்கே வந்திருக்கிறீர்களே!" என்றான் பூபதி.

"அவர்கள் எல்லாரும் வெளியே போயிருக்கிறார்கள். இந்தக் குங்கும மாளிகையில் அந்தச் செவிட்டுப் பணியாளன் சாத்தனைத் தவிர வேறு யாருமில்லை. அதனால்தான் இப்பொழுது இங்கே வந்தேன்."

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே? அவர்கள் எல்லாரும் எங்கே போய் விட்டார்கள்?" என்று பூபதி திகைப்போடு கேட்டான்.

"எங்கேயும் போய் விடவில்லை. அப்படி எங்கேயாவது போய்த் தொலைந்து விட்டால்தான் நல்லதே. அவர்கள் அரண்மனைக்குச் சென்றிருக்கிறார்கள். மறுபடியும் திரும்பி வந்து விடுவார்கள்!"

"அப்படியென்றால்?..."

"இன்றிரவு கொடும்பாளூர் அரச மாளிகையில் அம்மா யாழ் வாசிக்கிறாள். யாரோ விருந்தினர்கள் வந்திருக்கிறார்களாம். ஆதிரையரும் பெரியாழ் கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். அதனால் தான் இந்தக் கூத்து ஒரு வாரமாக இங்கே நடந்தது!"

"எந்தக் கூத்தைச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான் பூபதி.

"அழுகையும் விம்மலும்தான் சொல்லுகிறேன். உங்களுடைய அறையிலேயே கேட்டிருக்குமே!" என்று சொல்லும்போதே நங்கையின் கண்கள் கலங்கின. அவள் தொடர்ந்தாள்:

"ஐயா! என் வாழ்வே ஒரு விசித்திரம். சோகத்தில் எத்தனையோ வகை உண்டு. என்னுடைய சோகம் பிறர் நம்ப முடியாத ஒரு வினோதம். அந்த வினோதம் கடந்த ஒரு வாரமாக மிகவும் தீவிரமாக இருந்தது. இன்று ஒரு உச்ச நிலையை அடைந்தது—"

"அம்மா! நானும் இந்த மாளிகையில் தங்களுடைய யாழிசை நடந்த சமயத்தில் அதைக் கவனித்தேன். ஒலியிலும் இசையிலும் லயித்து நின்ற தங்கள் முகத்தில் ஒரு வேதனை மின்னல் போல் துவண்டதைக் கண்டேன். ஆனால் அதே சமயம் தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை மிகவும் கஷ்டப்பட்டு அடக்க முயற்சிக்கிறேன். தங்களுடைய வேதனையைக் கண்டதும் என் உள்ளத்தில் உண்டாகிற சஞ்சலத்தை அறவே என் நினைவிலிருந்து நீக்கி விடுவதற்குத்தான் கடந்த ஒரு வாரமாக நான் பாடுபடுகிறேன். ஆனாலும் இரவு நேரங்களில் நிசப்தமான வேளைகளில் மாளிகையின் கீழ் அறைகளிலிருந்து நெஞ்சை ஊடுருவுகிற விம்மல் கேட்கிறது. தாங்களும் தங்கள் தாயாரும் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துப் பலமாகத் தர்க்கம் செய்வதும், அதன் பயனாகத் தாங்கள் வேதனைப்பட்டு வெதும்பி அழுவதும் என் செவியிலே கேட்கிறது. ஆனால் அந்த நேரத்தில் எல்லாம் என்னுடைய உள்ளத்தை மிகவும் கஷ்டப்பட்டுக் கல்லாக்கிக் கொள்ளுகிறேன்!"

இப்படிச் சொன்னபோது பூபதியின் கண்களும் கலங்கின.

"ஐயா! உங்களைப் பார்த்த வினாடியிலிருந்து, ஏனோ என் உள்ளத்தின் வேதனையை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. அதன் காரணம் எனக்கே தெரியவில்லை. ஆனால் இப்பொழுது நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அத்தகைய வாய்ப்பு எனக்குக் கிட்டாது என்று தெரிகிறது. என்னுடைய துக்கத்தைத் தெரிந்து கொள்வதில் உங்களுக்கு ஏதோ தடையிருப்பதாகத் தெரிந்த பிறகும்கூட, அதை உங்களிடம் வெளியிட முனைந்தேனானால் அது பெரும் பிசகு. வாழ்வில் இது வரை உள்ளத்துக்குள்ளேயே வைத்து வைத்துப் பொருமுகிற அந்த வேதனையை இனியும் உள்ளத்திலேயே வைத்துப் பூட்டி விடுகிறேன். இந்த உடம்பு இந்தப் பூமியிலே நடமாடுகிற வரை என் உள்ளம் பூட்டியே இருக்க வேண்டியதுதான். என்றைக்கு இந்த உயிர் இந்த உடலின் பூட்டைத் திறந்துகொண்டு வெளியேறுகிறதோ அன்றைக்கு இந்த வேதனைக்கும் விடுதலை கிடைத்து விடுமல்லவா?" என்றாள் நங்கை.

அவளுடைய கண்களில் சோகத்தின் துளிகள், இரண்டு விழியின் மத்தியிலே பொங்கித் துடி துடித்துக் கொண்டு நின்றன.

"அம்மா! வருத்தப்படாதீர்கள். தங்களுடைய துக்கத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் என்னையும் மீறுகிறது. தங்களைப் பார்த்தது முதல் இன்னவென்று சொல்ல முடியாத ஒரு அன்பு தங்களிடத்தில் எனக்கு ஏற்பட்டுவிட்டது. முன் எப்பொழுதோ எங்கோ உங்களைப் பார்த்திருப்பது போலவும், பிறகு எங்கோ மீண்டும் சந்தித்து இருவரும் நன்றாகப் பழகியது போலவும் — எல்லாம் ஓர் அர்த்தமற்ற உணர்ச்சி என் இதயத்தில் உண்டாகிறது!" என்றான் பூபதி.


"அர்த்தமற்ற உணர்ச்சி என்று சொல்லாதீர்கள். அர்த்தமற்ற உணர்ச்சி என்றால், எனக்கும் அதே உணர்ச்சி ஏன் ஏற்பட வேண்டும்? இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி எண்ணம் ஒரே சமயத்தில் ஏற்பட வேண்டும் என்றால், அதில் ஏதோ அர்த்தம் இருக்கிறது என்றுதானே அர்த்தம்!"

இப்படிச் சொல்லும்போது நங்கை பரவசத்தோடு மலர்ந்து சிரித்து விட்டாள். பூபதிக்கும் அந்தச் சிரிப்பைப் பார்த்ததும் ஒரு உல்லாசம் வந்து சிரிப்பாக உதிர்ந்தது!

"ஐயா! என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை நீங்கள் ஏன் அத்தனை கஷ்டப்பட்டு அடக்க வேண்டும்? அதைச் சொல்லலாமா என்னிடம்?" என்று நங்கை கேட்டாள்.

"அம்மா! அது ஒரு பெரிய இரகசியம். ஆனாலும் உங்களிடம் அதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சொல்லுகிறேன். நீங்களும் அதை இரகசியமாகவே வைத்துக் கொள்ளுங்கள்." இப்படி ஒரு பீடிகை போட்டுக் கொண்டு பேச ஆரம்பித்தான் பூபதி.

"அம்மா, நான் வலம்புரித் தீவிலிருந்து புறப்பட்ட போது, என் அன்னை எனக்கு மூன்று கட்டளைகள் இட்டிருக்கிறாள். எது எப்படியானு



B T-H
மாஸ்டா
ப்ளோரெஸென்ட்
பல்புகள்
பிரகாசம் அதிகம்
நீடித்து உழைக்கும்
அஸோஸியேடட் எலக்டிரிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா, பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா பம்பாய்
புது டில்லி மதராஸ்
பெங்களூர் கோயமுத்தூர்
நாகபுரி
AIX 132 TH


என் சாண் உடம்பிற்கு
சிரஸே பிரதானம்
குளிர்ச்சி
நறுமணம் மற்றும்
கேச சிங்காரம்
டி.எஸ்.ஆர்
★ சந்தனாதித் தைலம்
★ அரகஜா
★ அரைக்கீரை விதைத் தைலம்
★ கோகுல் ஹேர் ஆயில்
டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்
சென்னை நகருக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் : ராஜ் ஏஜென்ஸிஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு ○ கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டு: B. பாலபட்டாபி, (ஸ்தாபிதம் 1932), வைசியாள் தெரு, கோயமுத்தூர்
கல்கத்தாவில் கிடைக்குமிடம் : கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, லான்ஸ் டவுன் ரோடு, கல்கத்தா - 26

னும் அந்த மூன்று கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டியது என்னுடைய முழு முதற் கடமை!''

இப்படிப் பேசத் தொடங்கிய சித்திராங்கன், உணர்ச்சியின் வசமாகி 'படபட' என்று எல்லா விஷயங்களையும் ஒரு ரதத்தின் வேகத்தில் சொல்லி முடித்தான். வலம்புரித் தீவில் காவல் தெய்வம் வடித்த கண்ணீரைப் பற்றியும், தான் அந்த நிலவுப் பாறையிலே கண்ட அதிசயக் காட்சியையும், மந்திர நாயகம் தன்னிடம் கூறிய விவரங்களையும் பூபதி நங்கையிடம் சொன்னான். பேரியாழ் என்ற அதிசயமான வாத்தியத்தைத் தன்னுடைய வலம்புரித் தீவுக்குக் கொண்டு போக வேண்டிய கடமை தனக்கு இருக்கிறது என்பதையும், அந்தக் கடமையைச் செய்வதற்காகவேதான் கடல் கடந்து இத்தனை தொலை தூரம் தான் வந்திருப்பதாகவும் கூறியபோது பூபதிக்கு உணர்ச்சி பொங்கி வந்தது.

''ஐயா! நீங்கள் சொன்ன விவரங்களைத் தெரிந்து கொண்ட பிறகு, என் உள்ளத்தில் இப்பொழுது ஒரு தைரியம் உண்டாகியிருக்கிறது. உங்களுக்கு என்னிடம் பூரணமான அநுதாபம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டதில் எனக்கு ஏற்பட்டுள்ள நிம்மதியை எப்படிச் சொல்லுவேன்! உங்கள் மனத்தில் அந்தத் தந்தப் பேடகம் ஏதேதோ கலக்கங்களை உண்டாக்கியிருக்கிறது. சித்திரங்களிலே மதுவை ஊற்றுகிறவளும், நிலாவைக் காட்டுகிறவளும் இந்தப் பெண்ணாகவே இருந்துவிட்டால் எத்தனை பெரிய அபாயம் அது என்று அஞ்சுகிறீர்கள். அது உண்மைதான். ஆனால் ஆரம்பத்திலேயே உங்களிடம் ஒரு உறுதி கொடுக்கிறேன். நீங்கள் உங்களுடைய இலட்சியம் நிறைவேறி உங்களுடைய வலம்புரித் தீவுக்குத் திரும்பிச் செல்லுகிற வரையில் என்னால் தங்களுடைய இலட்சியத்துக்கு எந்தவிதமான இடையூறும் உண்டாகாது. ஆனால் ஒன்று. என்றாவது ஒரு நாள் வலம்புரித் தீவிலே தங்களுடைய அன்னை என்னை அழைத்து, நிலா முற்றத்திலே தங்களை அழைத்துச் சென்று தங்களுக்குப் பூரண சந்திரனின் எழிலைக் காட்டும்படி பணித்தால் தங்களுக்கு ஆட்சேபணை இராதே?''



பம்பாய் முருகப்பா & சன்ஸ், கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட்டின் மானேஜரான ஸ்ரீ ஆர். எச். அய்யர் அவர்கள் குமாரி சௌ. வசந்தாவுக்கும், பம்பாய் ஸ்டாண்டர்டு பாட்டரீஸ் லிமிடெட்டின் 'அனலிஸ்ட்' ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசன் பி. எஸ்ஸி.க்கும் நாகர்கோவிலில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க வசந்தா-சீனிவாசன்!

இந்த வார்த்தைகள் வந்ததும் பூபதி நிமிர்ந்து பார்த்தான். நங்கையின் விழிகளிலே அன்பும், பாசமும், மெய்ப்பாடும் அலை அலையாக வீசிக் கொண்டிருந்தன. கண்களின் வட்டத்திலே கண்ணீர் பொங்கி, அந்தப் படலத்தின் ஊடே அன்பின் ஒளி ஊடுருவிக் கொண்டு வந்தது. பூபதி அந்த விழிகளிலே தனது பார்வையை நிறுத்தினான்.

''அம்மா! என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ஏதோ ஒரு கனவு போல இருக்கிறது. ஆனால் கனவு என்றால் என்னையும் அறியாமல் அந்தக் கனவில் நானும் ஏதாவது பதில் சொல்லியிருப்பேன். இது நனவாக இருப்பதால் பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்.''

இப்படிப் பேசினான் சித்திராங்கன்.

''நீங்கள் பதில் சொல்ல வேண்டாம். உங்கள் பதிலை உங்களுக்கு முன்னால் உங்கள் விழி சொல்லி விட்டது. அந்த விழியின் மொழியைக் கேட்டு விட்டேன்!''

இப்படி நங்கை சொன்னதும் மீண்டும் அந்தப் படிம விலாசத்தில் அமைதி குடி கொண்டது. இப்பொழுது அந்த அமைதியான மௌனத்தைக் கலைத்துக் கொண்டு பூபதி பேசினான்:

"அம்மா! உங்களுடைய வேதனையைப் பற்றிக் குறிப்பிட்டீர்களே? அதைப் பற்றி இப்பொழுது தெரிந்து கொள்ளலாம் அல்லவா? என் ஆவலை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே!" என்றான் சித்திராங்கன்.

"தாராளமாகத் தெரிந்து கொள்ளலாம். தங்களிடம் சொல்லத்தானே இப்பொழுது இங்கே வந்தேன். ஆனால் ஒரே ஒரு கஷ்டம் அதில் இருக்கிறது" என்று சொல்லித் தயங்கினாள் நங்கை.

'அது என்ன?' என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் நங்கையின் முகத்தை நோக்கினான் சித்திராங்கன்.

"ஒரே ஒரு கஷ்டம் இருக்கிறது. என்னுடைய வேதனையைத் தெரிந்து கொண்டால், அந்த வேதனையிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும் என்று முயற்சிப்பீர்கள். அந்த முயற்சியினால் தங்களுடைய இலட்சியத்துக்கு இடையூறு வந்து சேரும். அதற்கு நான் இடம் கொடுக்கக் கூடாது. அந்த உறுதியை மட்டும் நீங்கள் எனக்குச் சொன்னால் போதும்!"

"அம்மா! நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே!" என்று குழம்பினான் பூபதி.

"அன்பரே! என்னுடைய வேதனை என்பது எனக்கும் என் அன்னைக்கும் உள்ள மனத் தாங்கல்தான். என்னுடைய எண்ணமும் நோக்கமும் வேறு. அவளுடைய எண்ணமும் நோக்கமும் வேறு. நான் இருக்கும் மன உலகம் வேறு. அவளுடைய உலகம் வேறு. இந்த இரண்டுக்கும் ஏற்படுகிற மோதல்களினால் என் உள்ளத்தில் புயல் அடித்துக் கொண்டிருக்கிறது. இந்த முறையில் என் வேதனையைத் தெரிந்து கொண்டு, நீங்கள் நிம்மதியாக இருக்கப் போவதில்லை. இங்கே அரசப் பிரதானிகளும், நகரப் பிரமுகர்களும், ராஜ தந்திரிகளும், மந்திரிகளும், சேனாபதிகளும் அடிக்கடி வருகிறார்கள். அன்னையின் செல்வாக்கு அபாரமானது. எனவே எனக்காக நீங்கள் பாடுபட்டு, என்னுடைய இலட்சியத்துக்கு உதவி செய்ய முனைந்து நின்று, அதனால் இத்தனை மனிதர்களுடைய பகையும் தங்களுக்கு ஏற்பட்டு விட்டால், தங்கள் இலட்சியம் என்ன ஆகும்? அதிலும் அந்த மாமல்லபுரத்து விடுதித் தலைவன் ஒருவனுடைய விரோதமே போதும். அவனுடைய சூழ்ச்சி ஒன்றே நம்மை அதல பாதாளத்தில் தள்ளி விடும். இந்த முறையில்—"

பூபதி குறுக்கிட்டான். இதுவரை அவனுடைய உள்ளத்திலே ஒதுங்கிக் கொண்டு கிடந்த வீரம் இப்பொழுது சீறிக் கொண்டு வந்தது.

"அம்மா! மீண்டும் அப்படிச் சொல்ல வேண்டாம். என்னுடைய இலட்சியம் இந்தப் பேரியாழ்தான். இப்பொழுது தங்களைச் சந்தித்த பிறகோ, பேரியாழோடு அந்த யாழிலே விளையாடுகிற விரல்களையுமே, அந்த மெல்லிய பூங்கரத்தையுமே என்னோடு மரக்கலத்தில் ஏற்றிக் கொண்டு செல்லப்போகிறேன் என்று தோன்றுகிறது. எனவே எதற்காக நான் கலங்க வேண்டும்? வலம்புரித்தீவிலே என் அன்னையின் சந்நிதியில் யாழை



யும் யாழுக்கு உரிய நங்கையையும் கொண்டு சேர்த்து விட்டால், பிறகு யாரும் என்னை எதிர்க்க முடியாது. அப்படியே எதிர்த்தாலும், அந்த எதிர்ப்பை முறியடித்து வெற்றியை நிலை நாட்டவேண்டியது ஒரு அரசனின் கடமை என்பதை நிரூபிப்பேன்!"

நங்கை சிரித்தாள். சிரித்துக் கொண்டே பேசினாள்.

"சிரிப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டும். தங்களைப் பரிகசிக்கும் சிரிப்பு இல்லை இது. தாங்கள் சொல்வதுபோல் எல்லாம் நடந்து விட்டால் எத்தனையோ பாக்கியசாலிதான் நான். ஆனால் நிலைமை அப்படியில்லை. அதை நினைத்துத்தான் சிரித்தேன்."

இந்த வார்த்தைகளை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பூபதி இப்

பொழுது ஆவேசத்தோடு பேசினன். "உண்மை! நீயும் நானும் இந்தப் பேரியாழும் கடல் கடந்து செல்வது என்பது அத்தனை கஷ்டமான காரியம் என்று சொல்லுகிருய். கஷ்டமான காரியந்தான். ஆனல் கஷ்டமான காரியங்களைச் செய்து மீளுவதற்குத் தானே நான் வலம்புரித்தீவிலிருந்து இங்கே வந்திருக்கிறேன். ஆகையினல் கஷ்டத்தை எண்ணிச் சிரிக்க வேண்டாம். கஷ்டத்தைப் புரிந்து கொள்ளுவோம். பிறகு அதை எப்படி வெல்வது என்று யோசிப்போம். அது தான் புத்திசாலித்தனம்!"

"அன்பரே! நீங்கள் சொல்வது மனப்பூர்வமான வார்த்தைகள்தானு! இத்தனை விரைவில் தங்கள் உள்ளத்தில் நான் இடம் பெற்று விட்டேனு?



என்ன ஆச்சரியம்! நாம் இருவரும் இங்கே இந்தக் குங்கும மாளிகையில், படிம விலாசத்துக்குள் இருந்துதானே இப்படிப் பேசுகிறேம். என்ன ஆச்சரியம்! அன்னையின் உருவத்தில் நின்று, நாளும் பொழுதும் என்னை வேதனைப் படுத்துகிற பயங்கரமான சாபத்தின் பிடிப்பிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்கப் போகிறதா?

"காதல் இருவர் கருத்து ஒருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்"

என்று நல் வாழ்க்கையை எடுத்துச் சொல்லி, இல்லறம் என்ற புனிதமான வாழ்வு முறையை அவ்வை பாடினளே, அப்படிப்பட்ட தமிழ் நாட்டின் வாழ்க்கை முறையை நான் கடைப்பிடிக்கப் போகிறேனு? எத்தனை சிக்கல்களுக்கு மத்தியிலே நெருப்பிலே நடந்து கொண்டு என்னை நான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கும் என்னுடைய பேரியாழுக்கும் விடுதலை கிடைக்கப் போகிறதா? என்ருல் நம்பவே முடியவில்லையே!"

இப்படிச் சொல்லிக் கொண்டே எழுந்து நின்ற நங்கையின் அருகிலே சென்ருன் சித்திராங்கன். அப்பொழுது கீழே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. நங்கை அங்கிருந்து மின்னலைப் போல் மறைந்து விட்டாள். அன்றிரவு முழுதும் சித்திராங்கன் உறங்கவில்லை.

இரண்டு நாட்கள் ஓடின. இந்த இரண்டு நாட்களும் பூபதி உறக்கம் என்பதே இல்லாமல் கழித்தான். இந்த இரண்டு நாட்களிலும் உணவு நேரத்தின்போது நங்கையை அவளுடைய அன்னையோடுதான் சந்தித்தான். பேசத் துடித்த உதடுகள் வறண்டன. இரவு உறக்கம் இல்லை.

மூன்றும் நாள் மாலை மறுபடியும் வேதனைக் குரல் கேட்டது. மூன்று தினங்களுக்கு முன்பு நங்கைக்கும் அவளுடைய தாயாருக்கும் வாக்குவாதம் நடந்து, அதன் பலனுக நங்கை மனம் உடைந்து கதறினளே, அது போலவே இன்றும் அழுகைக் குரல் கேட்டது. பூபதி இன்றைக்கு எப்படியும் கீழே ஓடிப் போய் அந்த வாக்குவாதத்திலே குறுக்கிட வேண்டியது தான் என்று நினைத்து எழுந்தான். ஆனல் அந்த நேரத்தில் குங்கும மாளிகைக் கிழவர் அறைக்குள்ளே வந்தார், பழைய பைத்தியச் சிரிப்போடு. வந்தவர் வந்த காரணத்தைச் சொல்லாமல் சாத்தன் என்ற அந்தச் செவிட்டுப் பணியாளனைப் பற்றி ஏதேதோ சம்பந்தமற்ற வர்ணனைகளைக் கொட்டியளந்து விட்டுப் போய் விட்டார். பூபதியின் முயற்சி தடைப்பட்டது. அவனுடைய முயற்சியைத் தடுப்பதற்கு என்றே அந்தத் துஷ்டக் கிழவர் அப்படி வந்து போனரோ என்று கூட மனத்துக்குள்ளே சந்தேகப் பட்டான் சித்திராங்கன். ஆனல் அந்தச் சந்தேகத்தினல் அதிக நேரம் வருத்தப் படுத்துவதற்கு அவசியம் இருக்கவில்லை. காரணம், கிழவர் சென்ற அரை நாழிகை நேரத்துக்கெல்லாம் குங்கும மாளிகையிலிருந்த எல்லாரும் நங்கையின் தாயாரோடு அரண்மனைக்குச் சென்று விட்டார்



'சுதேச மித்திரன்' விசேஷப் பிரதிநிதி ஸ்ரீ பி. ஆர். சீனிவாசன் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி என். வி. பத்மநாபனுக்கும், மன்னார்குடி காலேஜியேட் கல்லூரி பிரின்ஸிபால் ஸ்ரீ முதலியாண்டான் அவர்கள் குமாரத்தி சௌ. பரிமளவல்லிக்கும் மன்னார்குடியில் சமீபத்தில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. வாழ்க, பத்மநாபன் - பரிமளவல்லி!

கள். முதல் நாள் நடந்ததுபோல், இனிய சந்திப்பு மீண்டும் இன்று நேர்ந்தது. ஆனால் அரை நாழிகைப் பேச்சோடு நிற்கவில்லை, இன்றையச் சந்திப்பு. புதுமையின் விநோதமும், எதிர்பாராத நிகழ்ச்சியின் அதிர்ச்சியும் இன்று இல்லை. இன்று கங்கை மாடிக்கு வந்து படிக விலாசத்திலே நுழைந்த போது, நிதானத்தோடு நடந்துகொண்டான் அவன். முடிவில் கங்கையின் கலக்கத்துக்கிரங்கிக்கொண்டவாறு சமாதானம் சொன்னான் பூபதி:—

"குமரி! உனக்கு ஏன் இத்தனை கலக்கம்? கலங்காதே. சந்தேகப் படாதே. நீயும் உன்னுடைய யாழின் இசையும் என்னை அடிமைப்படுத்தி யிருப்பது உனக்குத் தெரியாது. யாழை நாடி வந்த ஒருவன், யாழோடு அதற்கு உரிய கங்கையையும் சந்தித்திருக்கிறேன். வலம்புரித் தீவுக்கு இனி விடிவுகாலம் வந்து விட்டது. உன்னை உன்னுடைய துன்பச் சூழலினின்று விடுவித்து வலம்புரித் தீவுக்கு அழைத்துச் செல்வேன். சென்று என் அன்னையின் பாதங்களிலே அவளுடைய தங்கப் பெட்டகத்தை வைப்பேன். வைத்து விட்டு அவளுடைய உத்தரவைக் கேட்பேன். 'கடல் கடந்து சென்று வெற்றிகரமாக என்னுடைய பணியை முடித்துத் திரும்பியதற்குப் பரிசு கொடுங்கள்' என்று அன்னையிடம் அன்போடு கேட்பேன். அகமும் முகமும் மலர்ந்து என் அருமை அன்னை யாழுக்கு வெகுமதியாக யாழ் நங்கையை எனக்குப் பரிசளிப்பாள். இது உறுதி!"

இப்படிச் சித்திராங்கன் சொல்லி முடித்தபோது, வெளியே மாடிப்படிகளில் குமிழ்க் கட்டையின் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து படிகளிலே பிரம்பு அடிபடும் 'பளார் பளார்' என்ற ஓசையும் வந்தது. அப்படியே பதறி மானைப் போலத் துள்ளி மருண்டு மருண்டு பார்த்தாள் கங்கை.

"சித்தரைப் போல் அல்லவா இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே பதறினான் பூபதி.

"போல் என்ன! அவரேதான்!" என்று சொல்லியவாறு பதறினாள் கங்கை.

"அவர் எதற்கு இங்கே வருகிறார்!" என்று கேட்பது போல ஓரே வேதனையோடு கங்கையைப் பார்த்தான் பூபதி!

"இந்த ஒரு புண்ணிய புருஷரின் பாதங்கள் இந்தக் குங்கும மாளிகையில் நடமாடுவதால்தான் இந்த விநாடி வரை நான் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன். இல்லையென்றால் இங்கே என் தாயார் என்ற அவதாரம் என்னை இகத்தின் விழுங்கியே யிருக்கும்!" என்றாள் கங்கை.

"அத்தனை கொடுமைக்காரியா உன்னுடைய அன்னை?" என்று வார்த்தைகளை வேகமாகவும் பதற்றத்தோடும் கேட்டான் பூபதி.

"கொடுமைக்காரி இல்லை. அவளுடைய இலட்சியமும், அவளுடைய வாழ்க்கை தர்மமும் அப்படி. இதோ குமிழ்க் கட்டை அருகிலே கேட்கிறது. நான் வருகிறேன். மீண்டும் தங்களைச் சந்திக்கும்போது விவரமாகச் சொல்கிறேன்!"

இப்படிச் சொல்லிவிட்டு மின்னலைப் போலத் துவண்டு, படிக விலாசத்தின் தாமரைத் தட்டைத் திறந்து கொண்டு, அங்கிருந்து மறைந்தாள் யாழ் நங்கை.

குமிழ்க் கட்டையின் ஓசையும், பிரம்பின் வீச்சும் படிக விலாசத்தை நோக்கி விரைந்து வந்தன.

முதல் பாகம் முற்றிற்று

வீண் பழிச்சொல்

கொழும்பு, ஜூலை 7உ.

தலைசிறந்த தமிழ்ப் பேரறிஞரும் இலங்கைச் சர்வகலாசாலை தமிழ் விரிவுரையாளருமாகிய தனிநாயகம் அடிகள் தமிழ் பேசும் மக்களுக்காகப் பிரத்தியேகமான ஒரு சர்வகலாசாலையைத் திருகோணமலையில் நிறுவ ஓர் இயக்கத்தை அதிதீவிரமாக நடத்தி வருகிறார். இந்த இயக்கத்துக்கு மக்களின் ஆதரவைத் திரட்ட நாட்டின் பல பாகங்களிலும் தொடர் பிரசங்கங்கள் நிகழ்த்தி வருவதோடு, தமிழ் மொழியின் பாதுகாப்பிலும் அவர் மும்முரமாக ஈடுபட்டிருப்பது தமிழ்ப் பொது மக்களின் கவனத்தை விசேஷமாகக் கவர்ந்திருக்கிறது. இலங்கையில் சிங்கள வம்சம் தலையெடுத்திருப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் மொழியும் தமிழ் நாகரிகமும் தழைத்து வளர்ந்திருப்பதையும் சென்ற 2500 ஆண்டுகளாகத் தமிழும் சிங்களமும் சரிசம அந்தஸ்துடன் இருந்து வந்திருப்பதையும் எடுத்துக்காட்டி, சிங்களத்தைவிடப் பழமையான தமிழ் மொழியை இலங்கை அரசாங்கம் ஒழித்துக்கட்ட முற்பட்டிருப்பது தர்மமாகுமா என்று தனிநாயகம் அடிகள் கேட்கிறார். புராதன மொழியான தமிழைப் பாதுகாக்க ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் தனிநாயகம் அடிகள் உணர்ச்சியுடன் பேசித் தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பி, சிங்கள எதிர்ப்பு இயக்கத்துக்கு வலுவூட்டி வருகிறார்.

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னால் சிங்கபாகுவின் மகன் விஜயன் என்ற இந்திய இளவரசன் இலங்கையில் குடியேறியதாயும் அவனிடமிருந்துதான் சிங்கள வம்சம் தோன்றியதாயும் மகாவம்சம் கூறுகிறது. இந்த விஜயன் வங்க நாட்டவனென்று மகாவம்சம் கூறியபொழுதிலும் உண்மையில் அவன் கலிங்கத்தைச் சேர்ந்த தமிழன் என்று பிரபல யாழ்ப்பாண சரித்திர நூலாசிரியர் முதலியார் ராஜநாயகம் தக்க மேற்கோள்களுடன் கட்டிக் காட்டியிருக்கிறார். இந்த விஜயன் பாண்டிய ராஜகுமாரியாகிய ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்து கொண்டதும் அவனுடைய சகாக்கள் பாண்டிய நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டதும் சிங்களவம்சத்தின் ஆதி பிதாக்கள் தமிழ்ச் சந்ததியார்களென்பதை ருசுப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. இந்தச் சரித்திரச் சான்றுகளை செனட்டர் கனகநாயகம் இவ்வாரம் செனட் சபையில் அழகாக எடுத்துக்காட்டி, சிங்களத்துக்கு முன்னால் இலங்கையிலே வழக்கிலிருந்து வரும் புராதன மொழியான தமிழை நசுக்க முயற்சிப்பது அநியாயமென்றும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் சரிசம அந்தஸ்துடன் ராஜாங்கமொழிகளாக்க வேண்டுமென்றும் வாதாடினார்.

இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் தமிழை ஒதுக்கிச் சிங்களம் மட்டும் ராஜாங்க பாஷையாவதை ஆதரிப்பதைப் போல அடிக்கடி பேசப்படுகிறது. இந்தப் பொய்க் கூற்றை செனட்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் இவ்வாரம் செனட் சபையில் அம்பலப்படுத்தினார். ''சிங்களம் நாட்டின் ஒரே ஒரு ராஜாங்க பாஷையாவதை முஸ்லிம்கள் எதிர்க்கவில்லை. அதே சமயம் தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் உரிய ராஜாங்க அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டுமென்பதும், சிறுபான்மையோர்களின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பு ஏற்பட வேண்டுமென்பதும் தான் எங்களுடைய கோரிக்கை'' என்றார் செனட்டர் அஸீஸ்.

பாஷைப் பிரச்னை சம்பந்தமான விவாதத்தில் ஒரு துரதிர்ஷ்டவசமான அம்சம், தமிழ் மக்கள் மீதும் தமிழ்த் தலைவர்கள் மீதும் பொறுப்பு வாய்ந்த சிங்கள மந்திரிகள் சில அபாண்டமான பழிகளைச் சுமத்தியதுதான். ஸ்ரீ எஸ். நடேசன், ஸர் கந்தையா வைத்தியநாதன், ஸ்ரீ வி. குமாரசுவாமி முதலான பல தமிழ்த் தலைவர்களும் அரசாங்கத்துடன் சமீப காலம் வரையில் ஒத்துழைத்து வந்திருக்க, நாட்டின் சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் தமிழ்த் தலைவர்கள் முட்டுக்கட்டை போட்டு வந்திருப்பதாக நீதிமந்திரி போன்ற பொறுப்புள்ளவர்கள் பாரதூரமான குற்றஞ் சாட்டினர். தமிழர் ஒத்துழைப்பில்லாமல் அவர்களுடைய எதிர்ப்புக்கு மத்தியில் சிங்களத் தலைவர்கள் மாத்திரம் போராடிச் சுதந்திரம் பெற்றதைப் போல அவர்கள் ஜனப்பிரதிநிதி சபையிலும் செனட் சபையிலும் அடிக்கடி பேசி வருவது தமிழ் மக்களுக்கு வேதனையைக் கொடுக்கிறது. தமிழ்த் தலைவர்கள் இந்த அபாண்டப் பழிக்குச் சுடச் சுடப் பதில் இட்டு வருகிறார்கள். —ரஜனி

ஸ்ரீ ரகுபதி ராகவ ஸ்ரீ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

35

உண்மையை நாடுபவனுக்கு மௌனம் அத்தியாவசியம். மௌனத்தினுடைய பிரயோஜனத்தை நான் நன்றாக அறிந்தவன். சஞ்சீவியைப் போன்ற மருந்து அது.

தென் ஆப்பிரிக்காவில் ஒரு கிறிஸ்தவ மடத்துக்கு ஒரு நாள் சென்றேன். மிக அழகான ஆசிரமம். அங்கே பல ஆசிரம வாசிகள் மௌன விரதத்திலிருந்தார்கள். "இது ஏன்?" என்று தலைவரைக் கேட்டேன். அவர் சொன்னதாவது: "இது உனக்குத் தெரியாதா? நாம் அனைவரும் உள்ளத்தில் திடம் பெற்றவர்கள் அல்ல. இஷ்டப்படி பேசி விடுகிறோம். உள்ளத்தில் உண்மையைப் பேசும் அந்தராத்மா உண்டல்லவா? அதனுடைய குரல் நம்மை எட்ட வேண்டுமானால் நாம் சத்தம் போடாமல் இருக்க வேண்டும். நாம் சத்தம் போட்டுக் கொண்டே யிருந்தால் அந்தராத்மாவின் குரல் காதில் படாது." அவர் செய்த உபதேசத்தின் பொருளை உணர்ந்தேன். பிறகு அது எனக்கு மிகவும் உதவி வந்தது. மௌனத்தின் ரகசியத்தைக் கண்ட நான் சொல்லுகிறேன், மௌனம் மிக உயர்ந்த சாதனம்.

[யங் இந்தியா, 6-8-25]

உண்மையை நாடும் பக்தனுக்கு மௌனமானது மிக்க பயன் தரும் சாதனம் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். மனிதனுக்கு ஒரு கெட்ட வழக்கம்: எதையும் அதிகப்படுத்திச் சொல்லுதல். தெரிந்தும் தெரியாமலும் உண்மையை மறைப்பதும் மாற்றுவதும் மனிதனுடைய வழக்கமாகி விட்டன. இந்த வழக்கத்தை விட்டுத் தப்ப வேண்டுமானால் மௌனம் அவசியமாகிறது.

கொஞ்சமாகப் பேசுகிறவன் யோசனையின்றிப் பேச மாட்டான். ஒவ்வொரு சொல்லையும் கவனித்துப் பேசுவான். சாதாரணமாக மக்கள் பேசுவதற்கு மிக விரும்புகிறார்கள். எந்தக் கூட்டத்திலும், சபாநாயகரின் மேஜையின் மேல் பேசுவதற்கு அனுமதி கேட்டுச் சீட்டுகள் குவிகின்றன. அனுமதி தந்தவுடன் கால நிர்ணயத்துக்கு மேல் பேசுகிறார்கள். கால வரம்புக்கு மேல் அனுமதியின்றிப் பேசிக் கொண்டே போகிறார்கள். ஆட்சேபணை செய்தால் இன்னும் அவகாசம் வேண்டும் என்று கெஞ்சிக் கேட்கிறார்கள். இந்தப் பேச்செல்லாம் உலகத்துக்குப் பயன் தராத பேச்சு. வீண் கால விரயமே தவிர வேறில்லை.

[சுயசரிதம்-1948-ம் வருஷத்திய பதிப்பு-பக்கம்-84]

உலகத்திலுள்ள சங்கடங்கள், நாம் மௌனத்தின் குணத்தை அறிந்தோமானால் பாதி தீர்ந்து போகும் என்று எண்ண இடமிருக்கிறது. இந்தக் காலத்து நாகரிகம் நம்மைச் சூழ்ந்து கொண்டதற்கு முன், நாளொன்றுக்குக் குறைந்தது ஆறு அல்லது எட்டு மணி மௌனத்தில் கழித்து வந்தோம். புது நாகரிகம் வந்த பிறகு இரவைப் பகலாக்கினோம். தங்கமயமான மௌனத்தை அழித்து அதற்குப்பதில் சந்தடியும் பேரிரைச்சலும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். தினமும் இரண்டு மணி நேரமாவது நம்முடைய அலுவல்களை விட்டு மௌனமாகக் கழித்தோமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! பகவானுடைய ரேடியோ எப்போதும் பாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் காது கொடுத்தால் தானே அது கேட்கும். நம்முடைய இரைச்சலை நிறுத்தி மௌனமாக இருந்தால் ஆகாச வெளியிலிருந்து அந்த இசை நம்முடைய காதுக்கு எட்டும். ஒரு கிறிஸ்தவ முனிவர் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்:

"மௌனம் பூண்டால் கூண்டுக்குத் திரும்பி வரும் தேனீக்களைப் போல்

நம்முடைய புலன்கள் உள்ளத்தில் அடங்கும். ஒரு கஷ்டமுமின்றி உள்ளத்தில் ஒடுங்கும். * ஆத்மாவை ஆட்டிக் கொண்டிருந்த அலைச்சல்கள் அடங்கும். பயந்த அடிமைகள் போல் புலன்கள் ஒடுங்கும். சொன்னபடி கேட்கும். மனமும் புலன்களும் வர வரப் பயிற்சி பெற்று, பண்பட்டு சாந்த நிலை எளிதில் அடையும். தியானத்துக்கு வேண்டிய பலத்தைப் பெறுவோம்.

[ஹரிஜன், 24—9—38]

தற்போது எனக்கு மௌன வழக்கம் இன்றியமையாத வழக்கமாகி விட்டது. முதலில் ஓய்வு பெறுவதற்காக ஆரம்பித்தேன். எழுதுவதற்கு நேரம் செய்து கொள்வதற்காகவும் பயன்படுத்திக் கொண்டேன். கொஞ்ச காலம் வழக்கப்பட்டதும் அதனுடைய ஆன்மீகப் பயனை அறிந்தேன். ஆண்டவனைத் தியானிப்பதற்கு மிக நல்ல சாதனம் என்பதைக் கண்டேன். இப்போது அது என் இயற்கை ஆகி விட்டது. அவ்வப்போது மௌனம் இன்றி என்னால் காலம் கடத்தவே முடியாது. அந்த நிலைக்கு வந்து விட்டேன்.

உண்மையை நாடும் என்னைப் போன்றவர்களுக்கு மௌனம் மிகவும் பயன்படும். இருள் விலக்கி ஒளி தருகிறது. காட்சியானது தெளிவு அடைகிறது. வாழ்க்கை முழுதும் உண்மையைத் தேடுவதே நம்முடைய வேலை அல்லவா? ஆத்மா தன் பூரணசக்தியடைய வேண்டுமானால் உள்ளத்தில் மௌனம் இருக்க வேண்டும்.

[ஹரிஜன், 10—12—38]

உள்ளம் உரைசெயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து, இறை
உள்ளில் ஒடுங்கே

—திருவாய்மொழி

வட்ட மேஜை

தபால் தந்தி இலாகாவைச் சேர்ந்த 'டெலிபோன் ஆபரேட்டர்' வேலைக்கு நான் கடந்த வருஷம் ஜூலை மாதத்தில் மனுச் செய்து கொண்டேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து இதற்கு டிசம்பர் மாதத்தில் பதில் வந்தது. என்னை வேலைக்குத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும், அது பற்றிய மேல் உத்தரவுகளுக்குச் சிறிது பொறுத்திருக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. என்னைப் போன்று அதே வேலைக்கு விண்ணப்பம் செய்து கொண்ட நூற்றுக்கணக்கானவர்களுக்கும் இதே மாதிரியான பதில் வந்தது.

வேலை கிடைத்து விட்டதற்காக மிக மகிழ்ந்து, நான் மேல் உத்தரவுகளை எதிர் நோக்கி மிகவும் ஆவலுடன் காத்திருந்தேன். அந்தோ! நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி ஏழு மாதங்கள் உருண்டோடி விட்டன. அதிகாரிகளிடமிருந்து வேறு எந்த விதமான பதிலும் இல்லை. அந்த உத்தரவும் இன்னும் வந்து சேரவில்லை. அதற்காக ஏழு மாதங்கள் காத்துக் கிடந்த நான் இன்னும் எவ்வளவு காலம் ஏங்கித் தவிக்கவேண்டுமோ, இறைவனுக்குத்தான் வெளிச்சம்!

பொறுத்திருக்க இடைக்காலத்தில் வேறு வேலை தேடுவதில் இறங்கியிருந்தாலும் ஏதாவது கிடைத்திருக்கும். அதையும் விட்டுக் காத்திருந்ததில் வாழ்வே ஊசலாட்டத்தில் வந்து விட்டது. "எப்போது உத்தரவு வரும்?" என்று ஏங்கித் தவிப்பதைத் தவிர வேறு வழியே இல்லாது போய்விட்டது. அதிகாரிகள் தங்கள் வழக்கமான நத்தை வேக வேலை முறையை அனுசரிப்பதுதான் இத்தகைய ஒழுங்குகளுக்கும் காரணம் என்று கூறப்படுகிறது.

எனவே, சென்னை போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் உடனடியாக இதைக் கவனித்துப் புதிய ஆட்களை வேலைக்குச் சேர்ப்பதில் ஏற்படும் அநாவசியமான காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும்.

30—6—56
நாகப்பட்டினம்

டி. ஜெயா

★

இன்று வெளியான 'கல்கி' இதழில் திரு கி. ரா. கோபாலன் அவர்களின் "அபலை அஞ்சுகம்" "ஜும்" என்று ஆரம்பமாகியிருக்கிறது.

சரளமான விறுவிறுப்பான நடையில் அது அமைந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.


அஞ்சுகம் எடுத்த எடுப்பிலேயே நம் எல்லாருடைய நன்மதிப்புக்கும், கருணைக்கும் பாத்திரமாகிறாள்.

இந்தத் தொடர் கதை வாசகர்களுக்கு மட்டுமின்றி, என் போன்ற ஏனைய எழுத்தாளர்களுக்கும் நல்ல விருந்தாகும் என்பதில் ஐயமில்லை. ஓவியர் மணியம் அவர்களின் படங்கள் அழகுக்கு அழகு செய்வது போல் விளங்குகின்றன.

6—7—56
கும்பகோணம்

கி. ரங்கராஜன்


V.கோவிந்தராஜன் அளிக்கும்
மகத்தான ஜூலை வெளியீடு
ஜூபிலி பிலிம்ஸ்
மர்ம
வீரன்
டைரக்ஷன்: T.R.ரகுநாத்
BALAN
இசை
வசனம்:
ஸ்டுடியோ:
வேதாசலம் . . A.L.நாராயணன் . . வாஹினி



அமர தீபம்

பத்மினி, சாவித்திரி, சிவாஜி கணேசன், நாகையா, எம். என். நம்பியார்—இந்த நடிகர், நடிகைகளைக் கொண்டே ஒருமாதிரி திரைக் கதையைப் படம் பார்க்காமலே தெரிந்து கொள்ளலாம். பத்மினி, சாவித்திரி இருவருமே தமிழ் சினிமா வானில் புகழ் பெற்ற பெரிய நட்சத்திரங்கள். ஆகவே, படத்தில் இருவரும் கதாநாயகி ஸ்தானத்துக்குத் தேர்தலில் நின்று போட்டியிடுவார்கள். சிவாஜி கணேசன் ஒரு கதாநாயகனுக்கு வேண்டிய அத்தனை யோக்யதாம்சங்களும் நிரம்பப் பெற்றவராகையினால், இறுதி வெற்றி எதிலும் அவருக்குத்தான். கதாநாயகனுக்கோ, கதாநாயகிக்கோ தந்தையாக வர வேண்டியவர் நாகையா. சீறும் நாகத்தைப் போல் சீறு கொண்டெழும் வில்லனாகத் தோன்றிக் கதாநாயகிக்குப் பல விலங்குகளைத் தோற்றுவித்து அவளைக் கொடுமைப் படுத்துவதற்கென்றே வருபவர் எம். என். நம்பியார்.

குறுக்கெழுத்துப் போட்டிக்குக் குறிப்புக்கள் கொடுத்து உதவுவது போல், நான் "அமர தீபம்" திரைப்படக் கதைக்குக் குறிப்புக்கள் கொடுத்து விட்டேன். இனி, கதையைக் கற்பனையில் காண்பதில் சிரமம் இருக்காது.

காந்தன்

ஒரு ஏழைப் பெண், ஒரு பணக்காரப் பெண் இருவரும் ஒரு வாலிபனைக் காதலிப்பார்கள். பணக்காரப் பெண்ணின் தந்தை தம் மனத்திலுள்ள ஒரு வரனைத் தம் பெண்ணுக்கு மணம் முடித்து வைக்க நினைப்பார். அந்த வரன் கதையின் வில்லனாயிருப்பான். இந்தக் காதகனிடமிருந்து தப்பப் பணக்காரப் பெண் ஒருவரும் அறியாமல் வீட்டை விட்டு வெளியேறும் முறையைக் கடைப்பிடிப்பாள். மகளைப் பிரிந்து மனம் முறிந்த தந்தை இறந்து போவார். காதலனைக் காணாமல் பணக்காரப் பெண் தவிப்பாள். இந்தச் சந்தர்ப்பத்தில் கதாநாயகனுக்கும் ஏழைப் பெண்ணுக்கும் இடையே காதல் நெருக்கமாக வளர்ந்து விடும். கதாநாயகிக்கும் ஏழைப் பெண்ணுக்கும் இடையே அவர்கள் கொண்ட காதலில் விறுவிறென்று வேகமாகப் போட்டி வளர்ந்து, உண்மைக் காதலுக்காக யாராவது ஒருவர் உயிர்த் தியாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

வீனஸ் பிக்சர்ஸாரின் "அமரதீபம்" நன்றாய்த் தயாரிக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீதர் தீட்டிய திரைக்கதை வசனம் நன்றாயிருக்கிறது. பாடல்களும் நன்றாயிருக்கின்றன என்றே கூறலாம். காதலன் அசோக்காக நடிக்கும் சிவாஜி கணேசன் இந்

தப் படத்தில், தாம் ஒரு சிறந்த நடிகர் என்பதை நன்கு நிரூபித்து விட்டார்.

அநாதையாக இருந்து அருணாவின் அன்பை அடைந்தபோதும், அருணாவைப் பிரிந்து கார் விபத்தில் சிக்கி, புத்தி மாறாட்டம் கொண்டு அலைந்த போதும், அந்தச் சந்தர்ப்பத்தில் நாடோடிக் கூட்டத்தைச் சேர்ந்த ரூபவதியான ரூபாவின் காதலைப் பெற்ற போதும் சிவாஜி கணேசனின் நடிப்பு உணர்ச்சிமயமாகவும் உருக்கம் நிறைந்ததாகவும், இயல்பான முறையிலும் இருந்தது. வசனங்களைச் சத்தம் போட்டுப் பேசாமலும், நடிப்பில் நாடக மேடையை நினைவூட்டாமலும் அவர் மிகவும் தத்ரூபமாக நடித்திருப்பதை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

''அமரதீப''த்தில் குறிப்பிட வேண்டிய அடுத்த பாத்திரம் அருணா. அந்தப் பாகத்தைச் சாவித்திரி ஏற்றுத் திறமையாக நடித்திருக்கிறார். செல்வச் சீமான்வீட்டில் செல்வப் பெண்ணாக வளர்ந்த அருணா குமாரை அடியோடு வெறுத்தாள். ஆனால் அவள் தந்தை அவளை அவனுக்கே மணம் செய்து கொடுப்பதென்று தீர்மானித்திருந்தார். இந்த இடுக்கண்ணிலிருந்து தப்ப அருணா வீட்டை விட்டு வெளியேறி, அநாதை அசோக்கைச் சந்தித்து அவனிடம் அளவு கடந்த அன்பு கொண்டு கவலையற்று வாழ்ந்தாள். இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் சாவித்திரியின் நடிப்பு பிரமாதமாக இருக்கிறது.

நாடோடிப் பெண்ணாகப் பல முறை நடித்தும், தெருவில் நடனமாடியும், நடனத்துக்கு இடையிலே வேல்விழிகளின் வீச்சினால் ஓர் ஆண் மகனைக் கவர்ந்தும் பழக்கப்பட்டு விட்ட பத்மினி எப்போதும் போல் இந்தப் படத்திலும் அந்தப் பாகத்தை ஏற்றுச் சக்கை போடு போட்டிருக்கிறார். புத்தி சுவாதீனம் இழந்திருந்த அசோக்கினிடம் அன்பு மொழிகள் பேசியபோதும், ''பச்சைக் கிளி பாடுது, பக்கம் வந்தே ஆடுது....'' என்ற பாட்டுக்கு அபிநயத்தோடு ஆடிய போதும் தன் காதலுக்குக் குறுக்கே வந்து மூண்டத அருணாவைத் தீர்த்துக் கட்டக் கண்ணகி மாதிரி ஆவேசத்தோடு எதிர்த்த போதும் பத்மினி நன்றாக நடித்திருக்கிறார்; அருணா தன் உடன் பிறந்த சகோதரி என்று தெரிந்ததும் கோபம் தணிந்து ஆழங் காண முடியாத சோகத்தில் ஆழ்ந்தது, படத்தின் முடிவில் காதலன் மார்பை நோக்கி வந்த துப்பாக்கிக் குண்டைத் தன் மார்பில் ஏற்று உயிர்த் தியாகம் புரிந்தது ஆகிய உணர்ச்சிமயமான கட்டங்கள் பத்மினியின் நடிப்புத் திறமையை எடுத்துக் காட்டக் கூடியவை என்பதைப் படம் பார்த்தவர்கள் நிச்சயம் ஒப்புக் கொள்ளுவார்கள்.

அருணாவின் வளர்ப்புத் தந்தை சுகம், துக்கம் இரண்டையும் அநுபவித்து, மகளைப் பிரிந்து ஏங்கி, பிரிந்த மகளை மீண்டும் அடைந்து மகிழ்ந்து கடைசியில் இறந்து போகிறார். இந்தப் பாத்திரம் நாகையாவுக்கு 'ஆகி வந்த' பாத்திரம். ஆகவே, சிறப்பான அவர் நடிப்பைப் பற்றி எதுவும் விசேஷமாகச் சொல்ல வேண்டியதில்லை.

ரூபாவின் காதலைப் பெறுவதற்குத் தங்கவேலு மந்திர தந்திர வேலைகளை யெல்லாம் கடைப்பிடித்து எல்லோரையும் சிரிப்பாய்ச்



சிரிக்க வைக்கிறார். சம்பாவாக நடிக்கும் இ. வி. சரோஜா காதலியாகவும் சாமியாராகவும் நடித்து, இன்பமாக ஆடி எல்லோரையும் மகிழ்விக்கிறார்.

இந்தப் படத்தைப் பார்த்த போது எனக்கு நான் ஏற்கனவே பார்த்த தமிழ்ப் படங்கள் சில நினைவுக்கு வந்தன. அவை என்னென்ன படங்கள் என்று பார்ப்போம்.

ஓடாத பஸ்ஸில் அருணா தூங்கிக் கொண்டிருந்தபோது அசோக் அவளைச் சந்தித்த காட்சி ''ராஜா ராணி'' படத்தை நினைவூட்டியது. சிவாஜி கணேசன் சித்த சுவாதீனம் இழந்து தவித்த காட்சியைப் பார்த்த போது ''பராசக்தி'' படம் நினைவுக்கு வந்தது. நாடோடிக் கும்பலில் வாழ்ந்த ரூபா அருணாவின் சகோதரி என்று தெரியவருகிற கட்டம் என் நினைவை ''ஆசை''ப் படத்துக்குக் கொண்டு போயிற்று. ஆனால் இதை ஒரு பெரிய குறையாக நினைக்க வேண்டியதில்லை! ஒரே படத்தில் மூன்று படங்களையும் பார்ப்பது, படம் பார்ப்பவர்களுக்கு லாபம்தானே! அப்படியே அதை ஒரு குறையென்று எடுத்துக் கொண்டாலும் அது திரைக் கதை அமைப்பை மட்டும் சேர்ந்தது. நடிகர்களைச் சேராது. இந்தப் படத்தில் நடித்திருக்கும் திறமை வாய்ந்த நடிகர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு புதிய அம்சங்களைக் கொண்ட படத்தைப் பிரமாதமாக எடுத்திருக்கலாம்.

அமரதீபம் திரைக் கதை நிகழ்ச்சிகள் ஏற்கனவே பார்த்த நிகழ்ச்சிகளாகையினால் அவைகளை இப்பொழுது பாராட்டினால், ஒரு முறை முன்பு பாராட்டிய அம்சங்களையே மீண்டும் பாராட்டியதாகும். ஆனாலும் பொது மக்கள் விரும்பக்கூடிய படம் அமரதீபம்; நல்ல நடிகர்கள் சேர்ந்து நல்லபடியாக நடித்திருக்கும் படம் அமரதீபம்; ஒலி, ஒளி, எடிட்டிங், காட்சி அலங்காரங்கள், நடிகர், நடிகைகளின் 'மேக்கப்'புகள், முதலிய கலையம்சங்களில் குறை காணமுடியாத நல்ல படம் அமர தீபம்.



அமுத ஊற்று

எஸ். வைத்தியநாதன்

'அன்புள்ள நாராயணனுக்கு.

உன்னிட மிருந்து இப்போ தெல்லாம் கடிதம் வருவதே இல்லையே. அது ஏன்? உன் மாமா வயதான பெண்ணைக் கல்யாணம் பண்ணாமல் எத்தனை நாள் வைத்துக் கொண்டிருப்பது என்று கவலைப்படுகிறார். மணம் செய்து கொள்ள இனியும் உனக்கு ஆட்சேபனை என்ன? தள்ளிப் போட்டுக் கொண்டே போவது உசிதமல்ல. உன் சாதகமான பதிலை உடனே எதிர்பார்க்கிறேன். இதற்கும் மௌனம் சாதித்து விடாதே!

உன் அன்புள்ள,

குமுதவல்லி'

தன் தாயாரின் கடிதம் நாராயணனை இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கச் செய்தது. அவளுடைய ஆசையை நிறைவேற்றுவதா, அல்லது தன் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்வதா? இரண்டில் ஒன்றுதான் நடைபெறக் கூடியது. அந்த ஒன்று எது என்பதை நிர்ணயிப்பதில் அவன் வெகுவாகச் சிரமப் பட்டான். யோசித்து யோசித்து மூளையைக் குழப்பிக் கொண்டான். முடிவு காணுவது அவனுக்கு எளிதாக இல்லை.

நாராயணன் கல்கத்தாவில் சணல் ஆலை ஒன்றில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய தாயார் அவர்களது சொந்த ஊராகிய உப்பிலியப்பன் கோயிலில் இருந்தாள்.

அவன் தன் ஆறுவது வயதிலேயே தந்தையைப் பறிகொடுத்து விட்டான். அவர் அதிகமாகச் சொத்து ஒன்றையும் வைத்து விட்டுப் போகவில்லை. தாய் குமுதவல்லியின் மனோ திடமும், குன்றாத ஊக்கமும், தளரா உழைப்பும், அவனுடைய மாமா வேங்கடவரதன் அவ்வப்போது அவர்களுக்குச் செய்து வந்த சிறு உதவிகளும்தான் அவனை ஆளாக்கி முன்னுக்குக் கொண்டு வந்தன.

அவனது படிப்பு முடிந்து ஒரு வருஷம் வரையில் உத்தியோகத்துக்காக அலைந்தான்; கடைசியில் கல்கத்தாவில் வேலை கிடைத்தது. ஒரே பிள்ளையான அவனைத் தூர தேசத்துக்கு அனுப்பக் குமுதவல்லிக்குக் கொஞ்சம் கூட மனமில்லாதிருந்தும் வேறு வழியின்றிச் சம்மதிக்க வேண்டியதா யிருந்தது. பல புத்திமதிகளையும் உடம்பை அக்கறையுடன் கவனித்துக் கொள்ளும்படியும் பன்முறை கூறிக் கண் கலங்க அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினாள் குமுதவல்லி.

கல்கத்தா ஆலையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த நரசிம்மன் என்பவர் உதவி மானேஜராக இருந்தார். நாராயணனுடைய திறமையையும், புத்திசாலித்தனத்தையும் வெகு விரைவிலேயே கண்டு பிடித்து விட்ட அவருக்கு அவனிடம் தனி மதிப்பும் அபிமானமும் ஏற்பட்டன. அவனைத் தன் வீட்டுக்கு அடிக்கடி அழைத்துக் கொண்டு போய் அளவளாவுவார்! விருந்தளித்து அன்போடு உபசரிப்பார்.

அங்கே அவருடைய ஏக புதல்வி பாமாவுக்கும் அவனுக்கும் நட்பு ஏற்பட்டது. பாமா படித்த பெண்; சரளமான பேச்சும், கலகலப்பான சுபாவமும் கொண்டவள். நாராயணனுடன் எவ்விதக் கூச்சமுமின்றி வெகு சரளமாகப் பழகினாள் அவள்.

அவளுடைய சிரிப்பும், கொம்மாளமும், படிப்பும், பகட்டும், தன்னுடைய சாதாரண அழகைச் செயற்கை அலங்காரங்களினால் வெகுவாக மிகைப்படுத்திக் காட்டும் திறமையும் நாளடைவில் நாராயணனை அவளுக்கு அடிமையாகச் செய்து விட்டன. அவளும் தன் மீது மையல் கொண்டிருக்கிறாள் என்று அவளுடைய இனிய மொழிகளிலிருந்து அறிந்து அவன் புளகாங்கிதம் அடைந்தான். அவளையும், அவளது பேச்சையும், சிரிப்பையும், செய்கைகளையும் பற்றிய இன்ப நினைவுகளிலேயே அல்லும் பகலும் மூழ்கிக் கிடந்த அவன் தன் மாமாவின் புதல்வி ஹேமாவை அறவே மறந்து விட்டதில் வியப்பென்ன?

ஆம்; அவனுடைய மாமாவின் பெண் அவனுக்காக ஊரில் காத்திருந்தாள். குத்து விளக்கைப் போன்ற அடக்கமான அழகும், குணச் செல்வமும் கொண்ட ஹேமாவைத் தன் மகனுக்கு மணம் செய்து வைத்து விட வேண்டுமென்று குமுதவல்லிக்கு அளவுகடந்த ஆசை. அவனுடைய மாமாவுக்கும் அதில் பூர்ணசம்மதம். ஹேமாவோ அவனைத் தெய்வமாகக் கருதி வந்தாள். கல்கத்தாவுக்கு அவன் கிளம்புவதற்கு முன்னாலேயே விவாகத்தை முடித்து விட அவன் மாமா பிரயத்தனப்பட்டார். நாராயணன் முட்டுக்கட்டை போட்டான். "என்ன அவசரம்? இப்போது தான் வேலைக்குப் போகப் போகிறேன். உத்தியோகம் ஏற்றுக் கொண்டு சில மாதங்களாவது ஆகட்டும். என்னுடைய வேலைத் திறமை அவர்களுக்குப் பிடித்து உத்தியோகம் 'காயம்' ஆகட்டும். அப்புறம் கல்யாணத்தை நடத்திக் கொள்ளலாம்" என்று கூறினான். அதுவும் நியாயமாகப் படவே மாமா விவாக யோசனையைத் தள்ளி வைத்தார். பாவம், அவருக்குத் தம் மகளுக்கும் அவனுக்கும் விவாகம் நடக்கக் கொடுத்து வைத்திருக்கவில்லை என்பது அப்போது எப்படித் தெரியும்?

நாராயணன் - பாமாவின் காதல் தினம் தினம் வலுப்பட்டு வந்தது. அவர்கள் காதலர்கள் என்பது பகிரங்க ரகசியமாகி விட்டது. நரசிம்மனும் அவருடைய மனைவியும் அக் காதலைக் கண்டு திருப்தியே அடைந்தார்கள். தங்கள் மாப்பிள்ளையாக நாராயணன் வருவதில் அவர்களுக்கு மிகுந்த திருப்தியிருந்தது.

நாராயணன் கல்கத்தாவுக்கு வந்து கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகிவிட்டதால் அவனுடைய விவாக விஷயமாக ஞாபகப்படுத்தி

இரண்டொரு கடிதங்கள் எழுதினாள் அவன் தாயார். அவன் மனம் வேறு திசையில் திரும்பி விட்ட செய்தியை அருமைத் தாய்க்கு எழுதத் துணிவில்லை. அவன் பதில் எழுதாமலே இருந்து விட்டான்.

அதற்குப் பிறகுதான் சிறிது கடுமையாக மற்றொரு கடிதமும் அவன் அன்னையிட மிருந்து வந்து விட்டது.

*　　　*　　　*

எத்தனை நாட்கள் பதில் எழுதாமல் இருக்க முடியும்? அன்னைக்கு என்ன பதில் எழுதுவது? ஹேமாவை மணக்காமல் வேறொருத்தியைக் கைப்பிடிக்க அவன் தீர் மானித்து விட்டதை அறிந்தால் மன முடைந்து போய் விடுவாளே அவள்! அவ ளுடைய உழைப்பும் உறுதியும் அல்லவா அவனுடைய இன்றைய நிலைமைக்குக் கார ணம்? மாமாவும் தம்மால் முடிந்த உதவிகள் செய்திருந்தார் அல்லவா அவ னுக்கு? அவருக்கு முழு ஏமாற்றம் அளிப்பது நியாயமா? ஆனால்.. ஆனால்.. அதற்காகப் பாமாவை அவன் துறந்துவிட முடியுமா?

'எப்படி, எந்தவிதமாகப் பதில் எழுதுவது என்பதைப் பற்றிப் பாமாவிடமே யோசனை கேட்டால் என்ன? ஆம்; அதுதான் சரி. அபார புத்திசாலியான அவள் இதற்குச் சரியான முறையில் ஆலோசனை சொல்வாள்.' நாராயணன் குதூகலத்துடன் அவளைத் தேடிப் போனான்.

குமுதவல்லியின் கடிதத்தைப் படித்ததும், "இப்படி வேறு ஒரு விலங்கும் இருக்கிறதா? உங்கள் தாயாரின் விருப்பப்படியே செய்யுங்கள். என்னைவிட அந்தப் பெண்ணிடந் தான் விருப்பம் உங்களுக்கு அதிகம் போலும்! நான் போகின்றேன்!" என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறி விட்டுப் பாமா கோபித்துக் கொண்டு கிளம்பி விட்டாள்.

நாராயணன் அவளைக் கெஞ்சிக் கூத்தாடி, "அசடே! அவசரப் பட்டு விட்டாயே! உன்னை மறக்க என்னால் முடியுமா? என் தாயாருக்கு என் அபிப்பிராயத்தை நாசூக்காக எந்த முறையில் தெரிவிப்பது என்பது பற்றி உன்னிடம் ஆலோசனை கேட்க அல்லவா வந்தேன்?" என்று சமாதானப் படுத்தினான்.

மேகக் கூட்டத்தில் இருந்து விடுபட்ட மதி போல் பாமாவின் முகமண்டலம் மீண்டும் பிரகாசித்தது. புன்னகை ஒளி வீச, "பதிலே எழுதாமல் பேசாமல் இருந்து விடுங்கள்! அவர்களே தெரிந்து கொள்ளுகிறார்கள்" என்று கூறினாள் பாமா.

"பதில் எழுதாமல் இருந்து விடுவதா?"

"ஆமாம்! எழுதினீர்களானால் சும்மா இருந்து விடுவார்களா? உங்கள் மனத்தை மாற்ற முயற்சி செய்வார்கள். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்றபடி, உங்கள் மன உறுதி குலைந்து விடும். ஏன், நான் சொல்வது சரியாகப்படவில்லையா உங்களுக்கு?" என்று கேட்டுக் கொண்டே ஒய்யாரமாக அவனைப் பார்த்தாள் அவள்.

அதற்கு மேல் யோசிப்பதற்கு நாராயண னுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? பாமாவின் யோசனைப்படி அவன் அன்னைக்குப் பதில் எழுதாமல் இருந்து விட்டான்.

பாமாவுக்குப் போட்டியாக ஒருத்தி இருக் கிறாள் என்பதை அறிந்ததும் நரசிம்மன் அவ ளுடைய விவாக ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதில் முனைந்தார். முகூர்த்தத் தேதி யும் குறிப்பிட்டாயிற்று.

தன் தாயாருக்கும் மாமாவுக்கும் இப்போ தாவது விஷயத்தைத் தெரிவித்து, அழைப்பு அனுப்ப வேண்டும் என்று நாராயணன் விரும்பினான்.

பாமா குறுக்கே நின்றாள். "நல்ல புத்தி சாலி நீங்கள், விஷயம் தெரிந்தால் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்து முரண்டு செய்து நம் விவாகத்தைத் தடுத்துவிட மாட் டார்களா அவர்கள்? கல்யாணச் செய்தியை அவர்கள் தெரிந்து கொள்ளா விட்டால் ஒன்றும் குடி முழுகி விடாது. அப்படித் தெரிவித்துத்தான் ஆகவேண்டும் என்றால்



கல்யாணத்துக்குப் பிறகு எழுதிக் கொண்டால் போகிறது'' என்று அவன் கூறிவிட்டான். நாராயணன் வாய் திறக்கவில்லை.

மாப்பிள்ளையின் உறவினர்கள் யாருமின்றியே கல்யாணம் நடந்தேறியது!

பத்து நாட்கள் கழித்துத் தான் கல்யாணம் செய்து கொண்ட மகிழ்ச்சிச் செய்தியைத் தன் அன்னைக்கு நாராயணன் எழுதினான்.

தன் நெஞ்சின் வேதனையைக் கொட்டிப் பதில் எழுதியிருந்தாள் குமுதவல்லி. 'உனக்கு ஹேமாவை மணம் புரிந்துகொள்ளச் சம்மதம் இல்லையென்றால் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டாமா? உனக்கு விருப்பமானவளைக் கல்யாணம் செய்து கொள்வதைக் குறுக்கே விழுந்து தடுப்போமா நாங்கள்? தடுக்கத் தான் முடியுமா? இப்படி நம்ப வைத்து மோசம் செய்யலாமா? நீ எதைச் செய்தாலும் நீ சௌக்கியமாக மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனை' என்ற முறையில் அவனுடைய கடிதம் அமைந்திருந்தது.

கலியாணம் ஆனதிலிருந்து நாராயணன் மாமனார் வீட்டிலேயே குடியேறி விட்டான்.

தாயாரைத் தன்னோடு அழைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் நினைக்காமல் இல்லை. ஆனால் அவனுடைய மாமனார் வீட்டில் வந்து இருக்கக் குமுதவல்லியின் சுயமரியாதை இடம் கொடுக்காது. பாமாவோ பெற்றோரை விட்டுத் தனிக் குடித்தனம் வர மாட்டாள். எனவே தன் தாயாரை அழைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையை அடக்கிக் கொண்டான்.

ஒரு வருஷம் சென்றது. அவனுக்கும் அவனுடைய அன்னைக்கும் கடிதப் போக்குவரத்துக்கூட நின்று விட்டது!

இதற்கிடையில் ஒரு நாள் காரில் உலாவுவதற்காக எங்கோ கிளம்பிச் சென்ற நரசிம்மனும் அவருடைய மனைவியும் உயிரோடு வீட்டுக்குத் திரும்பவில்லை. கார் ஒரு லாரியில் மோதி ஆபத்துக்குள்ளாகி அந்த இடத்திலேயே மாண்டு விட்டனர்.

நாட்கள் சென்றன. தகப்பனாரின் சொத்து முழுவதற்கும் எஜமானியாகி விட்டாள் பாமா. ஏற்கனவே கர்வமும், பிடிவாத குணமும் கொண்டவளான பாமாவின் மமதை எல்லையின்றி அதிகரித்து விட்டது. தனக்கு நிகரில்லை யாரும் என்ற அகந்தையுடன் கணவனைப் பம்பரமாக ஆட்டி வைத்தாள்.

'இப்போது வீட்டில் அவனும் மனைவியும் தானே? மாமனார் மாமியார்கூட இல்லையே! இனி மேலாவது தாயாரை அழைத்து வைத்துக் கொண்டால் என்ன?' என்று அவன் எண்ணினான். தன் அபிப்பிராயத்தை மெள்ள ஒரு நாள் பாமாவிடம் வெளியிட்டான். ''நன்றாகச் சொன்னீர்கள். உங்கள் தாயாருக்கு நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொண்டதில் துளிக்கூட விருப்பம் இல்லை. அந்த ஆத்திரம் அவள் மனத்தினின்று அகன்றிருக்காது. இப்போது இங்கே அழைத்து வைத்துக் கொண்டால் ஏதாவது சூழ்ச்சிகள் செய்து நமக்குள் சேரவொட்டாமல் அடித்து விடுவாள். அப்புறம் குடும்பத்தில் சச்சரவும் குழப்பமும்தான் ஏற்படும். துளிக்கூட நிம்மதியிருக்காது'' என்று ஒரேயடியாகக் கூறிப் பாமா நாராயணனை மேலே பேச வொட்டாமல் செய்து விட்டாள்.

மனைவியின் பதிலைக் கேட்டுப் பெருமூச்சு விட்டான் நாராயணன். அதுதான் அவனால் செய்ய முடிந்தது!

ஐந்து வருஷங்கள் ஓடி விட்டன! இப்போது பாமாவுக்கு ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரண்டு குழந்தைகள்.

நாராயணன் வேலை பார்த்து வந்த ஆலையில் அவனைத் தொழில் நுட்பங்கள் சிலவற்றில் பயிற்சி பெற்று வருவதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பத் தீர்மானித்தார்கள். அவனுக்கு மனைவியையும் குழந்தைகளையும் பிரிந்து போவதற்குத் தயக்கமாயிருந்த போதிலும் தன் எதிர்கால நன்மையை உத்தேசித்து ஒப்புக் கொண்டான். பயிற்சி முடிந்து வந்து விட்டால் எண்ணூறல்லவா மாதச் சம்பளம்? ''ஒரு வருஷம்தானே பயிற்சிக் காலம்? என்ன பிரமாதம்? போய் விட்டு வாருங்கள். எங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்'' என்று பாமாவும் ஊக்கமளித்தாள்.

இங்கிலாந்துக்கு நாராயணன் புறப்பட்ட செய்தி அவனுடைய புகைப்படத்துடனும் அவன் ஒரு வருஷ காலம் சீமையில் தங்கித் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றுத் திரும்புவான் என்ற விவரத்துடனும் பத்திரிகைகளில் வெளியாயிற்று.

நாராயணன் புறப்பட்டுப் போய் இரண்டு வாரங்கள் கடந்திருக்கும். பாமா ஒரு நாள்

மாலை பங்களாவின் முன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அப்போது கையில் மூட்டை ஒன்றுடன் ஒரு வயதான அம்மாள் வந்தாள். பாமாவைப் பார்த்து, ''இதுதானே நாராயணன் என்பவர் வீடு? நீ அவர் மனைவிதானே?'' என்றாள்.

''ஆமாம், நீங்கள் யார்?'' என்று கேட்டாள் பாமா.

''நான் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்தவள். என் பெயர் தங்கம். எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. வட நாட்டில் நெடுகிலும் தல யாத்திரை செய்து கொண்டு வந்தேன். இந்த ஊரிலே யார் வீட்டிலாவது வேலை கிடைத்தால் தங்கி விடலாம் என்று உத்தேசம். அங்கே ஒருவர் வீட்டில் சமையலுக்கு ஆள் தேவையாக இருக்குமா என்று விசாரித்தேன். உங்கள் வீட்டைக் குறிப்பிட்டு அனுப்பினார்'' என்றாள் அந்த அம்மாள்.

பாமா தனக்குச் சமையற்காரி வேண்டும் என்று யாரிடமும் சொல்லியிருக்கவில்லை. என்றாலும் அவள் வீட்டுச் சமையல்காரி ஏதோ அபிப்பிராய பேதம் காரணமாக நாலு நாட்கள் முன்புதான் விலகி இருந்தாள். அந்தச் செய்தியை அறிந்திருக்கும் தன் சிநேகிதிகள் யாரோ அந்த அம்மாளை அனுப்பியிருக்கக் கூடும் என்று கருதிய அவள் தங்கத்தை வைத்துக் கொள்ளச் சம்மதித்தாள்.

தங்கத்தின் சமையல் தேவாமிர்தமாக இருந்தது. பம்பரமாகச் சுழன்று வீட்டுக் காரியங்களைச் செய்தாள்.

பாமாவின் குழந்தைகளிடத்திலோ தங்கத்துக்கு எல்லையில்லாப் பாசம். அவைகளைக் குளிப்பாட்டுவது, உணவு ஊட்டுவது, தூங்கச் செய்வது, கதை சொல்லுவது எல்லாம் அவள் தான். அவைகளும், ''பாட்டி, பாட்டி'' என்று அவளிடம் உயிராக இருந்தன.

இவற்றை யெல்லாம் கண்டு பாமாவுக்கு அந்த அம்மாளிடம் மிகுந்த பிரியம் உண்டாகி விட்டது. தங்கம் வேலைக்கமர்ந்து ஒரு மாதம் ஆனவுடன் பாமா முப்பது ரூபாயை எடுத்துக் கொண்டு தங்கத்திடம் வந்தாள்.

''இந்தாருங்கள், சம்பளம்!'' என்றாள்.

தங்கம் வாங்க மறுத்து, ''எனக்கு எதற்குச் சம்பளம், அம்மா! பிள்ளையா குட்டியா யாருக்குச் சேர்த்து வைக்க வேண்டும்?'' என்றாள்.

பாமா எவ்வளவோ வற்புறுத்தியும் அவள் வாங்கிக் கொள்ள வில்லை. ''உங்களிடமே இருக்கட்டும், சேர்த்து வையுங்கள். எனக்குத் தேவைப்பட்டால் வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டாள். அவளிடம் பாமாவுக்கு இருந்த மதிப்பை இது மிகவும் உயர்த்தியது.

ஒரு வருஷம் ஓடி விட்டது. நாராயணன் பயிற்சி முடிந்து அவன் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்த அன்று பாமா விமான நிலையத்துக்குப் போய் அவனை அழைத்து வந்தாள்.

நாராயணன் பங்களாவின் முன் ஹாலில் அமர்ந்து சற்று நேரம் குழந்தைகளுடன் அளவளாவிக் கொண்டிருந்து விட்டு, ''என்ன பாமா! புதிய சமையற்கார அம்மாளைப் பற்றிப் புகழ்ந்து அடிக்கடி எழுதிக் கொண்டிருந்தாயே, எங்கே அந்த அம்மாள்? நான் பார்க்க வேண்டாமா?'' என்றான்.

''இதோ அழைத்து வருகிறேன்!'' என்று உள்ளே சென்றாள் பாமா.

தயங்கித் தயங்கி ஹாலுக்குள் நுழைந்த சமையற்கார அம்மாளைக் கண்டு திக்பிரமை அடைந்து பேச நா எழாமல் விழித்தான் நாராயணன். பிறகு சற்றுச் சமாளித்துக் கொண்டு, ''அம்மா, அருமை அம்மா! நீயா! நீயா என் வீட்டுச் சமையற்காரி!'' என்று துயரத்துடன் அலறினான். ஆம், அவள் அவனுடைய அன்னை குமுதவல்லிதான்.

''ஏன் குழந்தாய், வீணாக அலட்டிக் கொள்கிறாய்! நான் சம்பளம் வாங்கிக்கொண்டால்தானே சமையற்காரி? நான்தான் வாங்கிக் கொள்ளவில்லையே! என் மகன் குடும்பத்துக்கு உழைப்பதில் என்ன தவறு?'' என்று கேட்டாள் குமுதவல்லி அமைதியுடன்.

அவள் மேலும் கூறினாள்: ''நீ என்னை ஒதுக்கித் தள்ளியதைக் கண்டு வைராக்கியத்துடன் 'பிள்ளையாவது, மண்ணாவது! எல்லாம் மாயம், வீண் பிரமை!' என்று வேதாந்த மனப்பான்மை கொண்டு காலங்கடத்திக் கொண்டிருந்தேன். இதற்கிடையே உனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்திருக்கின்றன என்ற செய்தி பராபரியாகக் காற்று வாக்கிலே வந்து என் காதுகளை எட்டியது. என் வைராக்கியம் ஆட்டங் கண்டு விட்டது. அருமைப் பேரன் பேத்திகளைக் கண்ணால் காணமாட்டோமா, அவைகளை அணைத்து ஆனந்தத்தை அனுபவிக்க மாட்டோமா என்றெல்லாம் ஆவல் என் மனத்தைப் பற்றிக் கொண்டது. நாளாக ஆக அந்த ஆவல் அதிகரித்துக் கொண்டேபோய் ஒரு வெறியாகவே ஆகி விட்டது.

''ஆயினும் என் ஆவலை எப்படிப் பூர்த்தி செய்து கொள்வது? உங்கள் வீட்டில் நுழையவே எனக்கு அனுமதி கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகம். பலவாறு யோசனைகள் செய்தும் சரியான வழி ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை.

''இதற்கிடையில் ஒரு நாள் எதிர்வீட்டுப் பையன் என்னிடம் ஓடி வந்து, 'பாட்டி! உங்கள் பிள்ளை சீமைக்குத் தொழில் பயிற்சிக்குப் போகிறாராம். ஒரு வருஷம் ஆகுமாம் திரும்ப!' என்று கூறிப் பத்திரிகையில் வந்திருந்த உன் போட்டோவையும் செய்தியையும் எடுத்துக் காட்டினான்.

''அச் செய்தியை அறிந்ததும் என் மனசு தீவிரமாக வேலை செய்தது. மறு நாளே புறப்பட்டு இங்கு வந்தேன். அதிர்ஷ்டவசமாக நான் வந்த சமயத்தில் உன் வீட்டில் சமையற்காரி இல்லை. என் கோரிக்கை ஈடேறியது'' என்றாள் குமுதவல்லி.

இது வரையில் சிலையாக நின்ற பாமா பாய்ந்து வந்து மாமியாரின் பாதங்களில் வணங்கி எழுந்தாள். ''அம்மா! நான் பெரிய பிழையை உங்களுக்குச் செய்து விட்டவள். என்னுடைய பாவச் சுமையை எப்படிப் போக்கிக் கொள்ளப் போகிறேன்! அன்பு என்னும் அமுதத்தைப் பொழியும் ஊற்று நீங்கள் என்பதை இந்த ஒரு வருஷ அனுபவத்தில் கண்டு கொண்டேன். என்னை மன்னித்து எங்களோடு தங்குங்கள்'' என்று கண்ணீர் விட்டு மன்றாடினாள். அந்தக் கண்ணீர் வெள்ளம் பாமாவின் மன வேதனையை அடியோடு போக்கியது.

இதுவன்றோ


மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் தீர்க்க தரிசன அருள் வாக்குகளில்,

" செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி-மனிதர் சிற்றடிமைப் படலாமோ ?"

என்பதும் ஒன்று. இன்றைய நிலைமையை உத்தேசித்தே பாரதியார் அவ்விதம் சொன்னாரோ என்று தோன்றுகிறது.

ஆனால் இயந்திரங்கள் விஷயத்தில் நாம் யாருக்கும் சிற்றடிமைப் பட வேண்டியதில்லை என்பதைக் கோவை பீளமேட்டில் உள்ள பி. எஸ். ஜி. தொழிற்சாலைக்குள் சென்று பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.

பி. எஸ். ஜி. தொழிற்சாலைக் கட்டடத்தை நெருங்கும்போதே எத்தனை எத்தனையோ அற்புத இயந்திரங்களை உருவாக்கும் திருக்கோயிலை நெருங்குகிறோம் என்ற





உணர்ச்சி உண்டாகிறது. தொழிற்சாலைக்குள் பிரவேசித்ததும் அதன் விசாலமும் துப்புரவும் நம் கவனத்தைக் கவருகின்றன. வரிசைவரிசையாக இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதில் எண்ணற்ற வாலிபர்கள் உற்சாகமாகப் பலவித இயந்திரங்களை உருவாக்கும் இருப்பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்தக் காலத்தில் தொழிற்சாலைகள் அவசியம் அவசியம் என்று எல்லாரும் மேடைப் பிரசங்கத்தில் கூறுவதைக் கேட்டு விட்டு பி.எஸ்.ஜி. தொழிற்சாலைக்குள் சென்று அங்கு உண்மையிலேயே தொழில் நடக்கும் அற்புதத்தைப் பார்க்கும் போது " ஆகா ! இந்த பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு. தொழிற்சாலைகளுக்குத்தான் எவ்வளவு மகிமை தந்திருக்கிறார் !" என்ற வியப்பு நிச்சயம் உண்டாகும்.

பி. எஸ். ஜி. தொழிற்சாலைக்குள் சென்று அங்கு நடக்கும் அற்புதத்தைப் பார்ப்பதற்கு முன்னால் அது தோன்றிய வரலாற்றைத் தெரிந்து கொள்வோம்.

பி. எஸ். ஜி. குடும்பத்தினர் முதலில் விவசாயத்திலும், பருத்தி ஜின்னிங் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். சிறு இயந்திரங்களைச் செப்பனிடுவதற்காக அவர்களிடம் சிறிய பட்டறை மட்டும் இருந்தது. இந்தச் சின்னஞ் சிறு பட்டறையைத் தான் பெரிய தொழில் ஸ்தாபனமாக்க ஸ்ரீ பி.எஸ்.ஜி. ரங்கசாமி நாயுடு திட்டம் போட்டார். அப்பொழுது மிகவும் பிரபலமாக இருந்த ஸ்ரீ ஏ.பி. பாத்ரோ அவர்களைக் கொண்டு மேற்படி தொழில் ஸ்தாபனத்துக்கு அஸ்திவாரம் இடச் செய்தார். சில ஆண்டுகளுக்குப் பின் அதே தொழிற்சாலையை இன்னும்



சற்று விஸ்தரிப்பதற்காகச் சேலம் சர் டி. விஜயராகவாச்சாரியாரைக் கொண்டு அஸ்திவாரக்கல் நாட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். இது 1926-ம் ஆண்டு நிகழ்ந்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பின் தொழிற்சாலையும் தொழிற்கலாசாலையும் செயல்பட ஆரம்பித்தன. 1937-ம் ஆண்டுதான் தொழிற்கலாசாலை நல்ல முறையில் வேலை செய்யத் தொடங்கியது. ஆகவே அப்பொழுது சென்னை ராஜ்யத்தின் முதன் மந்திரியாக இருந்த ராஜாஜி அவர்கள் பி. எஸ். ஜி. தொழிற் கலாசாலையைச் சம்பிரதாயமாகத் திறந்து வைத்து ஆசி வழங்கினார். ராஜாஜியின் ஆசி பெற்ற பி. எஸ். ஜி. தொழிற்சாலையும், கல்லூரியும் இன்று பல்கிப் பெருகி வளர்ந்து இந்த நாட்டின் மிகப் பெரிய தொழிற்சாலையாகவும், மிகச்சிறந்த தொழிற் கல்லூரியாகவும் இகழ்கின்றன.

இந்தத் தொழிற் கலாசாலையில் ஆரம்பத்தில் ஒரே ஒரு உபாத்தியாயரும் பத்து மாணவர்களும்தான் இருந்தார்கள். அவர்களுக்குத் தொழிலில் நேர்முகமாகக் கல்வி கற்றுக் கொடுப்பதற்காகப் பதினைந்து தொழிலாளர்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் இந்தத் தொழிற்சாலையில் பழுதுபட்டுப் போகும் இயந்திரங்களை மட்டும் செப்பனிட்டுக் கொடுத்து வந்தார்கள். சில ஆண்டுகளில் தொழிலாளர்கள், தொழில் நுட்பங்களில் சிறந்த பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றனர்.

பிறகு அவர்களைக் கொண்டு புது இயந்திரங்களையே உருவாக்குவதில் முனைந்தனர். தொழிற்சாலை வளர்ந்தது. தொழிலாளர்கள் வளர்ந்தனர். ஏராளமான தொழில் நிபுணர்கள் அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறிப் பாரத நாட்டில் பல்வேறு இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

தீர்மம்!

இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு அடி நாதமாக இருந்து வரும் இஞ்ஜினீயர்கள் யாரும் இஞ்ஜினீயரிங் கலாசாலையில் படித்துப் பட்டம் பெற்ற மேதாவிகள் அல்ல. ஆரம்பகாலத்தில் இந்தத் தொழிற்சாலையில் சாதாரணத்தொழிலாளிகளாக இருந்தவர்கள்தான் இன்று மிகப் பெரிய இஞ்ஜினீயரிங் நிபுணர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் திறமையைக் கண்டு பட்டம் பெற்ற இஞ்ஜினீயர்கள் எல்லாம் மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுகின்றனர். பத்து ரூபாய் சம்பளத்தில் தொழிற்சாலையில் சாதாரணத் தொழிலாளியாக இருந்த பலர் இன்று பல நூறு ரூபாய் சம்பளம் பெறும் திறமை மிக்க இஞ்ஜினீயர்களாக இருக்கின்றனர். உழைப்பால் உயர்ந்த உத்தமமான தொழில் நிபுணர்களாக விளங்குகின்றனர்.


இவ்வளவு சிறப்பு வாய்ந்த நிபுணர்களால் வளர்ந்து வரும் அருமையான ஸ்தாபனங்கள்தான் பி. எஸ். ஜி. தொழிற்சாலையும், தொழிற்கலாசாலையுமாகும். இப்பொழுது இதன் தலைவராக ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரன் பொறுப்பேற்றுத் தொழிற்பட்டம்பெற்ற பல அறிஞர்களின் துணைகொண்டு மிகச் சிறந்த முறையில் நிர்வகித்து வருகிறார். ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரன் B. Sc., Elec. B. Sc. Mech. (Durham), M. I. E. E. (London), A. M. I. E. (India) அவர்கள் தம்முடைய பெயருக்குப் பின்னால் அவ்வளவு பட்டங்களைப் பெற்றிருந்தும் அனுபவ ஞானத்துடன் தொழிலாளியாக இருந்து மேலே வந்த இஞ்ஜினீயர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து அவர்களுடைய ஆலோசனைக்கு ஏற்பக் காரியங்கள் செய்து வருவதை யாரும் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த விவரங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டபோது எனக்கு ஒரே வியப்பாகத்தான் இருந்தது. ஆனாலும் வியப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல் தொழிற்சாலைக்குள் சென்றேன்.

தொழிற்சாலைக்குள் சென்றதும் சற்றுத் திணற வேண்டியிருந்தது. எதை எப்படிப் பார்ப்பது என்று திகைக்கவேண்டியிருந்தது. இந்தத் திகைப்பை எப்படியோ புரிந்துகொண்டு உடன்வந்ததொழிற்சாலை நண்பர் ஒரு கணத்தில் நீக்கி விட்டார்.

''தொழிற்சாலைகளைப் பல பகுதிகளாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அந்தந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்கள் அந்தந்தப் பகுதியிலிருந்து தான் வேலை செய்ய வேண்டும். வேறு பகுதிகளுக்குச் சென்று வீண்பொழுது போக்க முடியாது. அதற்கு ஏற்றாற் போல் அமைத்து வைத்திருக்கிறோம்'' என்று கூறி முதலில் ஒரு பகுதிக்குள் அழைத்துச் சென்றார்.

இங்கே பலவிதமானசாமான்கள் பழுது பார்க்கப்படுகின்றன. இந்தப் பகுதியில்



வெளியிலிருந்து எந்தவித மான இயந்திரங்கள் பழுதாகி வந்தாலும் அவைகள் சுத்தமாகப் பழுது பார்த்துக் கொடுக்கப்படுகின்றன. தொழிற்சாலைக்குள்ளாகவே முக்கியமான பகுதி இது என்றுகூடச் சொல்லலாம்.

அடுத்தாற்போல் மற்றொரு பகுதிக்குச் சென்றோம். இது பி. எஸ். ஜி. தொழிற் சாலையில் இன்னொரு முக்கியமான பகுதி. இங்குதான் தொழிற்சாலைக்கு வேண்டிய ஆயுதங்கள் எல்லாம் தயார் செய்யப்படுகின்றன.

''என்ன, தொழிற்சாலைக்கு வேண்டிய ஆயுதங்களைத் தயார் செய்கிறார்களா?''

''ஆமாம்; தங்கள் தொழிற்சாலைக்கு வேண்டிய ஆயுதங்களை, அதாவது, கத்தி, சம்மட்டி, துளை போடும் அலகுகள் முதலிய பல வித சாமான்களைத் தாங்களே தயார் செய்து கொள்கிறார்கள். இது மேல் நாட்டிலிருந்து வரும் ஆயுதங்களை விட உறுதியாகவும் நீண்ட நாட்கள் உழைக்கக் கூடியனவாகவும் குறைந்த விலையுடையனவாகவும் இருக்கின்றன.''

''தமிழ் நாட்டிலா, அதுவும் பீளமேட்டிலா இப்படி ஓர் அற்புதம் நடக்கிறது?''

''ஆமாம். அதுமட்டுமா? அடுத்த பகுதியில் இன்னும் நம்ப முடியாத பல அதிசய சாதனைகளும் நடைபெறுகின்றன. வாருங்கள், அவற்றையும் போய்ப் பார்க்கலாம்.''

இந்தப் பகுதிக்குள் நுழைந்ததும் இடரென்று ஏதோ இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ உள்ள பெரிய தொழிற்சாலைக்குள் நுழைந்து விட்டது போன்ற பிரமை ஏற்படுகிறது. ஒரு கணம் நாம் காணும் காட்சிகள் எல்லாம் கனவுத் தோற்றங்களா? இல்லை, உண்மையான காட்சிகள் தானா என்று வியக்கத் தோன்றுகிறது! நம்முடன் வந்த நண்பரும் இதரச் சாமான்களும் அப்படியே இருப்பதால் நாம் பீளமேடு பி. எஸ். ஜி. தொழிற்சாலைக்குள்தான் இருக்கிறோம் என்று நம்பவேண்டியிருக்கிறது.

பிரும்மாண்டமான இயந்திரங்கள் வரிசை வரிசையாக நம்முடைய கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. ஒவ்வொரு இயந்திரமும் பார்த்துப் பார்த்துப் பிரமிக்கும்படி இருக்கிறது. இந்தப் பெரிய இயந்திரங்கள் யாவும் பெரும்பாலும் பி. எஸ். ஜி. தொழிற்சாலையிலேயே செய்தது என்பதைக் கேட்கும்போது தலை சுற்றுகிறது. ஜெர்மனியிலிருந்து பழைய இயந்திரம் ஒன்றை வாங்கினார்களாம். அதில் சில பகுதிகள் இல்லாமல் இருந்தனவாம். அந்தப் பகுதிகளை மட்டும் இங்கேயே தயாரித்துப் போட்டார்களாம். இயந்திரம் வேலை செய்ய ஆரம்பித்தது. பிறகு அதைப் போலவே இயந்திரத்தைத் தயாரித்து



ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரன்
(பி.எஸ்.ஜி. தொழில் கல்லூரி
பிரின்ஸ்பால்)

விட்டார்கள். இதுபோன்ற இயந்திரம் இங்கு தயாரித்ததில் பல ஆயிரம் ரூபாய்கள் மீதமானதுடன், விரைவிலும் செய்து முடித்து விட்டார்களாம். அத்துடன் இது போன்ற இயந்திரம் செய்யும் கலையில் பல தொழில் நிபுணர்களும் தயாராகி விட்டார்களாம்!

இந்த இயந்திரம்தான் என்ன என்ன வேலைகளைச் செய்கிறது! பெரிய இரும்புத் துண்டுகளைப் பலமாதிரியாக வெட்டுகிறது. பல கோணங்களில் இழைக்கிறது. விதம் விதமான பல் சக்கரங்கள் செய்கிறது. நினைத்த இடத்தில் நினைத்த மாதிரி துளைகள் போடுகிறது! இன்னும் என்ன வேண்டுமானாலும் இந்த இயந்திரத்தைக் கொண்டு செய்து கொள்ளலாம்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், ''இது என்ன அதிசயம்?'' என்று எண்ணத் தோன்றும். ஆனால் இதுபோன்ற யந்திரம்தான் பெரியதொழிற்சாலைக்கு ஜீவநாடி போன்றது. இந்த இயந்திரங்களை மேல் நாட்டிலிருந்து தருவித்தால் அத்துடன் அதை இயக்குவதற்கு ஓர் ஆளும் வரவேண்டும். அப்படியும் அதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு விட்டால் பல மாதங்கள் அந்த இயந்திரம் ஓடாமல் நிற்க வேண்டியது தான். மேல்நாட்டிலிருந்து அது சம்பந்தமான வேறொரு நிபுணர் வந்துதான் இயந்திரத்தை ஓட்ட வேண்டும். அந்தத் தொல்லைகள் எல்லாம் இல்லாமல் தமிழ் நாட்டில், கோயமுத்தூரில் இதோ நம்கண் எதிரிலேயே பெரிய பெரிய ராட்சஸ இயந்திரங்களை மிகத் திறமையாகச் செய்கிறார்கள் என்றால் அதிசயமல்லவா?

பி.எஸ்.ஜி. தொழிற்சாலையில் நாம் கட்டாயம் பார்க்க வேண்டிய பகுதிமின்சார மோட்டார்களும், தண்ணீர் இறைக்கும் இயந்திரக் குழாய்களும் தயார் செய்யும் பகுதியேயாகும்.

பல இயந்திரங்களை இயக்குவிக்கும் மின்சார மோட்டார்கள் பல ரகங்களில் இங்கு தயாராகின்றன. ஒன்று முதல் இருபது குதிரை வேகம் வரையில் மின்சார மோட்டார்கள் உற்பத்தி செய்கிறார்கள்.

''இவைகளுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் இங்கேயே தயாராகின்றனவா?'' என்று கேட்டேன்.

''இரண்டொன்றைத் தவிர மற்ற எல்லாப் பாகங்களும் இங்கேயே தயார் செய்கிறோம்'' என்றார் உடன் வந்த நண்பர்.

''என்னென்ன பகுதிகள் வெளிநாட்டிலிருந்து வருகின்றன?''

''பால்பேரிங்கும், சில இன்ஸுலேட்டிங் பொருள்களும் வெளியிலிருந்து வருகின்றன?''

''அவைகளையும் இங்கேயே தயார் செய்ய முடியாதோ?''

''பேஷாகச் செய்யலாம். சர்க்கார் இது போன்ற தொழிலுக்கு இன்னும் கொஞ்சம்

ஊக்கமும், இதற்கான தொழில் ஆராய்ச்சி நிலையங்களும் கட்டி உதவினால் அவைகளையும் இங்கேயே செய்து விடலாம்.''

''மற்றச் சாமான்கள் எல்லாம் தயார் செய்வது போல அவற்றையும் ஏன் நீங்களே தயார் செய்யக் கூடாது?''

''அவற்றைத் தயார் செய்தால் அதிகமான பொருள் விரயம் ஏற்படும். மின்சார மோட்டாரைக் குறைந்த விலையில் மக்களுக்குக்கொடுக்க முடியாது. ஆனாலும் விரைவில் அந்தப் பாகத்தையும் தயார் செய்யத்தான் போகிறோம்'' என்றார் நண்பர்.

மின்சார மோட்டார்களைத் தொழிலாளர்கள் செய்வதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அடடா! அந்தத் தொழிலாளர்களின் கை விரல்களில்தான் எத்தனை லாகவம்! எப்படி எப்படி எல்லாம் அந்த விரல்கள் விளையாடுகின்றன. ஏதோ பியானோ வாத்தியத்தை ஒய்யாரமாக வாசிப்பது போல் அல்லவா அவர்கள் மின்சார மோட்டார்களைச் செய்கிறார்கள்! இவர்கள் எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டு வாலிபர்கள். பலர் சாதாரணத் தொழிலாளர்களாக இருந்து இதில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள்.


அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டேன். அவர்கள் சொன்ன பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டியது. எந்தவிதமான இயந்திரத்தையும் வெகு சுலபமாக இங்கேயே செய்து விடலாம். அதற்கு வேண்டிய ஊக்கமும் உற்சாகமும் தான் தேவை என்று கூறினார்கள் தொழிலாளர்கள்.


இந்தச் சமயத்தில் 'சோ!' என்று பெரிய சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். ஒரு குழாயின் மூலம் குற்றாலம் அருவி போல் தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து வியந்து போனேன்.


என்னுடைய வியப்பை உணர்ந்து கொண்ட என்னுடன் வந்த நண்பர், ''தண்ணீர் இறைக்கும் இயந்திரக் குழாயைப் பரிசோதனை செய்து பார்க்கிறார்கள்'' என்றார்.

வீட்டுக் கிணற்றிலிருந்து நதிப் பாசனம் வரையில் பலதரப்பட்ட தண்ணீர் இறைக்கும் இயந்திரக் குழாய்கள் அங்கு தயாரிக்கப்படுகின்றன. இந்த நீர் இறைக்கும் இயந்திரக் குழாய்களுக்கு வேண்டிய அத்தனை பகுதிகளுமே பி. எஸ். ஜி. தொழிற்சாலையில் தயாராகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒன்றுமுதல் இருபத்து நான்கு அங்குல அளவு வரையில் உள்ள குழாய்களும், அதற்கான தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களும் இங்கு ; தயாராகின்றன. அதாவது நிமிஷத்துக்கு ஐந்து காலன் முதல் பதினையாயிரம் காலன் வரை தண்ணீர் இறைக்கும் திறன் உள்ள இயந்திரங்கள். இந்த இயந்திரங்களைக் கொண்டு இப்பொழுது கிராமங்களில் கூடத் தண்ணீர்த் தட்டு இல்லாமல் விவசாயம்செய்ய முடிகிறது. விவசாயிகளுக்கு பி. எஸ். ஜி.









1. பி. எஸ். ஜி. தொழிற்சாலையிலே தயார் செய்த தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள். 2. 'பிளேனிங்' இயந்திரத்தில் இரும்பு இழைக்கப்படுகிறது. 3. கனயந்திரப் பகுதியின் ஒரு தோற்றம். 4. 'ஆல் கியர் லேத்' என்னும் அதிசய இயந்திரம் உருவாகிறது.

தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் ஒரு வரப் பிரசாதம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இதைத் தவிர இன்னும் பல பெரிய இயந்திரங்களையும் அங்கு தயார் செய்கிறார்கள். உற்பத்தித் தொழிற்சாலைக்கும், பழுது பார்க்கும் தொழிற்சாலைக்கும் வேண்டியவைகளுக்கு, பிளானிங் இயந்திரங்கள், மில்லிங் இயந்திரங்கள், டிரில்லிங் இயந்திரங்கள், ஹேக்சாயில் இயந்திரங்கள் முதலிய பல தரப்பட்ட இயந்திரங்களையும் தயாரித்து வருகிறார்கள். இதன் மூலம் தொழில் உற்பத்தியைப் பெருக்கி நாடு தொழில் துறையில் வேகமாக வளருவதற்கு அடிகோலி இருக்கிறார்கள்.

இந்த இயந்திரங்கள் தவிர எண்ணெய் உற்பத்தித் தொழில், கட்டடத் தொழில், ரஸாயனத் தொழில் முதலிய பல தொழில்களுக்கு வேண்டிய இன்னும் பல இயந்திரங்களையும் நிர்மாணித்து நாடெங்கும் அத்தொழில்கள் நடைபெறுவதற்கு உதவி வருகிறார்கள்.

இந்த இயந்திரங்கள் உருவாக்கும் பகுதியைப் பார்க்க வேண்டாமா? அதோ தெரிகிறதே, அதுதான் அந்தப் பகுதி.



ஸ்ரீ ஜி. ஆர். கோவிந்தராஜுலு
(பி. எஸ். ஜி. தர்ம ஸ்தாபனங்களின் கரஸ்பாண்டெண்ட்)

''மண்ணில் என்னென்னவோ பள்ளம்பள்ளமாகச் செய்திருக்கிறார்களே, அது என்ன?''

''அதுதான் இயந்திரங்களின் அச்சு.''

''அதில் என்ன செய்வார்கள்?''

''இரும்பைக் காய்ச்சி உருக்கி இந்தப் பள்ளங்களில் விடுவார்கள். இரும்பு அந்தப் பள்ளங்களில் உள்ளதுபோல் உருவம் பெற்றுவிடும். அதாவது விநாயகர் சதுர்த்தியின் போது பிள்ளையார் அச்சில் களிமண்ணைப் பிசைந்து வைத்து எடுத்தவுடன் பிள்ளையார் வருகிறாரல்லவா அதைப்போலத்தான்!''

அடாடா! இந்தப் பகுதியில்தான் எத்தனை நிபுணர்கள் தொண்டாற்றுகிறார்கள். எவ்வளவு கவனமாக இயந்திரங்களுக்கு வேண்டிய அச்சுகளைத் தயாரிக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தொழில் நிபுணர்களாகவும் சிறந்த கலைஞர்களாகவும் இருக்கிறார்கள்.

கன்னங்கரேல் என்று காட்சி அளிக்கும் இரும்பு செக்கச்செவேல் என்று செந்நிறக் குழம்பாக உருகி விடுகிறது. அந்த இரும்புக் குழம்பை எடுத்து வந்து இயந்திரங்களுக்கான அச்சில் மெதுவாக விடுகிறார்கள். இரும்புக் குழம்பு இயந்திர அச்சுக் குழிக்குள் பாய்ந்து கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் கண்ணையும் கருத்தையும் கவரும் இயந்திரங்களாக மாறுகின்ற மாயத்தை நேரில் பார்த்துத்தான் அனுபவிக்க வேண்டும்.

** ** **

இந்தத் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும் போது எனக்கு ஒரு கேள்வி மட்டும் எழுந்து கொண்டே இருந்தது. பல நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை செய்யும் தொழிற்சாலையில் ஒரு தூசு துப்பட்டை இல்லாமல் சுத்தமாக இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டேன்.

''பார்த்தீர்களா? நம்மில் சிலருடைய வீடுகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் எவ்வளவு குப்பையும் கூளமுமாயிருக்கின்றன? பலவிதமான குப்பைகள் சேரக் கூடிய இந்தத் தொழிற் சாலையில் ஒரு குப்பை கூட இல்லையே!'' என்று வியந்தேன்.

''இங்கு தொழில் பயிலுவதுடன் கண்ட இடங்களில் குப்பை கூளங்கள் போடாமல் சுத்தமாக இருப்பதற்கே முதலில் போதிக்கப்படுகிறது. அத்துடன் சுத்த வடிவமாகத்தான் கடவுளே இருக்கிறார். கடவுளை வழிபடுவதே சுத்தமாக இருப்பதுதானே'' என்று பெரிய தத்துவார்த்தப் பிரசாரமே செய்துவிட்டார் அந்த நண்பர்.

ஆமாம்; அவர் சொல்வதும் உண்மைதான் அல்லவா? தொழிலும் பக்தியும் கலந்து வளர்ந்தால் தானே நாமும் நாட்டு மக்களும் உயர முடியும்.


இதற்கு மேல் அவரை ஒன்றும் கேட்க விரும்பவில்லை. அப்படி ஏதாவது கேட்டால், 'இன்னொரு பகுதி இருக்கிறது. அதை அவசியம் பார்க்க வேண்டும்' என்று சொல்லிவிட்டு அங்கு அழைத்துப் போய் அதைப் பற்றி ஏதாவது பிரசங்கம் ஆரம்பித்து விடுவாரோ என்று எனக்குப் பயம். ஆகவே அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு பி. எஸ். ஜி. தொழிற்சாலையை விட்டு வெளியே வந்தேன்.

** ** **

தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போதெல்லாம் எனக்குத் தோன்றியது என்னவென்றால் இதுபோன்ற தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஜில்லாவிலும் தோன்ற வேண்டும். அவ்வாறு தோன்றுவதற்கு உடனடியாகச் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் ஆவல் உள்ள எத்தனையோ செல்வந்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பி. எஸ். ஜி. தொழிற்சாலைக்குச் சென்று ஒரு முறை பார்வையிட வேண்டும். அதைப் போன்ற தொழிற்சாலைகள் தங்கள் தங்கள் ஊரில் ஏற்படுவதற்குப் பிரயத்தனம் செய்ய வேண்டும். எல்லா தர்மங்களிலும் சிறந்த தர்மம் இதுதான். இந்தக் காலத்தில் செய்ய வேண்டிய அவசியமும் அவசரமுமான தர்மம் இதுதான். இவைபோன்ற தொழிற்சாலைகளை நாடெங்கும் ஏற்படுத்தினால் நம்முடைய வருங்காலச் சந்ததிகள் தொழிற்சாலைகளைப் பார்த்து, ''இதுவன்றோ தர்மம்!'' ''இதுவன்றோ தர்மம்!'' என்று சொல்லி மகிழ்வார்கள்.


படகிற்
செல்லுங்கால்..
தோல்வி
யுறுங்கால்..
தேர்ந்தெடுக்
குங்கால்..
நான் விரும்பி
தின்பது
பார்லேயின்
மொனகோ
உப்பிட்ட
பிஸ்கட்டுகள்
MONACO
முதலாவதும் சிறந்ததுமான உப்பிட்ட பிஸ்கட்டுகள்
PM 55-1. TA.



ரேடியோ மூலம் விளையாட்டை அனுபவியுங்கள்!

உங்கள் வீட்டில் ஒரு ரேடியோ எவ்வளவு மாறுதலை ஏற்படுத்துகிறது. பலவிதமான கதம்ப நிகழ்ச்சிகள் உங்கள் குடும்பத்தில் எல்லோருக்குமே ஆனந்தத்தை அளிக்கும்.

மேலும் ஞாபகமிருக்கட்டும்— நீங்கள் மின்சார சக்தியில்லாத இடத்திலிருந்தாலும், பாட்டரி சக்தியால் இயங்கும் ரேடியோ மூலம் அதே ஆனந்தத்தை நீங்கள் அனுபவிக்கலாம்.

"NINE 9 LIVES"
TRADE-MARK

இன்றே உங்கள் ரேடியோ வியாபாரியிடம் இதைப்பற்றி கேளுங்கள்

EVEREADY
TRADE-MARK

'எவரெடி' ரேடியோ பாட்டரிகள்

நாஷனல் கார்பன் தயாரிப்புகள்

NCH 684

உ. சொக்கனின் காதல்



அபலை அஞ்சுகம்

மேகராஜபுரம் என்னும் கிராமம் தேவிப்பட்டினத்திலிருந்து வடக்கே நான்காவது மைலில் இருக்கிறது என்று சரளா தேவி சொன்னது அஞ்சுகத்துக்கு நன்றாக நினைவில் இருந்தது. ஆனால் தேவிப்பட்டினத்தை நினைத்தாலே அவளுக்கு மனத்தில் திகிலும் வெறுப்புமாகத்தான் இருந்தது. ஏன் இருக்காது? அவள் வெள்ளிக் கிண்ணத்தைத் திருடியதாகப் போலீஸ்காரர்களால் பிடிக்கப்பட்டது அந்த ஊரில்தான். வாழ்க்கை நெறி தவறிய சில ஜனங்களிடையே வாழும் விதி அவளுக்கு இருந்தது. அவர்களிடையே வாழ்ந்ததின் காரணமாகத்தான் அவள் சிறை செல்ல நேர்ந்தது. அவள் மற்றக் கைதிகளைப் போல் சாதாரண முறையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தால் வேறு வழியில்லாமல் நெறி தவறிய ஜனங்களிடையே தான் வந்து சேரும்படி இருந்திருக்கும். ஆனால் சிறை நிர்வாகி சரளாதேவியிடமிருந்து ஒரு கௌரவமான இடத்துக்குச் சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொண்டு வந்திருப்பதால் முன்பு தன்னோடு பழகிய கேவலமான பிறவிகளிடம் அவள் நெருங்க வேண்டாமல்லவா? அவர்களைப் பற்றி நினைக்கவே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. அவளுக்குத் தேவிப்பட்டினத்தை மனத்தால் நினைக்கவும், பார்க்கவுமே அருவருப்பாகவும் பயமாகவும்இருந்தது. என்ன செய்வது? தேவிப் பட்டினத்துக்குப் போய்த்தானே அவள் மேகராஜபுரத்துக்குப் போக வேண்டும்? ஆனால் தேவிப் பட்டினம் ஸ்டேஷனில் இறங்கி நகரத்துக்குள் சென்றதும் தனக்குத் தெரிந்தவர்கள் கண்ணில் பட்டுவிடப் போகிறோமே என்ற திகில் ஒரு புறம் அவளுக்கு ஏற்பட்டது. தனக்குப் பழக்கமான எந்த முகத்திலும் படாமல் நேராக மேகராஜபுரம் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்று எண்ணி நடந்தாள்.

அஞ்சுகத்துக்கு வயது இருபது; இந்த வயதில் ஒரு பெண் உலகத்தில்

கி. ரா. கோபாலன்



எவ்வளவு அனுபவம் அடைந்தவளாக இருக்க முடியும்? அதுவும் சிறு வயதில் கிராமத்திலேயே வாழ்க்கை நடத்தி அனாதையாக, தகாதவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு பேதைப் பெண் உலகத்தைப் பற்றி எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கப் போகிறாள்?

தேவிப் பட்டினத்துக்குப் பத்து மைல் தூரத்தில் இருக்கும் சின்னாம் பட்டியில் இருந்த அஞ்சுகத்தின் குடும்பம் மிகவும் செல்வ நிலையில் செழித்ததுமல்ல, வறுமை நிலையில் வாடியதுமல்ல! கொஞ்சம் நில புலன்கள் உள்ள சிறு குடும்பம். தாய் தகப்பனுக்கு அஞ்சுகம் ஒரே பெண். கஷ்டமில்லாமல் கௌரவமாக வாழ்வதற்கு வேண்டிய வசதிகளெல்லாம் அந்தக் குடும்பத்துக்கு இருந்தன. ஆனால் குடும்பத் தலைவன் ஒழுங்காக இல்லாத எந்தக் குடும்பம் தான் உருப்பட்டிருக்கிறது? அஞ்சுகத்தின் தகப்பன் கந்தப்பன் சூது, களவு, பெண்ணாசை, போக்கிரித்தனம், இவைகளிலெல்லாம் கை தேர்ந்தவனாக இருந்தான். அவன் குணத்துக் கேற்பத் தகாத நண்பர்களும் அவனுக்கு ஏராளமாக ஏற்பட்டார்கள். அவர்களால் அவன் இருமுறை சிறைவாச அனுபவமும் பெற்றான். அஞ்சுகத்தின் தாய் நல்ல குடும்பத்தில் உதித்த குணவதி. தன் கணவன் நடத்தையைக் கண்டு சகிக்காமலேயே அவன் உயிரை விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கிராமத்தில் கந்தப்பனுக்கு இருந்த சிறிது நிலம், வீடு எல்லாம் போய்விட்டன. அவன் தன் மகளை அழைத்துக் கொண்டு சிநேகிதர்களின் யோசனையின் பேரில் தேவிப் பட்டினத்துக்கு வந்து சேர்ந்தான்.



சரித்திரப் பிரசித்தியும், அழகும், கண்ணியமான மனிதர்களும் நிறைந்த நகராகிய தேவிப் பட்டினத்தில் திருடர்களும், போக்கிரிகளும், சூதாடிகளும் கூட இருந்தனர். ஒழுங்கான வாழ்க்கையில் ஈடுபட்டவர்களும் கண்ணியமானவர்களும் சேர்ந்து வசிப்பது போலப் போக்கிரிகளும், திருடர்களும் நகரத்தில் ஓரிடத்தில் சேர்ந்துதான் வாழ்ந்து வந்தனர்.


அங்காடிப்பேட்டை ஊரிலேயே பெயர் போன இடம்: அங்கே தான் ரௌடிகள், திருடர்கள், சூதாடிகள் இவர்களெல்லாம் குடும்பத்தோடு வசித்து வந்தார்கள். அங்கேதான் கந்தப்பனுக்கு வேண்டிய நண்பர்களும் இருந்தனர். அங்கு தான் அவன் தன் பெண்ணுடன் வந்து வசிக்கலானான். அங்காடிப் பேட்டையில் சுமார் ஐம்பது வீடுகள் இருந்தன. அந்த வீடுகளில் எந்த வீட்டிலிருப்பவர்களும் யோக்கியர்களில்லை. தவறிப் போய் நல்லவர்களாக யாரேனும் அந்தப் பேட்டையில் குடியேறினாலும் வெகு சீக்கிரம் கெட்டவர்களாகி விடுவார்கள். ஆண் பிள்ளைகள் மாத்திரம் தகாத தொழில் புரிபவர்கள் அல்ல. பெண்களும் அப்படிப்பட்டவர்கள்தான். எந்த நிமிஷமானாலும் போலீஸ்காரர்கள் வருவார்கள். யாரை வேண்டுமானாலும் எந்தக் குற்றத்துக்காகவும் கைது செய்து கொண்டு போவார்கள். இது சகஜம். அப் பேட்டையில் உள்ள ஆண் பெண்களில் முக்கால்வாசிப் பேர்கள் சிறை அனுபவம் பெற்றவர்கள். இரவு வேளையில் பெரிய வீடுகளிலும் மற்ற இடங்களிலும் கன்னம் வைத்தும், சுவரேறிக் குதித்தும் கொள்ளை அடிப்பார்கள். பகல் வேளையிலோ, கடைத் தெருவிலோ, மற்ற இடங்களிலோ பிறர் அயர்ந்திருக்கும்போது சாமான்

கனையோ பணத்தையோ அடித்துக் கொண்டு ஓடி மறையும் தொழிலையுடையவர்கள். முடிச்சவிழ்ப்பவர்கள், வழிப்பறி செய்பவர்கள், மூன்று சீட்டு வைத்துச் சூதாடுபவர்கள், அகடவிகடம் செய்து பிறரை ஏமாற்றிப் பணம் பறிப்பவர்கள், கள்ளச் சாராயம் தயார் செய்பவர்கள், பணம் வாங்கிக் கொண்டு ஒருவனை அடிக்க வேண்டுமா, கலகம் செய்ய வேண்டுமா, கொல்ல வேண்டுமா, எதற்கும் தயாராக இருப்பவர்கள், - இப்படிப்பட்ட ரகத்தினர் எல்லாரும் அந்தப் பேட்டையில் தானிருப்பார்கள். இத்தகைய நல்ல காரியங்களுக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த ரௌடிகள் என்ற தியாக மூர்த்திகள், நெறி தவறிய பெண்கள் இத்தகையோருக்கெல்லாம் இடமளித்திருந்ததினால் மிகப் பெருமையும் பிரசித்தியும் அடைந்திருந்தது அந்தப் பேட்டை! ஊரில் எங்காவது களவு, கொலை, கலகம் எது நடந்தாலும் அங்காடிப் பேட்டை ரௌடிகளைத் தான் முதலில் நினைப்பார்கள். இதனால் அந்த இடத்துக்கு ஒரு பிரசித்தி!

கந்தப்பன் அந்தப் பேட்டைக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள் அஞ்சுகத்தை வெற்றிலைக் கடைக் குப்பம்மாளின் பாதுகாப்பில் விட்டுவிட்டுப் பரலோகப் பிராப்தி அடைந்து விட்டான். இளமையும் அழகும் பொருந்திய அஞ்சுகம் குப்பம்மாள் என்னும் பைசாசத்தின் ஆக்ஞைக்கு அடங்கி உயிர்வாழ வேண்டியவளானாள்.

குப்பம்மாள் அந்தப் பேட்டையில் உள்ள பெண்களிலேயே வயதிலும் அனுபவத்திலும் தலை சிறந்த பெண் போக்கிரி. அவளுடைய சரித்திரமே அலாதி! மிகக் குலப் பெருமை கொண்டவள். அவள் தகப்பன் பிரசித்தமான திருடன். களவுத் தொழிலைத் திறம்படக் கற்று உணர்ந்து பல வித அற்புத லீலைகளெல்லாம் செய்தவன். அவன் போத்தியம்மன் காட்டிலும் பொன்னியம்மன் காட்டிலும் ஒளிந்து கொண்டிருந்து, போலீஸார் கையில் அகப்படாமல் செய்த அட்டகாசங்களைப் பற்றி எழுந்த நாட்டுப் பாடல்களை இன்று வரை குப்பம்மாள் எல்லோரிடமும் பாடிக் காட்டுவாள். அவளுடைய தகப்பன்தான் அப்படி யென்றால் அவளுடைய கணவன் மூக்கன் அசாத்திய சூரன். குப்பம்மாளின் தகப்பன் கொலை வெட்டி ஆறுமுகத்தின் முதல் சீடன் மூக்கன் என்றால் கேட்க வேண்டுமா? குருவுக்கு மிஞ்சிய திறமைசாலி. கொலை வெட்டி ஆறுமுகம் காட்டில் தலை மறைவாக இருந்து அதிசயங்களெல்லாம் செய்தானென்றால் அவன் சீடன் நகரத்திலேயே தலை மறைவாக இருந்து பலவித அற்புதங்களெல்லாம் செய்தவன். இப்படிப்பட்ட வீர தீரம் நிறைந்த மூக்கனைக் குப்பம்மாள் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டால் அதில் அதிசயமென்ன? இளமைப் பருவத்தில், தான் மிகவும் அழகாக இருந்ததாகச் சொல்லிக் கொள்ளும் குப்பம்மாளுக்கு இப்பொழுது வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். தகப்பனும் கணவனும் இறந்து விட்டாலும் அவர்களிடம் கற்றுக்கொண்ட வித்தையைத் தானும் செய்து இரண்டு முறை சிறை அனுபவமும் பெற்று வயதானதின் காரணமாகத் தன் பெட்டிக்கடையில் உட்கார்ந்த வண்ணம் அனேகருக்குத் தொழில் அனுபவங்களைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். பேச்சு, உடை, பாவனை எல்லாவற்றிலுமே அவளிடம் ஒரு விசேஷத் தன்மை பரிமளிக்கும். இலங்கைக்கு இலங்கிணி காவல் இருந்தாற்போல் அந்தப் பேட்டையைக் காக்கும் அதிதேவதை போல் அவள் இருந்தாள். அவள் கடைக்கு வரும் வாடிக்கைக்காரர்களெல்லாம் திருடர்களும் போக்கிரிகளும்தானே? அவர்களுக்கெல்லாம் வயதிலும் அனுபவத்திலும் சிறந்த அவளுடைய யோசனைகள் வேண்டியிருந்தன. மற்றக் கடைகளில் அரையணா கொடுத்தால் வெற்றிலை பாக்கோ பீடியோதான் கிடைக்கும். குப்பம்மாளின் கடையில் அரையணா கொடுத்தால் வெற்றிலை பாக்கு பீடியோடு திறமையான தொழில் நுணுக்கமும் அல்லவா கிடைக்கிறது? இதனால் குப்பம்மாளுக்கும் நல்ல வியாபாரம்; மற்றவர்களுக்கும் தொழில் துறையில் மிகுந்த சாதகம். போலீஸ்காரர்கள் வந்தால் முதலில் அவள் கடைக்கு வந்து வெற்றிலை பாக்கு வாங்கிப் போட்டுக் கொண்டு, அவளிடமே உளவு விசாரிக்க ஆரம்பிப்பார்கள். அவள் போலீசாரிடம் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்வாள். சில சமயம் அவளே போலீசாருக்கு உளவு சொல்லிக் கொடுத்து விடுவாள். இதெல்லாம் அந்தப் பேட்டையிலுள்ளவர்கள் யார் யார் அவளிடம் எந்த விதமாக நடந்து கொள்கிறார்களோ அதற்குத் தகுந்தாற் போலிருக்கும். அது அவளுக்கு ஏற்படக் கூடிய லாபத்தைப் பொறுத்தும் இருக்கும்.

வெற்றிலைக் கடைக் குப்பம்மாள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அஞ்சுகத்தைச் சரியான திருடன் ஒருவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க நினைத்தாள். அவள் எப்படி ஒரு சிறந்த திருடனுக்கு வாழ்க்கைப்பட்டாளோ அப்படித்தானே தன்னிடம் வளரும் பெண்ணையும் ஒரு சிறந்த திருடனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை ஏற்படும்? அஞ்சுகம் போன்ற ஒரு அழகான பெண்ணைச் சாதாரண வாலிபன் ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுத்தால் அழகாயிருக்குமா? அந்தப் பேட்டையிலுள்ள அநேக வாலிபர்களுக்கு



பெண்மணி:—ஏன் ஐயா, பேர்ச்சம்பழக்காரரே! நீங்க ஓட்டை உடைசலாக ஒரு வண்டியைத் தள்ளிக் கொண்டு வருவீரே, அது எங்கே?

பேரிச்சம்பழக்காரர்:—அதுவா? அதைப் போட்டுத்தான் பேரிச்சம்பழம் வாங்கி வந்து விட்டேன், அம்மா!

அஞ்சுகத்தைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆசை. ஆனால் அவர்களெல்லாம் அவ்வளவு தகுதியுள்ளவர்களாக அவளுக்குப் படவில்லை. அந்தப் பேட்டையிலுள்ள சில சாமர்த்தியமான பெண்களோடெல்லாம் அஞ்சுகத்தைப் பழக விட்டாள் குப்பம்மாள். ஏனென்றால் அவர்களிடமிருந்தெல்லாம் அஞ்சுகம் அநேக விஷயங்கள் தெரிந்து கொண்டு அனுபவப்பட வேண்டுமல்லவா?

அந்தப் பேட்டையிலேயே மாயக்காரி தங்கம்மா என்பவள் கொஞ்சம் பெயரெடுத்த பெண். அவள் எங்கிருந்தாவது ஒரு பண்டத்தை எடுத்தாளானால் அடுத்த வினாடி அவளோ அவள் எடுத்த சாமானோ மாயமாய் மறைந்து போய் விடுவதுதான் அதிசயம். இதுதான் அவளிடம் உள்ள தொழிலின் தனிச் சிறப்பு. அந்தப் பேட்டையிலுள்ள பிரசித்தியான திருடர்கள் கூட அவளிடம் ஏதோ மந்திர சக்தியோ மாய சக்தியோ இருப்பதாக நம்பினர். மாயக்காரி தங்கம்மாளிடம் பழக விட்டால்தான் அஞ்சுகத்துக்கும் அந்த மாயக் கலை நுணுக்கங்கள் சிறிது தெரியுமென்று குப்பம்மாவின் அபிப்பிராயம்.

ஒரு நாள் மாயக்காரி தங்கம்மா பெரிய மனிதர் வீட்டுப் பெண் போல் ஆடம்பரமாக ஆடை அணிந்து கொண்டு கடைத் தெருவுக்குப் போனாள். குப்பம்மாள் அஞ்சுகத்தையும் நன்றாக அலங்காரம் செய்து அவளோடு கடை வீதிக்கு அனுப்பினாள். தங்கம்மா ஒரு பெரிய வெள்ளிப் பாத்திரக் கடைக்குள் நுழைந்தாள். அஞ்சுகமும் அவளோடு சென்றாள். தங்கம்மா ஏதோ பாத்திரம் வாங்க நினைப்பவள்போல் பல பாத்திரங்களை எடுத்துப் புரட்டிவிட்டு ஒன்றும் பிடிக்காதவள் போல் அஞ்சுகத்தை அழைத்துக் கொண்டு கடைக்கு வெளியே வந்தாள். அவ்வளவுதான்! திடீரென்று தங்கம்மா தன் கையிலிருந்த வெள்ளிக் கிண்ணத்தை அஞ்சுகத்தின் கையில் கொடுத்து விட்டு மாயமாய் மறைந்து விட்டாள். அடுத்த கணம் கடைக்குள் இருந்தவர்கள் வெளியே ஓடி வந்து அஞ்சுகத்தை வளைத்துக் கொண்டனர். சொல்லி வைத்தாற்போல் ஒரு போலீஸ்காரரும் அங்கு வந்து சேர்ந்தார். அவரிடம் அஞ்சுகம் ஒப்படைக்கப்பட்டாள். பாவம்! தங்கம்மா எங்கு மறைந்தாளென்று கடைக்காரருக்கும் தெரியாது; போலீஸ்காரருக்கும் தெரியாது; அஞ்சுகத்துக்கும் தெரியாது.

அஞ்சுகம் கடையில் புகுந்து வெள்ளிப் பாத்திரத்தைத் திருடிய குற்றத்துக்காக ஆறு மாதம் தண்டிக்கப்பட்டாள். தங்கம்மாள்தான் அந்தப் பாத்திரத்தைத் திருடிக் கொடுத்து விட்டு ஓடிவிட்டதாக அஞ்சுகம் தன் வாக்குமூலத்தில் சொன்னாள். போலீஸ்காரர்கள் தங்கம்மாவையும் தேடினர். அவள் அகப்படவில்லை. அவள்தான் மாயக்காரியாயிற்றே......? தன்னை விடுவிக்க வெற்றிலைக் கடைக் குப்பம்மாள் ஏதேனும் முயற்சி செய்வாள் என்று முதலில் அஞ்சுகம் நம்பினாள். அவள் நம்பிக்கை வீணாயிற்று! அந்தச் சிறு விஷயத்தில் சாமர்த்தியமாக நடந்து கொள்ளத் தெரியாத பெண்ணுக்கு ஒரு தடவை சிறை சென்று வந்தால்தான் புத்தி வரும் என்று குப்பம்மா விட்டுவிட்டாள். இது அவள் அனுபவத்தில் தெரிந்து கொண்ட உண்மையல்லவா?

'அஞ்சுகம் சிறையிலிருந்து விடுதலையாகித் தன்னிடம்தானே வரவேண்டும்? அவளுக்குப் போவதற்கு உலகத்தில் வேறு இடமேது?' என்று குப்பம்மாள் மனக் கோட்டை கட்டி வந்தாள்.

* * *

அஞ்சுகத்துக்கு அங்காடிப் பேட்டையிலுள்ள எந்த ஜீவனின் முகத்தில் விழிக்கவும் வெறுப்பாக இருந்தது. தேவிப் பட்டினம் ரயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்கிய அவள் யார் கண்ணிலும் படாமல்

நேராக மேகராஜ புரத்தை நோக்கிப் போய்விட வேண்டுமென்ற தீர்மானத்தோடு வேகமாக நடந்தாள். யாரேனும் தன்னைப் பார்த்து விடுவார்களோ என்ற திகிலோடும் அச்சத்தோடும் மிரள, மிரளப் பார்த்துக் கொண்டே அவள் நடந்தாள். அதி வேகமாக நடந்து கொண்டிருந்த அவளைச் சட்டென்று தடுத்து நிறுத்துவது போல எதிரில் ஒரு உருவம் வந்து நின்றது.

அஞ்சுகம் அந்த உருவத்தைப் பார்த்ததும் நடு நடுங்கி நின்று விட்டாள். அவளுடைய அச்சமும் திகைப்பும் தணியச் சிறிது நேரம் பிடித்தது. தன் எதிரில் நிற்பது யாரென்று அவள் மிக எளிதில் உணர்ந்து கொண்டாள். ஒரு வெறுப்புக் கலந்த சிரிப்பு அவள் முகத்தில் நெளிந்தது. அவள் எதிரில் நின்ற வாலிபன் தன் சட்டைக் காலரை நன்றாகத் தூக்கி விட்டுக் கொண்டு கட கட வென்று ஒரு சினிமாச் சிரிப்பு சிரித்தான்.

அவளுக்கு அந்த வாலிபன் யாரென்று தெரியும். அவனோடு சிறிது பேசிப் பழக்கமும் உண்டு. அவன் வேறு யாருமல்ல, அங்காடிப் பேட்டையில் உள்ள தீர வாலிபர்களில் ஒருவன். அவன் பெயர் சொக்கன். ஆனால் எல்லோரும் 'சண்டப் பிரசண்டன்' என்று அவனைக் கூப்பிடுவார்கள். திருடுவதை விடப் பேசுவதில் மகா தீரன். அரசியல், மதம், பொருளாதாரம், சினிமா, சங்கீதம் எதைப் பற்றிப் பேச வேண்டும்? யாரிடம் எதைப் பற்றிப் பேசி மயக்கி ஏமாற்ற வேண்டுமென்று தெரிந்து பேசி ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் நிபுணன். அவனுக்கு எல்லா பாஷையிலும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். அவனுடைய பேச்சில் வெற்றிலைக் கடைக் குப்பம்மாளே சிறிது மயங்கி இருக்கிறாள் என்றால் கேட்க வேண்டுமா? ஏன், அஞ்சுகத்துக்குக் கூட அவன் பேச்சில் கொஞ்சம் மயக்கம் ஏற்பட்டதுண்டு. இந்தப் பேச்சின் காரணமாக அவனிடம் சிறிது மதிப்புக் கூட அவளுக்கு இருந்தது. எல்லாவற்றையும் பற்றி இவ்வளவு அறிந்து மேதாவியாகப் பேசுகிறவன் ஏன் இந்தக் காலிகளோடும், திருடர்களோடும் சேர்ந்து திரிய வேண்டும் என்றுதான் அவளுக்குச் சிறிதும் புரியவில்லை.

சொக்கனிடம் அவளுக்குச் சிறிது மதிப்பு இருந்ததே தவிர முற்றிலும் யோக்கியனென்று அவனை அவள் நம்பிவிடவில்லை. அதுவும் இந்தச் சமயம் சொக்கன் அவள் எதிரில் தோன்றியது, அவளுக்கு மிகுந்த வெறுப்பை அளித்தது. அவள் அவனுடைய முகத்தைப் பார்க்கவே அஞ்சினாள். எப்படியாவது அவனிடமிருந்து தப்ப வேண்டுமே என்பதுதான் அப்பொழுது அவள் மனத்தில் ஏற்பட்ட திகில்.

"என்ன, அஞ்சுகம்! அழகுப் பறவை இப்பொழுதுதான் கூட்டிலிருந்து விடுதலையடைந்து வந்திருக்கு போலிருக்கு—பாவம்! உடம்பு ரொம்ப இளைத்துப் போச்சு. சுதந்திரமாகச் சுற்றிப் பறந்து விளையாடும் கிளியைக் கூட்டில் அடைத்துவைத்தால்...? ஆனால் அந்த அழகு மாத்திரம் குறையல்லே......உடல் இளைத்தாலும் அழகான கிளி கிளிதானே...? உன்னைப் போலிருக்கிற பெண்களுக்கு இந்தத் தொழில் லாயக்கே யில்லே. அந்த மாயக்காரி அநியாயமாக உன்னை அழைச்சுக்கிட்டுப் போய்க் கெடுத்துப்புட்டா. உன்னையெல்லாம் கடிதாகப் பூவை மேசை மேல் வைத்து அழகு பார்ப்பது போல் சினிமாவில் நடிக்க வைத்து அலுங்காமல் பார்த்து ஆனந்தப் படணும். சரி......! இப்போ எங்கே வீட்டுக்குத் தானே......? வா, போவோம்..." என்றான் சொக்கன்.

அஞ்சுகம் அப்பொழுது அவனிடம் தன் அபிப்பிராயங்களைச் சட்டென்று சொல்லும் நிலைமையில் இல்லை. இருந்தாலும் அவர்களுடைய சகவாசத்தில் அவளுக்கு விருப்பமில்லை என்பதைத் தான் காட்டிக் கொள்ள விரும்பினாள்.

"போதும், இந்தச் சகவாசமெல்லாம் எனக்கு. மறுபடியும் அங்குதான் நான் வரவேண்டுமா? உலகத்தில் அதைவிட வேறு நல்ல இடம் எவ்வளவோ இருக்கிறது. எங்காவது போகிறேன்" என்றாள்.

அஞ்சுகத்தின் பதில் இப்படி இருக்குமென்று சொக்கன் எதிர்பார்க்கவேயில்லை. ஆறு மாத சிறைவாசத்துக்குப் பின் அவளுடைய மனத்தில் இத்தகைய மாறுதல் ஏற்பட்டிருப்பது அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கவில்லை. ஆனால் அவளைப் போன்ற அனாதைப் பெண் 'திருடி' என்று குற்றம் சாட்டப்பட்டுச் சிறைத் தண்டனையும் அனுபவித்த பின் உலகத்தில் எங்கே போய் எப்படி நல்ல பெயரோடு வாழ்க்கை நடத்த முடியுமென்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. இருதய பூர்வமாக அவனுக்கு அவள்மீது அனுதாபம் இருந்தது. அதோடு மட்டு மல்ல; இருதய அந்தரங்கத்தில் அவள் மீது அவனுக்கு ஆசை - காதல் - அவளைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவனுக்கு நெடுநாட்களாகக் கனவு. அவளை அப்பொழுது விட்டு விட்டால் எங்கேனும் போய்க் கெட்டு விடுவாள் என்று அவனுக்குத் தோன்றியது. அவளை எப்படியாவது பேட்டைக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் அவன் பிடியிலிருந்து எப்படித் தப்புவோம் என்ற குழப்பம்தான் அப்பொழுது அஞ்சுகத்துக்கு ஏற்பட்டிருந்தது. (தொடரும்)

FZY-38-TAM



Zam-Buk

ஜாம்-பெக் புண்கள், பிளவைச் சிரங்குகள்; விஷக்காயங்கள் இவை களுக்கு உடனேயே குணம் அளிக்கிறது.

விசேஷ பலனளிக்கும் ஜாம்-பெக் உலகின் மகோன்னத மான சருமக் களிம்பு. ஜாம்-பெக்கின் இதமளிக்கும், கிருமி நாசினி குணங்கள். புண்களி லிருந்து விஷத்தை நீக்குவது டன், ரணங்களை ஆற்றி, ரத் தம் வராமல் தடுக்கிறது.



ஜாம்-பெக் இதர சரும நோய்களையும் காயங் களையும் ஆற்றுவதில் அற்புத சக்தி வாய்ந்தது.

கொழுப்புச் சத்து சேர்க்கப்படாதது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸோல் ஏஜண்டுகள் :

தாதா & கம்பெனி
86, நைனியப்ப நாயக்கன் தெரு
சென்னை - 3



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவு கிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது ஞாபகசக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோ ருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில் ரூ. 3-8-0
சிறிய பாட்டில் ரூ. 2-0-0

எங்கும் கிடைக்கும்

ஆயுர்வேத மருந்து

ராம்தீர்த்

பிரம்மி எண்ணெய்

ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C. Rly.)

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க [illegible] ரூ. 1-14-0 [illegible]

சென்னை டெப்போ :
4/441, தங்கசாலைத் தெரு, சென்னை

கல்கி ஜூன் மாதச் சிறுகதைப் போட்டி நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

கல்யாண மண்டபம்

சங்கர்

அன்ன நடையில் வந்து கொண்டிருந்த செவலைக் காளைகள் இரண்டும் சித்தாற்றுப் பாலத்தைத் தாண்டி மத்தளம் பாறைச் சாலையில் கால் வைத்ததுமே சிட்டாகப் பறக்க ஆரம்பித்தன. இன்னும் கொஞ்ச நேரத்தில் வீடு வந்துவிடும்! அந்த நினைப்பே வண்டிக்காரன் மாடசாமியின் நெஞ்சிலே நெருஞ்சி முள்ளாக உறுத்த ஆரம்பித்தது. தலையைக் கவிழ்ந்த வண்ணம் சாட்டையைச் சொடுக்கினான். சாலை நெடுகிலும் விரிந்திருந்த நிழற் கோலங்கள் மாடுகளின் காலடியில் மிதிபட்டு ஓடிக் கொண்டிருந்தன.

''ஏலே, மாடசாமி! காது அவிஞ்சு போச்சாடா? நான் கேக்கறேன்: கட்டமண்ணு இருக்கிறயே?''

மாடசாமியின் கருங்காலி உடம்பு கூடக் கொஞ்சம் விலவிலத்தது. கையில் பிடித்திருந்த மூக்கணாங் கயிறு விரியன் பாம்பாக நெளிவது போல்; ஒரு உணர்ச்சி. தன்னையே மறந்த நிலையில் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான் அவன்.

ஆயிற்று; வீடு வந்து விட்டது! பத்து மணி ரயிலின் ஊதல் சத்தத்தைக் கேட்டு விட்டு வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு, பார்வதியம்மாள் வெளி வராந்தாவில் வந்து காத்துக் கொண்டு நின்றாள். வண்டி வாசலில் வந்து நின்றது. பார்வதியம்மாள் வேண்டாத தெய்வங்களை யெல்லாம் மனத்துக்குள் நினைத்துக் கொண்டு உள்ளே ஓடினாள். மாடசாமியின் பெண்சாதி இசக்கியம்மாளோ பண்ணையாரைக் கண்டதும் சற்றுப் பயந்து போய்ப் பம்மினாள். புயல் மண்டலம் கூடி வரும்பொழுது தலைவிரித்தாடும் தென்னந் தோப்பைப் போல இருந்தது நிலைமை!

''என்ன? கடுவாயைக் கண்டமாதிரி நடுங்கிச் சாகிறே!'' என்று இசக்கியம்மாளைப் பார்த்துக் கேட்டவர், ''நீங்க முழிக்கிற முழியைப் பாத்தா எனக்கு ஒண்ணும் புரியலையே!'' என்ற கூறிய வண்ணம் வீட்டுக்குள் நுழைந்தார்.

இசக்கியம்மாளின் குரல் அவரை ஒரு கணம் நிலை வாசற்படியிலேயே நிறுத்தி வைத்தது.

''எசமான், இந்த ஒரு தடவை எல்லாரையும் மன்னிச்சிடுங்க..கடவுளாப் பாத்து நெனைச்சிட்டாரு!....அம்மா என்ன செய்வாங்க....?'' இசக்கி வார்த்தையை முடிக்க முடியாமல் குழைந்தாள்.

புதிர் நிறைந்த உள்ளத்தோடு, தீப்பொறியாகக் கோபம் வந்தது பரமசிவத்துக்கு. மனைவியை ஒரு பார்வை பார்த்தார். நெற்றிக் கண் இல்லை! ஆனாலும் பார்வதியம்மாள் அந்தப் பார்வையைத் தாங்க மாட்டாமல் வெண் தாழைச் சருகைப் போல் சுருண்டு போய் விட்டாள்.





கோமுவை எங்கே காணோம்?

"பார்வதி! என்ன எல்லாரும் இப்படி வாயிலே குருணையைப் போட்டுக்கிட்டு நிக்கிறீங்க....? மறுபடியும் அந்த ராமையாப் பிள்ளை பெண் கேட்டு வந்திட்டானா? ஆங்.. என்ன விஷயம்?" என்று படபடப்புடன் கேட்ட பிள்ளைவாள், வீட்டுக்குள் தலையை வளைத்து, "கோமு! கொஞ்சம் மோர் கலக்கிக் கொண்டாம்மா. நாக்கு உலர்ந்து போச்சு!" என்றார்.

மறுகணம் அவரே எதிர்பார்க்கவில்லை. 'கோ' வென்று கதறிக் கொண்டு அவருடைய பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள் பார்வதியம்மாள். அவள் விம்மிய விம்மல் வீடு முழுவதும் எதிரொலித்தது.

"என்னை மன்னிச்சுடுங்க. கோமதி இங்கே இல்லே. அவளுக்குக் கல்யாணம் முடிஞ்சு.. அனுப்பிச்சுட்டேன்....கிருஷ்ணபுரம் மாப்பிள்ளைதான்...."

பரமசிவம் பிள்ளையின் உடம்பிலே ஆயிரம் வோல்ட் மின்சாரம் பாய்ந்த அதிர்ச்சி ஏற்பட்டது. பெற்ற தகப்பன் இல்லாமலேயே மகளுக்குக் கல்யாணம் நடந்து விட்டதா? இந்தச் சிறுக்கிக்காரிக்கு—பெற்றவள் கூட இல்லே—எவ்வளவு துணிச்சல்! பரமசிவத்துக்கு நினைப்பதற்கே நெஞ்சில்லே. யாரோ அவரைச் செந்தூக்காகத் தூக்கிக் கொண்டு போய்ப் பொங்குமாங் கடலுக்குள் தலை குப்புறத் தள்ளுவதுபோல் இருந்தது. மனைவியின் பிடியிலிருந்து கால்களை உதறும் நினைப்புக் கூட இல்லாமல் அப்படியே கல்லாய்ச் சமைந்து நின்று விட்டார்.

வெளியே மாடசாமியும் இசக்கியம்மாளும் சில விநாடிகளில் ஏற்படப் போகிற பூகம்பத்தை எதிர் நோக்கி நடுங்கியபடியே இன்னது செய்வதென்று அறியாமல் திகைத்து நின்றுகொண்டிருந்தனர்.

காரியம் தலைக்கு மேல் போய்விட்டது! பன்னிரண்டு வருஷங்கள் கன்னிமைச் சிறையில் அடைபட்டிருந்த பெண் கிளி, சுதந்திரத்துடன் சிறகடித்துப் பறந்து விட்டது! இனி வருந்திப் பயன் இல்லை!

பிள்ளையவர்கள் கண்முன்னே என்னவெல்லாமோ காட்சிகள் சுழன்று சுழன்று வந்தன. மானம், மரியாதை, கௌரவம் எல்லாம் பொடிப் பொடியாகிக் காற்றிலே கலந்து திக்கெட்டும் பறப்பதைப்போல ஒரு வேதனை. வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. பேசாமல் மாடிக்குப் போய்த் 'தொப்' பென்று படுக்கையில் விழுந்தார். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு வீட்டுக்குள் நிலவிய பயங்கரமான நிச்சலனம் மாய்ந்தது. பார்வதிக்கும் மெள்ளமெள்ள உயிர்ப்பு வந்தது. வெடியாமலேயே எரிமலை அடங்கி விட்டது! இனி ஒவ்வொரு கணமும் பயம்தான்!—இந்தப் புதிய வேதனை பார்வதியம்மாளின் இதயத்தைக் கவ்வ ஆரம்பித்தது.



பார்வதிக்கென்னவோ நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொள்ளத்தான் செய்தது. ஒருவாறு தேறிக் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தாள். பரபரப்புடன் குளித்துவிட்டு வந்தாள். மத்தியானம் சமையல் முடிந்ததும் எப்படிப் போய்ப் புருஷனை எழுப்புவது என்று மயங்கினாள். வந்தது வரட்டும் என்று மனம் துணிவு பெற்றது. மாடிக்குப் போனாள். அவரோ அயர்ந்து போய்த் தூங்கிக் கொண்டிருந்தார். கண்ணீர்ப் படலம் தலையணையை நனைத்திருந்தது! அதைப் பார்த்த பொழுது பார்வதியின் உள்ளம் பட்ட பாட்டைச் சொல்லவே முடியாது.

"இந்தாங்க, சாப்பிட வாங்க!" என்று கணவரைத் தொட்டு உசுப்பினாள். "அப்பா! நெருப்பால்ல காயுது?"—அவளையறியாமலேயே வார்த்தைகள் கண்ணீருடன் வெடித்துச் சிதறின.

பண்ணையார் விழித்துக்கொண்டு விட்டார். அவருடைய கண்கள் பார்வதியைக் கண்டதும் தீக் கங்குகளாகக் கனன்றன!

"என் கண் முன்னாலே நிக்காதே! முதல்லே இங்கேயிருந்து ஒழி!" என்று அதிர்ந்தார் பரமசிவம். அவர் உடம்பு வெடவெட வென்று ஆடியது.

பார்வதி நிலைதடுமாறிப் போனாள். பரமசிவத்தின் கூச்சல் அவளை இருளுக்குள் விரட்டியது. பேசாமல் இறங்கி விட்டாள்.

வடித்த சாதம் அப்படியே இருந்தது. புருஷன்—பெண்சாதி இருவருக்குமே அன்று ஏகாதசி. கனத்துப் போன இதயத்தோடு மூலை இருளோடு இருளாகப் பொழுது சாயும் மட்டும் முடங்கிக் கிடந்த பார்வதி, கருக்கல் நேரத்தில் எழுந்து வாசலுக்கு ஜலம்தெளித்து விட்டு விளக்கைப் பொருத்தினாள். குத்து விளக்கின் தீபச் சுடர்கள் சாந்தி மயமான ஒளிக் கற்றைகளை வீட்டுக்குள் பரப்பின. அந்த ஒளியில் மெய்மறந்து கைகளைக் கூப்பிய வண்ணம் சுவாமி படத்துக்கு முன்னால் நின்றாள். அப்போதைக்கு ஒரு மாய ஆறுதல் ஏற்பட்டது அதிலே!

சட்டென்று, 'தடதட' வென்று மாடிப் படிகளில் காலடியோசை! அதைத் தொடர்ந்து முற்றத்தில் மாடசாமியோடு பேசும் குரல் கேட்டது.

"ஏலே மாடசாமி!"

"என்னங்க எசமான்?"

"போய் வண்டியைக் கட்டு. ஏழரை மணி வண்டிக்கே 'இவளை'த் திருநெல்வேலிக்கு அனுப்பப் போறேன். நீதான் வண்டியேத்தி விட்டுட்டு வரணும்."

"எசமான்......" என்று தயங்கினான் மாடசாமி.

"எல்லாம் எனக்குத் தெரியும். இந்தச் சனியனை அஞ்சு நிமிஷம் இந்த வீட்டிலே வைச்சிருக்க முடியாது. நீயும் எதாவது பேசினியானால் எனக்குப் பொல்லாத கோபம் வரும். வீணாக நீங்க என்னைத் துன்பப் படுத்தாதீங்க...."

சற்று நேரத்துக்கெல்லாம் பண்ணையாரின் ஆணை அமுலாயிற்று. தாங்கமுடியாத சோகத்துடன் பார்வதியை ஏற்றிக்கொண்ட அந்த வண்டியின் சக்கரங்கள், கவிந்துவரும் இருளை

பிணைந்து கொண்டு மத்தளம்பாறைச் சாலையிலே உருண்டு சென்றன.

★

கோபமுள்ள இடத்திலேதான் குணம் இருக்குமென்று சொல்வார்கள். முள்ளுக்குள் ரோஜா; கல்லுக்குள் கட்டி வைரம்!— இவைகளையெல்லாம் நாம் பார்த்ததில்லையா? மத்தளம்பாறை பெரிய பண்ணை பரமசிவம் பிள்ளையவர்களைப் பொறுத்தவரை சிலபேர் அப்படித்தான் சொன்னார்கள். பண்ணையாட்கள் கூட, "வேலைக்குப் போனால் பெரிய பண்ணைக்குப் போகணும். மகராசன் கூலியும் கொடுத்துக் குறுணி நெல்லும் அளப்பாரு!" என்று வாய்குளிரப் பேசிக் கொள்வார்கள். ஆனால் பரமசிவம் பிள்ளையவர்களின் வாழ்க்கையை மற்றொரு கோணத்தில் நின்று பார்த்து விமர்சித்தவர்களும் உண்டு!

"மனுஷனுக்கு நெத்தியிலே கண்ணு ஒண்ணுதான் பாக்கி. பெயருக்குப் பொருத்தமா சனைரச் கட்டே எரிச்சுப்பிடுவார்!" என்றார்கள் சிலர்.

இருந்த போதிலும் அவருடைய நடத்தையில், குணநலத்தில் யாரும் குறை காண முடியாது. எது நீதி, எது ஒழுங்கோ அதை விட்டு இம்மியும்நகர்ந்து கொடுக்கமாட்டார். நன்மையே ஏற்படுவதாக இருந்தாலும் சரி, நியாயத்துக்குப் புறம்பாக நெளிந்து கொடுக்கும் பழக்கம் அவரிடம் கிடையாது. ஆனால் சற்று முன்கோபி. பிடிவாதமும் அதற்கு ஏற்ப உண்டு. நூறு ரூபாய்த் தாவா என்றால் உடனே கோர்ட்டுக்குப் போய்விடுவார்! நீதியை நிலைநாட்ட வேண்டுமாம்! இத்தகைய குணமே குடும்பத்தில் எவ்வளவு குழப்பத்தை உண்டுபண்ணி விட்டது! குளிர்ந்த சாரல் ஒரு பக்கம்; பெய்மழை மறுபக்கம்! இப்படியாக விளங்கியது அவர் வாழ்க்கை.

கோமதி அவருடைய மூத்ததாரத்து மகள். தாயின் சாவிலே மலர்ந்த குலக்கொடி. அது கருகிவிடக் கூடாது என்ற காரணத்தை வைத்துத்தான் — ஏன், வாக்குறுதியின் மேல் தான், பார்வதியை அவர் கைப்பிடித்தார். அது இப்போது மறந்துவிட்டது போலும்! பார்வதியைப் பார்க்காலே பசி போகும். அப்பேர்ப்பட்ட குணவதி. கோமதியிடம் அவள் காட்டிய அன்போ, தாயன்புக்கு இன்னும் ஒரு மாற்றுக் கூடத்தான் இருக்கும். உடல்தான் இரண்டு; உயிர் எல்லாம் ஒன்று தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பார்வதி வரும்பொழுது கோமதிக்கு ஐந்து வயதுதான் இருக்கும். சித்தி - இளையாள் என்ற பயங்கரக் கற்பனைகளை யெல்லாம் கதை கதையாகக் கேட்டு வைத்திருந்த கோமதிக்கு, சிரித்த முகமும் சிநேகியுமாகப் பார்வதியைக் கண்டதும் ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது. 'அம்மா' என்றே எடுத்த எடுப்பில் பழக ஆரம்பித்தாள். பார்வதியோ அவள்மேல் தன் உயிரையே வைத்திருந்தாள். அன்று மலர்ந்த அந்த அன்பு பாசத்தின் வற்றாத ஊற்றுக் கண் இன்று வரை அடைபட்டதே கிடையாது. அந்த அன்பின் சக்திதான் எத்தகைய தியாகங்களுக்

கெல்லாம் அவளைத் தூண்டி விட்டது! கோமதி பிள்ளைப் பிராயத்திலேயே நன்றாக இருப்பாள். தண்ணீர்த் தட்டு இல்லாத வயலின் செழுமையான பயிரல்லவா அவள்! பத்து வயதில் பார்த்தால் 'கண் திருஷ்டி' பட்டுவிடும். அவ்வளவு மேனி வளப்பம்.

ஆனால் இன்று....

அந்த அழகு, செழுமை எல்லாம் பார்வதியின் கண்முன்னே கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக்கொண்டு வந்தது. பெற்றவள் இருந்தால் இதையெல்லாம் பார்த்துச் சகித்துக் கொண்டிருப்பாளா? அவள் புண்ணியம் செய்தவள். பூவும் மஞ்சளுமாகப் போய்ச் சேர்ந்து விட்டாள். ஆனால் அவள் பெற்ற மகளல்லவா இன்று மாறை நின்று மறுகித் தவிக்கிறாள். ஒரு நாளா, இரண்டு நாட்களா? பன்னிரண்டு வயசிலிருந்து பன்னிரண்டு வருஷங்கள்! ஒரு வியாழ வட்டம் கழிந்து விட்டது! இன்னுமா வியாழ நோக்கு வரவில்லை? எத்தனை மாப்பிள்ளைகள் வந்து கேட்டார்கள். பரமசிவத்துக்குக் 'கௌரவம்' அப்படி வந்து குறுக்கேயல்லவா நின்று தடுத்து விட்டது!

யாரை நொந்து என்ன பயன்? பார்வதி ஒவ்வொரு நாளும் கணவரை அலட்டிப் பிடுங்கிக் கொண்டிருந்தாள். கோமதியின் தாய் ஸ்தானத்திலே அமர்ந்திருப்பவள் அவளல்லவா? அவள் நெஞ்சிலே குமுறிக் கொண்டிருந்த கவலை — நீதியை நிலைநாட்ட நீதிமன்றத்துக்கும் வீட்டுக்கும் அலைந்து கொண்டிருந்த பண்ணையாருக்கு எப்படித் தெரியும்? பார்வதியின் பொறுமை எல்லையை மீறியது. இணைற்றடிச் சலசலப்பிலிருந்து ஆற்றங்கரைத் தென்றல் காற்று வரையில் எல்லாம் அவள் இதயத்தில் அல்லவா போய் முட்டி நின்றன!

"என்ன இருந்தாலும் அது தாயில்லாப் பொண்ணு! அந்த மனுஷனுக்குத் தான் மக்கள் மனுஷர் ஆகாதென்றாலும் இந்தப் பார்வதிக்குப் புத்தி எங்கே போச்சாம்? பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி விட்டால் வீட்டு வேலைக்கு என்ன செய்கிறது என்று பார்க்கிறாளோ?......பாவம், கோமதியின் தலைவிதி இப்படியிருக்கிறதே!.."



ணர்ப் பெண்கள் அளந்த வம்பிலே இது ஒரு துளி!

அன்று இரவு பார்வதி தூங்கவே இல்லை. புருஷனோடு ஒரே சண்டை. கண்ணீர், விம்மல் எல்லாம் கலந்து அவருடைய வைராக்கியத்தைக் கரைக்க முயன்றன.

"நேத்து என் கண்முன்னாலே சந்தை வியாபாரம் பார்த்தவன் இந்த ராமையா. இன்னிக்குப் பெரிய முதலாளின்னு அவன் மகனுக்கு எம் பொண்ணைக் கொடுத்துடு வேணு?" என்றார் பரமசிவம்.

"என்ன இருந்தாலும் உங்க மச்சினன். அவர் மகனுக்கு நம்ம கோமதி முறைப் பொண்ணு. கேட்கிறதிலே என்ன குற்றம்? ஆயிரம் மாப்பிள்ளைகளை 'அது சொள்ளை, இது சொத்தை'ன்னு குறை சொல்லி ஒதுக்கிட்டீங்க. கோமு சமைஞ்சு வருஷம் என்ன ஆச்சு? இனிமே அவளுக்கு ஒருத்தன் பிறக்கவா போறான்?...."

"பார்வதி!....இந்த விசயத்திலே நீ தலை விடாதே. கோமதிக்கு நான் அப்பன். எனக்கு எல்லாம் தெரியும்...."

பார்வதியின் உள்ளம் புயலாகச் சீறியது. எரிமலையாக வெந்து தணிந்தது. கடமையின் வேகமும் அன்பின் சக்தியும் அவளை ஆட்கொண்டன. எங்கிருந்துதான் அவ்வளவு சக்தி அவள் மூச்சில் பிறந்ததோ, தெரியாது!

காரியங்கள் வெகு துரிதமாக நடக்க ஆரம்பித்தன. சூழ்நிலையும் அவள் முயற்சிக்கு ஆசி கூறுவதைப் போல ஒத்து நின்றது!

பரமசிவம் பட்டணத்துக்குப் போயிருந்தார். அது தெரிந்துதான் என்னவோ ராமையாப் பிள்ளை, மாப்பிள்ளை சகிதம் குடும்பத்தோடு வந்து இறங்கினார்! பார்வதி அதிர்ச்சியடைந்து விட்டாள். மைத்துனன் வீட்டுக்கு வர அவர் யாரிடம் கேட்க வேண்டும்? அவரைத் தடுக்கப் பார்வதிக்குத்தான் உரிமையுண்டா? ஊன்றிப் பார்த்தால் அவள் தான் அந்நியம். எத்தனையோ முறை பெண் கொடுக்க மறுத்து முகத்திலடித்தாற்போல் பேசியும், பழைய பகைமையை எல்லாம் மறந்துவிட்டு இப்படி ராமையாப் பிள்ளையே வலிய வருவார் என்று யார் கண்டார்கள்?

"தங்கச்சி, எல்லாம் உன் உதட்டசைவிலே தான் இருக்கு. கோமதியை நெனைச்சா எனக்குக் கண்ணீர் வருது. அத்தான் குணம் தெரிஞ்சதுதானே! நாளைக்கே நல்ல முகூர்த்தம். நீயே தாய்க்குத் தாயாக இருந்து இந்த நல்ல காரியத்தை நடத்தி வைச்சுட வேண்டியது. உன் கடமை அது பார்வதி! இப்போ பாரு, எங்க பையனுக்குப் பொண்ணு கிடைக்காது? எல்லாம் கோமதியை நெனைச்சுத் தான் வலிய வந்துட்டேன்..."

அவர் வார்த்தையை முடிக்கவில்லை. தாங்க முடியாத மகிழ்ச்சியும், அதே சமயத்தில் வருத்தமும் பார்வதியைத் திக்கு முக்காடச் செய்தன. அந்த உணர்ச்சி வெள்ளத்துக்குப் பார்வதி பலியாகிப் போய் விடவில்லை. பயப் பிரளயத்திலும் எதிர் நீச்சு நீந்திக் கரை சேர்ந்தே விட்டாள்!

ஆம். பார்வதி மனைசக் கல்லாக்கிக் கொண்டு தன் பூரண சம்மதத்தைத் தெரிவித்தாள். பிறகு கேட்பானேன்? காதோடு காது வைத்த மாதிரி விஷயங்கள் பரிமாறப் பட்டன. மத்தளம் பாறை சாலைக் குமாரசாமி கோயிலில் மங்கல வாத்தியங்கள் முழங்கின. அப்பா! கோமதியின் கழுத்தில் மாங்கல்யம் ஏறியது. கண்ணீரைச் சிந்தியபடியே சிரித்து மகிழ்ந்தாள் மணப் பெண். பார்வதியோ புன்னகையோடு விம்மி வெடித்தாள்!

அதன் விளைவு?

கோமதி கிருஷ்ணாபுரத்தில்!—தன் கணவன் வீட்டில்!

பார்வதி திருநெல்வேலியில்—தன் அப்பன் வீட்டில்!

★

கால வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. மத்தளம்பாறையில் இரண்டு பூ அறுவடைகள் கழிந்தன. தோட்டத்தில் படுத்திருந்த வைக்கோல் போர், யானையைப் போலக் கம்பீரத்துடன் எழுந்து நின்றது.

ஒரு நாள்:

"எசமான், எனக்கு ஒரு வாரம் லீவு வேணும்" என்று வந்து நின்றான் மாடசாமி.

"ஏண்டா?"

"இசக்கியம்மா போயி ஒரு மாசம் ஆகி விட்டது. போய்க் கூட்டிக்கிட்டு வரலாமுன்னு இருக்கேன்."

"மூதேவி!...இதுக்கு நீ போய்த்தான் அழைக்கணுமோ? புருசன்னு நெனைப்பிருந்தா புறப்பட்டு வர மாட்டாளா? அவள் இல்லாம இப்போ என்னடா குடி முழுகிப் போச்சு? நீவனத்தைத்தான் இங்கேயே பத்தறியே!"

"வயிறு ரொம்பினாப் போதுமா எசமான்? வீடே இருளடைஞ்சு போச்சு! என்ன இருந்தாலும் வீட்டுக்கு வெளக்கேத்தி வைக்க ஒரு பொண்ணு வேணும்...."

"ஆமாடா, பொண்ணு வேணுந்தான்! அன்னிக்கு நான் இல்லாத சமயத்திலே எல்லாருமாகச் சேர்ந்து என் பொண்ணுக்குக் கல்யாணத்தை நடத்தி, அந்தப் பிச்சைக்காரப் பயல்பின்னாலே அனுப்பி வைச்சீங்களே, அப்போ இந்தப் புத்தி எங்கேடா போச்சு?"

"சொல்றேன்னு கோபப்படாதீங்க எசமான். பொண்ணாப் பிறந்தாலே அது ஊரார் வீட்டுப் பிள்ளை. சின்ன அம்மா வெளக்கேத்தி வைக்க வேண்டிய இடம் கிருஷ்ணாபுரம்; மத்தளம் பாறையில்லே! அதோட புருஷன் வீடுதான் அதுக்குச் சொர்க்கம். அங்கே இருந்தால்தான் அது பிரகாசமாயிருக்கும்!..."

"ஏலே முட்டாள்! நிறுத்தலே!" என்று இரைந்து விட்டார் பரமசிவம். வண்டிக்காரப் பயலின் சாட்டை வீச்சுக்குப் புதியதொரு அர்த்தம் அவர் கண்முன்னே எழுந்து நின்றது.

"போய்த் தொலை!" என்ற வண்ணம் வீட்டுக்குள் வந்தார். மின்சார விளக்கின் ஒளி அவர் கண்களைக் கூசச் செய்தது. குத்து விளக்கை ஏற்றலாம் என்றாலோ, தூசியும் தும்பும் அடைந்து பச்சைக் களிம்பேறிச் சோகச் சித்திரமாக ஒரு மூலையில் நட்டமாக நின்று கொண்டிருந்தது அது! பேசாமல் உள்ள விளக்கையும் அணைத்துவிட்டு அன்றைய இரவை இருளின் வேதனையோடு கழித்தார் பிள்ளைவாள்.

மறுநாள் பகல் பன்னிரண்டு மணி இருக்கும். கோவில் தர்மகர்த்தா என்ற முறையில்



சென்னை 'ஸ்பென்ஸ் லிமிடெட்' கம்பெனியின் மானேஜர் ஸ்ரீ ஆர். வாஞ்சீஸ்வரன் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் அடிஸன் கம்பெனி ரசாயனப் பிரிவைச் சேர்ந்த ஸ்ரீ டி. கே. விஸ்வநாதன் அவர்களுக்கும் சமீபத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

குற்றாலநாதர் கோயிலின் பிராகாரத்திலே உட்கார்ந்திருந்தார் அவர்.

''கடவுளே, போதும் இந்த வாழ்வு. குறைப் பொழுதையும் உன் திருஷ்டி நிழலிலேயே கழித்து விடுகிறேன். அதற்கேற்ற மன வலிமையை எனக்கு அருள் அப்பனே!'' என்று இறைஞ்சியது, அவரது வைராக்கிய சீலம்! என்ன மாயமோ? பிள்ளையவர்கள் நினைத்து முடிப்பதற்குள் பார்வதியின் முகம் அவருடைய மனக் கண்முன் தோன்றுவானேன்? அவருடைய தேகம் முழுவதும் ஏனோ சிலிர்த்தது. ரோமங்கள் குத்திட்டு நின்றன. உடம்பை ஒரு உலுப்பு உலுப்பி விட்டு எழுந்து நடந்தார். பக்கத்தில் அருவிக்கரை மண்டபத்தின் சாளரத்தில் இரண்டு நாகணவாய்ப் பறவைகள் அவர் கண்களில் விழுந்தன. சின்னஞ் சிறு வயதில் கோமதிக்கு இந்தக் காட்சியை எத்தனையோ முறைகள் விளையாட்டுக் காட்டியது இப்போது அவருடைய நினைவுக்கு வந்தது.

கணப்பொழுதுக்கு அசையாமல் நின்று பார்த்தார் பரமசிவம். பெட்டையின் இறக்கையைத் தன் மஞ்சள் அலகுகளால் கோதி விட்டபடியே, அருவித் தூவானம் தாங்க மாட்டாமல் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு நின்றது அந்தப் பறவை!

மேலே நடந்தார் பரமசிவம்.

★

நாளை விடிந்தால் திருக்கல்யாணம்! குற்றாலநாதரையும் குழல்வாய் மொழி அம்மையையும் கல்யாண மண்டபத்திலே ஒருங்கே பார்ப்பதற்குக் கோடிக் கண்கள் வேண்டும்! அவ்வளவு கோலாகலமாயிருக்கும்.

பரமசிவம் பிள்ளை ஏனோ இரவோடு இரவாக ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். கோயில் தலைமைக் குருக்கள் எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். அதை ஏற்கும் மன நிலையில் பிள்ளையவர்கள் இல்லை.

நேரே அருவிக்கரையை நோக்கி நடையைக் கட்டினார். நிலவுக் கிண்ணம் சிதறுண்டு கிடந்தமாதிரி அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தாரகைகள் வானத்தில் மின்னின. அந்த வெளிச்சத்தில் வட அருவி வெண் நுரையோடு 'திண், திண்' என்று விழுந்துகொண்டிருந்தது. மனம் குளிர அதிலே குளித்து விட்டு வெளியே வந்தார் பிள்ளைவாள். மனம், உடல் இரண்டுமே சாந்திமயமானதொரு உணர்வை அனுபவித்தன.

பாதையில் இறங்கி நடந்ததும் அன்று மாலையில் அவர் உள்ளத்தில் ஒளியை ஏற்றிய அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது.

★

மறுநாள் பொழுது புலருவதற்கு முன்னே மாடசாமி வந்து பண்ணையாரை எழுப்பினான். இரவில் நடந்து வந்த களைப்பினால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவர் திடுக்கிட்டுப் போய் எழுந்தார்.

''இசக்கியம்மாளைக் கூட்டிக் கொண்டு வந்துட்டேன் எசமான்!'' என்றான் மாடசாமி. அதை அவன் சொல்லவே வேண்டியதில்லை. முகத்தின் பிரகாசம் ஒன்றே போதாதா?

''ஏலே, வண்டியைக் கட்டு. காலை வண்டியிலே போய் அம்மாளைக் கூட்டிக்கொண்டு வந்துடப் போறேன். தீபாவளி வேறே வருது. குழந்தையை அழைக்க வேண்டாமா?....''

சொப்பனம் கண்டு விழிக்கிறாரா என்று வியப்புடன் அவரைப் பார்த்தான் மாடசாமி.

''நிசந்தாண்டா! போய் வண்டியைக் கட்டு'' என்றார் பரமசிவம்.

மாடசாமிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. தலைகால் புரியாத உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் வண்டியைக் கட்டினான். செவலைக் காளைகளுக்குக்கூட விஷயம் எப்படித்தான் தெரியுமோ? துள்ளிக் கொண்டு எழுந்து நின்றன.

கொஞ்ச நேரத்துக் கெல்லாம் அந்த மத்தளம்பாறைச் சாலையில் வில் வண்டியின் சலங்கை நாதம் பரவியது.

''எசமான்! இன்னிக்குக் கோயில்லே திருக் கல்யாணமாச்சே! நீங்க பாக்கலையா?'' என்று கேட்டான் மாடசாமி.

பண்ணையார் எதை நினைத்துக் கொண்டாரோ?

''அந்தப் பாக்கியம்தான் எனக்குக் கொடுத்து வைக்கலையே? உங்களுக்கெல்லாம் கிடைச்சது. அந்த வரையில் நீங்களெல்லாம் புண்ணியம் செய்தவங்க....''

மாடசாமி ஒன்றும் புரியாமல் விழித்தான்.

''எதைச் சொல்றீங்க எசமான்?''

''அதுதான்; நம்ம கோமதியின் கல்யாணம் நினைவு வந்துடுச்சு. அந்த ஞாபகத்திலே சொல்லிட்டேன்!''

பண்ணையாரின் குரலில் தொனித்த பரிவையும் சோகத்தையும் கண்ட மாடசாமி வண்டிக்குள் திரும்பிப் பார்த்தான். பரமசிவம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார். ஆறுதும் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் வெள்ளம், அவர் துடைத்த துடைப்புகளுக்கெல்லாம் அடங்காமல் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது.

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?


இந்தக் கதையில் வரும் ஒரு உணர்ச்சியூட்டும் காட்சி தான் இவ்வார அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.

ஒவ்வொரு மைலிலும் செலவை மிச்சமாக்குக

நகரத்திலும் சரி, கரடுமுரடான கிராம ரஸ்தாக்களிலும் சரி, எத்தகைய பளுவையும் ஏற்றிக் கொண்டு ஸென்–ராலே சைகிள்கள் உங்களுக்கு நீண்ட காலம் உழைத்து, செப்பனிடும் செலவையும் குறைத்து, ஒவ்வொரு மைல் ஓட்டத்திலும் மதிப்பு வாய்ந்த அளவிற்கு செலவை மிச்சமாக்குகின்றன.



ராலே
ராபின்ஹூட்



SEN-RALEIGH *Products*

நவபாரத தரிசனம்

ரதி—



7

கல்கத்தாவில் உள்ள என் நண்பர் வீட்டில் உட்கார்ந்து நான் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, வழக்கம்போல் பால்காரன் பால் கொண்டு வந்தான்.

"என்ன அப்பா! இன்று பாலில் தண்ணீரைக் கலந்திருக்கிறாயா? அல்லது தண்ணீரில் பாலைக் கலந்து கொண்டு வந்திருக்கிறாயா?" என்று கேட்டார் நண்பர்.

"அதென்ன, அப்படிச் சொல்லி விட்டீர்கள்? என் பால் ஹரிங்கட்டா பாலைக் கூடத் தோற்கடித்து விடுமே!" என்று பெருமையுடன் கூறினான் அந்தப் பால்காரன்.

என்ன, என்ன? ஹரிங்கட்டா பால் என்றால் அவ்வளவு உயர்ந்த, கலப்பற்ற பாலா?

ஆமாம், ஆமாம்!

கல்கத்தாவிலிருந்து முப்பத்திரண்டு மைல் தூரத்தில் மூவாயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஹரிங்கட்டா பால் பண்ணை ஆசியாவிலேயே சிறந்த பால் பண்ணைகளில் ஒன்று என்று புகழ் பெற்றிருக்கிறது.

அது வெறும் பால் பண்ணையாக மாத்திரமில்லை; கால்நடை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையமாகவும் இருந்து வருகிறது.

சென்ற மகா யுத்தத்தின் போது வங்காளத்திலிருந்து ஏராளமான மாடுகளைச் சிப்பாய்களின் உபயோகத்துக்காகப் பிரிட்டிஷார் கொண்டுபோய் விட்டதால், வங்காளத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அந்த நஷ்டத்தை ஈடு செய்வதில் ஹரிங்கட்டா பால் பண்ணை அதிகாரிகள் வெற்றி பெற்று வருகிறார்கள். அங்கு 600 உயர்ந்த ஜாதிப் பசுக்களும், 400 ஆடுகளும், நூற்றுக் கணக்கான சிறந்த ரிஷபங்களும் இருக்கின்றன. வருஷந்தோறும் இருநூற்றைம்பது ரிஷபங்கள் வரையில் இந்தியாவில் உள்ள பல்வேறு ராஜ்யங்களுக்கும் விற்கப்படுகின்றன.

இதைத் தவிர அங்கு பெரிய கோழிப் பண்ணையும் இருக்கிறது.

அங்குள்ள பசுமாடுகள் தினசரி சுமார் 500 மணங்கு பால் கறக்கின்றன. அதை, விற்பனைக்காகத் தினந்தோறும் கல்கத்தாவுக்கு அனுப்பி வருகிறார்கள்.

கல்கத்தா நகருக்குள் சுமார் 60,000 மாடுகள் இருக்கின்றன என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதனால் கல்கத்தா மக்களின் ஆரோக்கியம் கெடுவதால், மேற்படி பசுக்களையெல்லாம் அந் நகரிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்பதே ஹரிங்கட்டா பால் பண்ணை அதிகாரிகளின் நோக்கமாகும். எனவே, கல்கத்தாவிலிருந்து மாடுகளுடன் வெளியேற விரும்பும் பால்காரர்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் மேற்படி பண்ணை அதிகாரிகள் வீடு வசதி உள்படச் சகலவிதமான வசதிகளும் அளிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

ஜனங்கள் க்ஷயரோகத்துக்கு இரையாகித் தவிக்காமல் இருப்பதற்கான ஒரே வழி



கலை வளர்க்கும் வங்கம்!

அவர்கள் அதிகமாகப் பால் சாப்பிடுவதுதான்!

இந்த உண்மையை ஹரிங்கட்டா பால் பண்ணை அதிகாரிகள் மக்களிடையே இடைவிடாது பிரசாரம் செய்து வருகிறார்கள்.

எனவே, ஹரிங்கட்டா பால் பண்ணை அதிகாரிகளின் முயற்சி வெற்றி பெறுமாயின், அந்தப் பண்ணை இந்தியாவில் உள்ள மற்றப் பால் பண்ணைகளுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

* * *


கல்கத்தாவிலிருந்து முப்பத்தைந்து மைல் தூரத்தில், ஹூக்ளி நதிக்கரையிலே இருக்கும் கல்யாணி ஸ்டேஷன், 1954-ல் அங்கு இந்திய தேசிய மகாசபைக் கூட்டம் நடந்த போது தான் அமைக்கப்பட்டது. அது புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டு அபிவிருத்தி அடைந்துவரும் நகரமாகும்.


அங்கு சகல நவீன வசதிகளுடன் அவரவர் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு கட்டடங்கள் கட்டி வருகிறார்கள். 8000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாய் பெறுமான முள்ள மாடி வீடுகள் வரையில் பலவிதமான கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. பதினாயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள கல்யாணி நகரில் ஏராளமான கல்விசாலைகள், நந்தவனங்கள், விளையாடும் இடங்கள், ரஸ்தாக்கள், மார்க்கெட்டுகள், தண்ணீர்க் குழாய்கள், ஆஸ்பத்திரிகள், போலீஸ் ஸ்டேஷன்கள், சினிமாக்கள், கடைகள் எல்லாவற்றுக்கும் இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. பல மைல்கள் தூரத்துக்குப் பாதாளச் சாக்கடையும் கட்டி வருகிறார்கள்.


அங்கு ஒரு பெரிய மார்க்கெட்டும், ஹைஸ்கூலும் நிர்மாணமாகிப் பூர்த்தியாகி விட்டன.

கையால் செய்யும் காகித உற்பத்திக்கு அவசியமான தொழிற்சாலையும், ரேடியோவின் பல்வேறு பாகங்கள், பாட்டரிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் நிறுவப்பட்டிருப்பது, கல்யாணி நகரின் விசேஷ அம்சங்களாகும். அந்நகரில் கூட விவசாயப் பண்ணை இருக்கிறது.

கல்கத்தா முதலிய பெரிய நகரங்களில் ஜன நெருக்கம் சகிக்க முடியாதவாறு அதிகமாகி வரும் இக்காலத்தில், கல்யாணி போன்ற சகல நவீன வசதிகளுடனும் கூடிய நகரம் மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. விமானத்திலிருந்து பார்த்தால் ஓர் அழகான சிருஷ்டியாகத் தோன்றும்படி கல்யாணி நகரைக் கலைக் கோயிலாக நிர்மாணித்திருக்கிறார்கள். கல்யாணி நகரம் கல்யாண நகரமாகக் காட்சி யளிக்கிறது!







மேற்கு வங்காளத்தில் வாழும் இரண்டரைக் கோடி மக்களில் சுமார் இரண்டு கோடி மக்கள் கிராமங்களில் இருக்கிறார்கள். அரைக் கோடி பேர்தான் நகரங்களில் வசிக்கிறார்கள். எனவே, இந்தியாவைச் சேர்ந்த மற்ற ராஜ்யங்களைப் போல் வங்காளத்தின் முன்னேற்றம் அங்குள்ள கிராம ஜனங்களின் சுபிட்சத்தையே பொறுத்திருக்கிறது.

வங்க கிராம மக்களுக்கு விவசாயமும் குடிசைத் தொழில்களும்தான் உயிர் நாடியாக இருந்து வருகின்றன. சிறிய குடிசைகள்தான் அவர்களுடைய தொழிற்சாலைகள்! அவர்களுடைய கை விரல்கள்தான் யந்திர வகைகள்! அவர்களுடைய மனைவி மக்கள்தான் அத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள்! அவர்களுடைய தொழில் நுணுக்கமும் கைத் திறனும் வாழையடி வாழையாக மறையாமல் இருந்து வருகின்றன. வங்காள கிராம மக்களுக்கு ஒரு காலத்தில் அவர்கள் உற்பத்தி செய்யும் அற்புதமான கலைப் பொருள்களுக்குப் பொன் நாணயங்களாகவே விலை கிடைத்து வந்தனவாம்! எனவே, அவர்களிடையே அப்போது சுபிட்சம் நிலவி வந்தது.

பைசாச யந்திர வகைகள் ஆட்சி செலுத்தி வரும் இக்காலத்தில் அவர்கள் எவ்விதம் தங்கள் தொழிற் கலைகளை மறக்காமலிருந்து வருகிறார்கள்? அவர்கள் தங்கள் வறுமை நிலையை எப்படிச் சமாளிக்கிறார்கள்? சங்கடமான இக் கேள்விகளுக்குப் பதில் அளிப்பது கஷ்டமான காரியம்தான்.

ஆனால், ஒன்று மாத்திரம் உறுதியாகக் கூறலாம். எதிர்காலத்தில் எத்தகைய நுட்பமான யந்திர வகைகள் வந்தாலும், அவர்களுடைய கைத்திறனிலிருந்து சிருஷ்டியாகும் அற்புதமான பொருள்களைப் போல் எந்த யந்திரமும், எக்காலத்திலும் செய்ய முடியாது என்பது மாத்திரம் நிச்சயம்தான்.

அந்த ராஜ்யத்தில் கைத்தறி இல்லாத கிராமத்தைக் காண முடியாது. பட்டு நெசவுத் தொழிலில் வங்காளம் மிகப் புகழ் பெற்றது. காசிப்பட்டு ஜவுளி இனங்களைப் போல் வங்காளப் பட்டு ஜவுளி வகைகளும் தனி ரகத்தைச் சேர்ந்தவை.

மற்றும் தந்தப் பதுமைகள், மண் பொம்மைகள், தோல் பை உள்படத் தோலால் செய்யப்பட்டுக் கண்களைக் கவரும் பல்வேறு சாதனங்கள், மூங்கில் பிளாச்சுகளால் செய்யப்பட்ட அருமையான சாமான்கள், சங்கு வகைகள், பாய்கள், கயிறு வகைகள் முதலிய பல்வேறு குடிசைத் தொழில்களிலும் பாரத நாட்டிலே வங்காளம் முக்கிய ஸ்தானம் வகிப்பதை, நாங்கள் அங்கு நேரில் கண்ட காட்சிகள் உறுதிப்படுத்தின.

கத்தியால் பென்சில் சீவுவது கஷ்டமான காரியமா? அதுபோலவே வங்கத் தொழில் நிபுணர், சிற்றுளியால் தந்தக் கட்டைகளைச் சீவுகிறார். ஆனால், சில நிமிஷங்களில் அது அப்பழுக்கற்ற, பின்னமில்லாத அற்புதமான உருவமாகி விடுகிறது. இவ்விதம் தந்தத்தினால் ராமாயண, பாரத கதா பாத்திரங்களை வெகு எளிதில் சிருஷ்டித்து விடுகிறார்கள்!

அந்த நிபுணரின் விரல்களில் மேற்படி தெய்விகத் திறன் கண்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்கிறது போலும்! அத்தகைய கைத் திறனும் கலைத் திறனும் மறையாமல் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் இன்றியமையாத கடமை யல்லவா?

* * *

வங்காளத்தில் நாங்கள், பொது நலப் பணியையே குறிக்கோளாகக் கொண்ட பல ஸ்தாபனங்களையும் அற்புத அணைக்கட்டுகளையும் பார்த்துக் கொண்டு சென்ற போது, அங்கு ஒரு பிரும்மாண்டமான ஏரி தென்பட்டது. அந்த ஏரியைக் கண்டதும், பாலைவனத்துக்கு மத்தியில் பசுஞ் சோலையைக் காண்பது போல் இருந்தது எங்களுக்கு.

நாலாபுறமும் கட்டாந்தரையாலும் மலைகளாலும் சூழப்பட்ட அப் பிரதேசத்தின் வறட்சியை வர்ணிக்க முடியாது. மலைகளிலிருந்து கிளம்பிய உஷ்ண ஆவி ஜ்வாலைபோல் எங்கள் கண்களுக்குத் தோன்றியது. அது குளிர் காலமாக இருந்தும்கூட வெய்யிலின் உக்ரம் அதிகமாக இருந்தது. அத்துடன் புழுதி மண்டலமும் சேர்ந்து எங்களைத் திக்குமுக்காடச் செய்தது.

அத்தகைய சூழ்நிலையில் மேற்படி ஏரியைப் பார்த்த போது, எங்கள் கண்களும் மனமும் குளிர்ந்தன.

"இந்த வறண்ட பிரதேசத்தில் கடவுள் சிருஷ்டியைப் பாருங்கள்" என்று அதிசயப்பட்டார் என் நண்பர்.

"இது கடவுள் சிருஷ்டியல்ல, மனித சிருஷ்டிதான்" என்று திருத்தினார் எங்களுடன் கூடவந்த இஞ்சினீர்.

"அப்படியா? நம்ப முடியவில்லையே!"

"ஆமாம், இதுதான் மயூராக்ஷி அணைக் கட்டின் நீர்த் தேக்கம்" என்று விளக்கினார் அந்த அதிகாரி.

அப் பிரதேசத்தில் மயூராக்ஷி அணைக்கட்டு இல்லை என்றால், அந்த இடமும் வறண்ட பிரதேசமாகவே காட்சி அளிக்கும். ஆனால், அணைக்கட்டின் பலனாக அங்கு இப்போது கடல் போல் ஒரு பெரும் ஏரியே உருவாகி, எப்போதும் சல சல வென்று அலைகள் அடித்துக் கொண்டிருக்கின்றன!

மயூராக்ஷி என்ற சிற்றாறு பீஹாரில் உள்ள ஒரு மலையில் உற்பத்தியாகிறது. நூற்றைம்பது மைல் தூரம் சென்று இறுதியில் பாகீரதி நதியில் போய் விழுகிறது. அந்த நதியில் ஓடும் தண்ணீர் அந்த ஜில்லா முழுவதற்கும் நீர்ப்பாசனத்துக்குப் போதுமானது.

ஆனால், இதுவரையில் அந்தத் தண்ணீர் முழுதும் யாருக்கும் பிரயோசன மின்றிப் போய்க் கொண்டிருந்தது.

இப்போது அங்கு அற்புதமான அணை கட்டி நீரைத் தேக்கி யிருக்கிறார்கள். அந்த நீர்த் தேக்கம்தான் ஏரிபோல் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு கோடி ரூபாய் செலவில் 1951ல் நிர்மாணிக்கப்பட்ட அந்த அணைக்கட்டிலிருந்து நீர்ப்பாசனத்துக்காக இரண்டு பெரிய



''மஞ்சரி'' பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ இ. ஐ. ரங்கநாதனின் புதல்வி சௌ. கோமளவல்லிக்கும் ஸ்ரீ ராஜ கோபாலனுக்கும் சமீபத்தில் மாயவரத்துக் கருகில் திருந்தலூரில் வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.

வாய்க்கால்கள் போகின்றன. அவற்றின் மூலம் அந்த வருஷத்திலேயே ஒரு லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் ஆரம்பமாகி விட்டது.

''ஆமாம், கடவுளின் கருணையால் மழை பெய்கிறது. நெல் முதலிய தானியங்கள் உற்பத்தியாகின்றன. தானியங்களைப் பக்குவம் செய்து சாப்பிட வேண்டியது நம்முடைய கடமை அல்லவா? அது போலவே கடவுள் மழையைத்தான் கொடுப்பார். அதைத் தேக்கி வைத்து உபயோகப்படும்படி செய்து கொள்ள வேண்டியது நம்முடைய கடமை தானே?'' என்றார் அணைக்கட்டு இஞ்ஜினீர்.

அணைக்கட்டைப் பார்வையிட்டபின் மோட்டார்ப் படகில் ஏறி அந்த மாபெரும் 'ஏரி'யை ஒரு தடவை பிரதட்சணம் செய்து வந்தோம். ஆயிரக்கணக்கான மைல்கள் யாத்திரை செய்து சோர்வடைந்திருந்த எங்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் அந்தப் படகு யாத்திரை புதிய உத்வேகமும் உற்சாகமும் அளிப்பது போல் இருந்தது.

* * *

கல்கத்தாவை விட்டுப் புறப்படுமுன் அந்நகருக்குப் பெருமையளிக்கும் மாபெரும் நந்தவனத்தைப் பார்க்க வேண்டாமா? உலக அதிசயங்களில் ஒன்று அந்த நந்தவனத்தில் தான் இருக்கிறது. அதுதான் அங்குள்ள ஆச்சரியமான ஆலமரம். அடையாறு ஆலமரத்தைக் காட்டிலும் கல்கத்தா ஆலமரம் எத்தனையோ மடங்கு பெரியது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

வெள்ளைக்காரர்களின் வசதிக்காகவும் பெருமைக்காகவும் கிழக்கு இந்தியா கம்பெனியாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்கத்தா நந்தவனம் இன்று சுதந்திர பாரதத்தின் அற்புதக் காட்சிகளில் ஒன்றாக விளங்குகிறது. அங்கு ஜப்பான், சீனா, மலேயா, சுமத்ரா, ஜாவா, பிலிப்பைன்ஸ் முதலிய பல நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட அபூர்வ மரங்களும் செடிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

முதன் முதலாகத் தென் அமெரிக்காவில் தான் கொயினா மரம் உண்டாயிற்றாம். இங்கிலாந்தில் கொயினா வளருவதில்லை. இந்தியாவில் டார்ஜிலிங்தான் கொயினா மரம் வளருவதற்குத் தகுதியான இடம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். நீலகிரியிலும் அம் மரங்கள் இருக்கின்றன.

பர்மாவிலும் கொயினாவைப் பயிரிட்டனர். ஆனால், அந்த பூமி அதற்கு ஏற்றதாக இல்லாததால் பர்மா சர்க்கார் அம் முயற்சியைக் கைவிட நேர்ந்தது.

இந்தியாவில் முதன்முதலாகக் கல்கத்தா நந்தவனத்தில்தான் கொயினாச் செடியைப் பயிர் செய்யத் தொடங்கினர்.

275 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள அந்த அற்புதமான நந்தவனத்தில் 13,000 வகைச் செடிகளும், மரங்களும் இருக்கின்றன.

உலகத்திலேயே பெரிய கலிபோர்னியா நந்தவனத்தில்தான் 25 லட்சம் வகை மரங்களும் செடிகளும் இருக்கின்றன.

இவ்விவரங்களையெல்லாம் மேற்படி நந்தவனப் பிரதம அதிகாரி டாக்டர் டி.சாட்டர்ஜி எங்களுக்குக் கூறினார்.


பல கிளைகள் உள்ள பனை மரங்களும் அங்குள்ள விசேஷங்களில் ஒன்றாகும். அந்த நந்தவனத்தில் பதினாறு கிளைகள் உள்ள ஒரு பனை மரத்தைப் பார்த்தபோது, என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை.

கல்கத்தாவுக்குச் சென்ற பலரும் அந்த நந்தவனத்தில் உள்ள ஆலமரத்தைப் பார்த்திருக்கலாம். அதைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்காதவர்கள், அந்த மரத்தின் சுற்றளவு 1328 அடி என்பதிலிருந்து அதன் பரிமாணத்தை ஒருவாறு கற்பனை செய்து கொள்ளக் கூடும். இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட அம் மரத்தின் கிளைகளிலிருந்து ஆயிரம் பிரமாண்டமான வேர்கள் பூமிக்குள் புதைந்து, ஒரு சிறு காடுபோல் காட்சி யளிக்கின்றன!

கல்கத்தா வாசிகளான ஆடவர்களும் பெண்மணிகளும் தினசரி காலையிலும் மாலையிலும் அந்த ஆலமரத்தடிக்கு வந்து உட்கார்ந்து கொண்டு அதைப் பார்த்துப் பார்த்து மகிழ்கிறார்கள்.

ருஷ்யப் பிரதமர் புல்கானின், ஸ்ரீமதி ஸன் யாட் ஸென் முதலிய பிரமுகர்கள் கல்கத்தாவுக்கு விஜயம் செய்தபோது, அந்த ஆல மரத்தைப் பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கினார்களாம். உலக அதிசயங்களின் ஜாபிதாவில் கல்கத்தா ஆலமரத்துக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும் என்று கூறினார்களாம்!

அதற்கு அடுத்தபடியாக இந்தியாவிலே மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த நீமச் என்ற இடத்திலும் அடையாறிலும் இரண்டு பெரிய ஆல மரங்கள் இருக்கின்றன என்றும், எனினும் கல்கத்தா மரத்துடன் ஒப்பிடும்போது, அவை மிக மிகச் சிறியவை என்றும் டாக்டர் சாட்டர்ஜி குறிப்பிட்டார்.



'அனாஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனாஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தைக் குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பீன்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினாஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்குப் பெயர் பெற்றது.
4. அஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனாஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனாஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனாஸினையே கேட்டு வாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.



சாந்தி நகர் முனிசிபல் பொருட்காட்சியில் பொதுமக்கள் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது ஸ்தல சிமிண்டு தயாரிப்பு ஸ்தாபனத்தார் நிர்மாணித்திருந்த அழகிய 'ஸ்டாலு'ம் சிமிண்டு தயாரிப்பு ஆலையின் 'மாடலும்'தான். அந்தப் பிரபல சிமிண்டுக் கம்பெனி நிர்வாகஸ்தர்கள் சிறிதாக, ஆனால் கவர்ச்சிகரமாகச் சிமிண்டினாலேயே ஒரு கட்டடத்தை எழுப்பி, அதில் பாமர மக்களும், சிமிண்டு தயாரிப்பின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்ளும் வண்ணம் மாதிரித் தொழிற்சாலையைச் சிறிய அளவில் ஒரு பெரிய மேஜையின்மீது அமைத்து, தங்கள் சிப்பந்திகள் மூலம் வருபவர்களுக்கு விளக்கிக் கூற ஏற்பாடு செய்திருந்தார்கள். பொருட்காட்சிக்குள் நுழைந்த ஆண்பெண் அனைவரும் மின் விசையால் இயங்கிக் கொண்டிருந்த



சதுரங்க நிபுணன்



'மாதிரி' இயந்திரங்களைக் கண்டும், தொழிற்சாலையின் ரசாயனப் பிரிவைச் சேர்ந்த ராமபத்திரன், கண்ணன், இருவர்களின் தெளிவான விளக்கங்களைக் கேட்டும் சென்று கொண்டிருந்தனர்.

ஒரு குழுவினர் வந்து சென்றவுடன் சற்று ஓய்வு கிடைத்தது. கண்ணன் அவசரம் அவசரமாக ஒரு வாய் புகையிலையை வாய்க்குள் திணித்துக் கொண்டான். "டேய்! ராமபாணம்! எனக்கு அநேகமாகப் பைத்தியம் பிடித்து விட்டது" என்றான், தன் நண்பனைப் பார்த்து. ராமபத்திரன் இலேசாகச் சிரித்தான்.

"ஆமாம், ஆமாம்! தெரியாமலா உனக்குக் கண்ணன் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்? இரண்டு கண்களை வைத்துக் கொண்டு நாலு கண் பார்வையைத் தாராளமாக அள்ளி வீசும் உனக்கு ஏனப்பா பைத்தியம் பிடிக்காது? நேற்று வந்தாளே, கல்லூரி மாணவிகள் குழுவுக்குத் தலைவி போல ஒருத்தி! நீ கூடக் கிறல் விழுந்த இடத்திலே கிராமபோன் ஒலிக்கருவி இரைவதுபோல் திருப்பித் திருப்பி ஒரே இடத்தைப் பற்றிய வர்ணனையை உளறினாயே! அந்தப் பெண்மணிக்கும் உன் மூளைக் குழப்பத்துக்கும் ஏதாவது...."


கண்ணன் இடைமறித்தான்! "வெறும் சிமிண்டு மூட்டை! அதைச் சொல்லவில்லை! சும்மா திருப்பித் திருப்பி ஒரு நாளைக்கு நூறு தடவைகள் மக்களுக்கு விளக்கம் கொடுத்துக் கொடுத்து மூளை குழம்பிப் போயிற்று! எதைப் பார்த்தாலும் களிமண், கரி, பர்னர், டிராலியாகத் தோன்றுகிறது. நமக்குப் பைத்தியத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கு 'ஸ்பெஷல் டியூட்டி' கொடுத்



கோமதி சுவாமிநாதன்

இருக்கிறார்கள் போலிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால், அநேகமாகப் பொருட்காட்சி முடிந்த பிறகு நானும் பொருட்காட்சிச் சாமானாக எங்காவது கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் போய் அமர வேண்டும்!'' என்று அங்கலாய்த்துக் கொண்டான் கண்ணன். நல்லவேளையாக அவன் பிரலாபத்தை அதிகமாக நீடிக்கவிடாமல் நாலைந்துபேர் 'மாடல்'களைக் கண்டு ரசிக்க வந்து விட்டார்கள். அவன் லாகவமாகப் புகையிலையை ஒருபக்கமாக ஒதுக்கிக் கொண்டு ரசிகர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும் அவர்கள் சந்தேகங்களைப் போக்கவும் தயாரானான்.

''இங்கிருந்து சுண்ணாம்புக் கற்கள் பொடியாகிக் கலவைக்கு இங்கு வருகின்றன. அங்கே கரி..'' அந்தச் சமயம் பார்த்துக் கண்ணனின் கடைவாயிலிருந்த புகையிலைத் துண்டு சிறு கலாட்டா செய்து விட்டது. அதைத் துப்புவதற்கு வசதியில்லை; ஒதுக்கவும் முடியவில்லை. கண்ணன் சில கணங்கள் திணறினான். தான் திணறுவது தெரியாமலிருக்க,''அங்கே கரி... அங்கே கரி....அங்கே கரி..'' என்று வலது கைப்புறமாகக் காண்பித்துக் கொண்டே விழித்தான். அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. அவன் 'கரி கரி'



என்று விரலைக் காண்பித்த திசையில்தான் சாருமதி நின்று கொண்டிருந்தாள்! அவள் பார்த்த பார்வையிலே கண்ணன் கதிகலங்கினான். அவளுடைய விசுவாமித்திர விழிப்பையும், கண்ணனின் திகைப்பையும் கலந்து ரசித்தனர், சாருமதியின் பின்னால் வந்த அவளுடைய தோழிகள். சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டனர்.

சாருமதி நல்ல அழகி. ஆனால் கொஞ்சம் கறுப்பு. அவளுடைய கலகலத்த பேச்சும் சரளமான சுபாவமும் கல்லூரியில் அவளுடைய சக மாணவிகளிடம் அவளுக்கு நல்ல மதிப்பைச் சம்பாதித்துக் கொடுத்திருந்தன. ஆனால் அவள் மனத்திலே மாத்திரம் தன் நிறம் சற்றுக் கறுப்பு என்பது பற்றிக் குறை இருந்து கொண்டே தான் இருந்தது. புகழ்பெற்ற கணிதப் பேராசிரியர் கனகசபையின் பெண் அவள். கனகசபையால் அவளுடைய கணித ஞானத்தை விருத்தி செய்ய முடிந்ததே தவிர, அவளுடைய மனக் குறையைக் குறைக்க முடியவில்லை.

அன்று, சிமிண்டு தயாரிப்பு மாடலைப் பார்த்து அதைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் அங்கே, தன் தோழிகளோடு வந்தவளுக்கு, அந்த 'ஸ்டால்' விளக்கம் கூறும் நபரின் வார்த்தைகள் ஆத்திரத்தை உண்டாக்கி விட்டன. கண்ணன் தன்னை வேண்டுமென்றே சுட்டிக் காட்டிப் பரிகாசம் செய்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது. கணப்பொழுதில் சூழ்நிலையை மறந்து கண்ணகியாக மாறிப் போய் விட்டாள்.

''என்ன மிஸ்டர்! கரிக்கும் காரிகைக்கும் வித்தியாசம் தெரியாத அளவு உங்கள் கண்கள் கோளாறாகப் போய் விட்டனவா? இல்லை உங்கள் நிறம் பொன்னிறம் என்ற பூரிப்பா? கரிதான் மிஸ்டர் கண் கூசும் வைரமாகப் பரிணமிக்கிறது! நான் உங்கள் கம்பெனி முதலாளியைப் பார்த்து...'' கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

கண்ணனுக்குத் தலையில் ஒரு டன் சிமிண்டும் அப்படியே விழுந்து சமாதியாக எழும்பி விட்டது போன்ற உணர்ச்சி!

அசட்டுச் சிரிப்பை அசாத்தியச் சிரமத்தின் பேரில் வரவழைத்துக் கொண்டு, வாயில் புகையிலைப் புரட்சியைப் புறக்கணிக்கவும் முயன்று கொண்டு, ''இல்லை! மன்னிக்கணும்! சிமிண்டு ஒரே கரி! இல்லை...வைரம் ஒரே கரிதான்!.. நீங்களே ஒரு வைரம்...'' என்று பதட்டத்தில் சம்பந்தா சம்பந்தமில்லாமல் உளற ஆரம்பித்தான். சுற்றியிருந்தவர்கள் அசட்டுச் சிரிப்பு சிரிக்கவில்லை. அதற்குப் பதிலாக அதிர்வேட்டுச் சிரிப்பே சிரித்தார்கள்!

சாருமதி மீண்டும் நிலைமையைத் தவறுதலாகப் புரிந்து கொண்டாள். கண்ணன் மறுபடியும் துணிந்து 'வைரம் ஒரே கரி! நீங்கள் ஒரு வைரம்' என்று உளறியதையும் மற்றவர்கள் சிரித்ததையும், தன்னைக் கேலி செய்ய அமைந்த திட்டம் என்று ஊர்ஜிதம் செய்து கொண்டு சிமிண்டு ஸ்டாலை விட்டுக் கிளம்பினாள் சாருமதி தோழியர் புடைசூழ!

ஐந்து நிமிடங்களில், பார்வையாளர்கள் ஒருவருமில்லாமல் 'ஸ்டால்' காலியாக இருந்தது. கண்ணன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து விடுபடவில்லை. ராமபத்திரன் தொண்டையைக் கனைத்து அவன் கவனத்தை மீண்டும் இந்த உலகுக்குக் கொண்டு வந்தான்.

''ராமபாணம்! இன்றைக்கு யார் முகத்திலே விழித்தேனோ, தெரியவில்லையே? சே! சே! என்ன வாழ்வு! என்ன உத்தியோகம்? நேரே மானேஜிங் டைரக்டரிடம் போய் அந்தப் புண்ணியவதி தத்துப் பித்து என்று ஏதாவது உளறி வைத்தால் அப்புறம் நம் பிழைப்பு என்ன ஆகிறது! சரம் பட்ட சிமிண்டு, கட்டி தட்டிப் போகிறாப்போலே உதவாக்கரை ஆசாமிகளாகவல்லவா நாம் ஆகிவிடுவோம்!''

ராமபத்திரன் இடைமறித்தான். ''இந்தா, ஒருமையிலேயே பேசு. பன்மையிலே ஏன் பேசித் தொலைக்கிறாய்? நான் கண்ணை மூடிக் கொண்டு விட்டேன். எனக்கு இந்த விவ

காரமே தெரியாது. நாம், நாம் என்று என்னையும் துணைக்கு இழுக்காதே!..''

''போடா, போ! இப்படி வந்து உட்காரு! அவள் பெயர் மாத்திரம் தெரியும். யார் என்று தெரியாது! நேற்று அவள் சினேகிதி எதிர்ப் பக்கத்துக் கடையில் அவளைக் கூப்பிட்ட போது கேட்டேன். அந்தக் 'கருகிய நிலவு' இருக்கிறதே....!''

''கருகிய நிலவா? அதென்னடா புதுப் பேரு! தோசையா? அடுப்பிலே போட்டால் கருகிப் போக?''

''சாருமதி! 'சார்டு' என்றால் ஆங்கிலத்தில் கருகிய என்று பொருள். 'மதி' என்றால் நிலவு. இப்பொழுது சேர்த்துப் பார்.''

* * *

இரண்டு நாட்கள் கழித்துக் கண்ணனுக்குப் பெரிய அதிர்ச்சி ஒன்று காரியாலயத்தில் காத்திருந்தது. அவன், ரசாயனப் பரிசோதனை சாலையிலிருந்து வெளியே வந்த போது, சாருமதி, சிமிண்டு கம்பெனி பிரதம நிர்வாக அதிகாரியின் அறையிலிருந்து வெளிவந்து, காத்திருந்த 'டாக்ஸி' ஒன்றில் ஏறிக் கொண்டாள். நல்லவேளை! அவள் பார்வை அவன்மீது விழவில்லை. அவன்தான் திடுக்கிட்டுத் தூணின் மறைவில் கூனிக் குறுகி ஒளிந்து கொண்டு விட்டானே?



'டாக்ஸி' கேட்டைத் தாண்டியதும், கண்ணன் விழுந்தடித்துக் கொண்டு ராமபத்திரனிடம்ஓடினான். ''ராமபாணம்! ராமபாணம்!'' என்று உணர்ச்சி மிகுதியால் அவன் கரங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான்.

''என்னடா? இவ்வளவு பதட்டம்? உன்னுடைய 'ரோஸ் வுட்டை' எங்காவது பார்த்துவிட்டாயா?''

''பாவி! குடிகெட்டது! அவளை நான் எங்கே பார்க்க ஒருநாளும்விரும்பமாட்டேனே. அந்த இடத்தில் பார்த்துத் தொலைத்தேனடா? நம் ஆபீஸ் சூபரிண்டெண்ட் அறையிலிருந்து வெளியே போகிறதைப் பார்த்தேன்! போதுமா?....நான் எந்த நிமிஷத்திலும் ஒரு மாஜி சிமிண்டு கம்பெனி ரசாயனப் பரிசோதகனாக ஆகிவிடுவேன்! இனிமேல், எவ்வளவு சிமிண்டைக் குழைத்து எனக்கும் இந்தக் கம்பெனிக்கும் இடையே பூசினாலும் ஒட்டாது......! இந்த அற்பக் காரியத்துக்காக இவ்வளவு தூரமா வந்து புகார் செய்வாள்? நான் என்ன செய்து விட்டேன்? என்ன சொல்லி விட்டேன்?....நான் அப்போதே நினைத்தேன்! பொருட்காட்சி விஷயம் பொல்லாப்பு நிறைந்தது!...இந்த சூபரிண்டெண்டாவது உடனே நம்மையும்....''

''உஷ்! 'என்னையும்' என்று ஒருமையிலேயே பேசு, தம்பி!''

''நாசமாய்ப் போக! 'என்னையும்'...... போதுமா? கூப்பிட்டுக் கேட்டிருந்தால் நிலைமையை நான் தெளிவாக விளக்கியிருப்பேனே!....''

''நம் எஜமானர் தங்கமானவர்! உன்னை அப்படியெல்லாம் கூப்பிட்டு ஒரு பெண் பிள்ளை முன் கேள்வி போடுவாரா?....சே! சே! நாலுநாள் கழித்து உனக்கு அழைப்பு வரும். 'மிஸ்டர் கண்ணன்! உங்களுக்கு எவ்வளவு சர்வீசாகிறது?' என்பார். உன் கால் நடுங்கும்! நாக்கு புரளும்! 'சரி! உங்கள் சேவை இந்த ஸ்தாபனத்துக்கு இன்றுடன் போதும்! மூன்று மாதச் சம்பளத்தையும் உங்களுக்குண்டான சேமிப்புத் தொகையையும் வாங்கிக் கொண்டு போங்கள். அக்கவுண்டன்டைப் போய்ப் பார்க்கிறீர்களா? வணக்கம்' என்பார். உன் தலை ஒரு சுற்றுச் சுற்றிக் கீழே சாயும். அப்புறம் எத்தனை 'ஜாக்கி' வைத்து அந்தத் தலையை நிமிர்த்தப் பார்த்தாலும் முடியவே முடியாது!''

''அட கிராதகா! எனக்கு வேலை போவதில் உனக்கு அவ்வளவு ஆனந்தமா? கொஞ்சம் கூடப் பதறாமல், சுருதி சுத்தமாக, அந்தச் சோகக் காட்சியை வர்ணிக்கிறாயே! அவர் பேசி முடிகிறவரையில் நான் நின்றுகொண்டா இருப்பேன்? ஆம்புலன்ஸ் காரில் ஆஸ்பத்திரியை நோக்கிப் பாதி தூரம் போயிருப்பேன்! ஆனால், ஆஸ்பத்திரிக்குப் போன உடனே டாக்டர், என்னைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்குவார். 'கரோனரி திராம்போஸிஸ்' — இருதயம் நின்று போய் விட்டது என்பார். உங்களுக்கெல்லாம் ஒரு நாள் லீவு கிடைக்கும். அந்த மட்டிலாவது நான் உங்களுக்கு உபயோகமாக இருப்பேன் அல்லவா?''


''நெஞ்சிலே உரம் இல்லாத பயங்கொள்ளி! அவளைப் பார்த்து 'ஹி ஹி' என்றதில் குறைச்சலில்லை. இப்போது ஏதேதோ பிதற்றுகிறாய். நேரே அந்தப் பெண் வீட்டுக்கே போனாலென்ன? போய், நிகழ்ந்ததைத் தெளிவாக எடுத்துரைத்து வேணுமானால் மன்னிப்புக் கேள்! அவளே மறுபடியும் வந்து நம் எஜமானரிடம் உனக்குப் புதிதாக ஒரு நன்னடத்தை சர்டிபிகேட் கொடுப்பாள்....! அவள் பெற்றோர்கள் வீட்டில் இருந்தால் அவர்களிடமும் சொல்லு. பயந்து நடுங்காதே!''

''அவள் வீடு எங்கேடா இருக்கு?'' கிணற்றுக்குள் இருந்து பேசினான் கண்ணன்.

''ராமானுஜ நகர் காலனியில் இருக்கிறாளாம். அவள் தகப்பனார், சர்வஜனக் கல்லூரியிலே கணிதப் பேராசிரியராம்! விசாரித்துக் கொண்டு இப்போதே போ!''

* *

கணிதப் பேராசிரியர் கனகசபையின் வீட்டைக் கண்டு பிடிப்பதில் அவன் சிரமப்படவில்லை. அவனுக்குக் கூட ஐந்தாறு வருடங்களுக்கு முன்னால் கும்பகோணம் கல்லூரியில்



தென் மதராஸ் எலெக்டிரிக் சப்ளை கார்ப்போரேஷனைச் சேர்ந்த திப்பிராஜபுரம் ஸ்ரீ டி. வி. எஸ். நாராயணஸ்வாமி அய்யரின் குமாரி சௌ கமலாவுக்கும், செய்யாமங்கலம் ஸ்ரீ முத்துஸ்வாமி அய்யரின் குமாரன் சிரஞ்சீவி நாராயணஸ்வாமிக்கும் 11—6—56 அன்று திருமருதூரில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது. வாழ்க, மணமக்கள் !

கனகசபை என்ற ஒரு கணித போதகர், சில காலம் கணிதம் கற்பித்தார். தங்கமானவர். அந்தக் கனகசபைமாதிரி இவர் இருக்கிறாரோ? அல்லது கடுவன் பூனை மாதிரி விழிப்பாரோ ? புரியவில்லை ! இப்படிச் சிந்தனை செய்து கொண்டே அந்தப் பங்களாவை அடைந்தான் கண்ணன்.

பங்களா வாசலில் ஒருவருமில்லை. போர்ட்டிகோ வரையில் போய்விட்டான். முன் எச்சரிக்கை இன்றி, பாய்ந்து வந்த பொல்லாத நாய் ஒன்று அவன் பாதத்தின் விரல்களை மோந்துபார்க்க ஆரம்பித்தது. ''ஐயையோ!'' என்று எகிறிக் குதித்தான் கண்ணன் ! '' நாய் கடிக்காது !'' என்று இனிமை நிறைந்த குரல் பின்னாலிருந்து வந்தது. திரும்பிய கண்ணன் திகைத்துப் போனான் ! சாருமதியும் அவனைக் கண்டு தூணைச் சமைந்து நின்று விட்டாள் !

நல்ல வேளை ! இந்த நெருக்கடியான மௌன நிலையை அதிக வினாடிகள் நீடிக்க விடாமல் வராந்தாவில் தோன்றினார் கனகசபை. '' என்னம்மா ? இது யாரு ?'' என்ற அவர் குரல் கண்ணனைத் திரும்பிப் பார்க்க வைத்தது. மீண்டும் திகைப்பு. சாக்ஷாத் பழைய கும்பகோணம் கனகசபையேதான். 'தெரிந்தவரிடமேயா வந்து இப்படிச் சிக்கிக் கொண்டோம்?' என்று எண்ணிய போது அவனுக்குத்தான் மூளை தெறித்துச் சிதறியது போல் இருந்தது.

''இவர்தானப்பா நான் சொன்ன ஆசாமி'' என்று சொல்லிக் கொண்டு சாருமதி படிகள் வழியாக ஏறினாள் வராந்தாவுக்கு. புகார் பலமாக நடந்திருக்கிறது என்று கண்ணன் ஊகித்துக் கொண்டான்.

'' ஸார் ! மன்னிக்க வேண்டும். நான் ரொம்ப....''

கனகசபை இடையில் குறுக்கிட்டார். ''நீ நம் பழைய கண்ணன். கும்பகோணம் மாணவன். அப்போதெல்லாம் நீ நல்ல பையனாக இருந்தாயே, அப்பா !....''

கண்ணனின் ரத்தம் சில் என்று உறைந்தது. 'அப்போது நல்ல பையனாக இருந்தாயே ?' என்றால் என்ன பொருள் ? இனி வழியே இல்லை ! அவர் மனம் ஏற்கனவே அவனுக்குப் பாதகமாக முடிவு செய்து விட்டிருக்கிறது. விசாரிக்க அவர் தயாரில்லை என்று தெரிந்தது. இனி என்ன செய்து என்ன பயன் ? இவரா போய் ஆபீஸ் சூபரின்டென்டிடம் புகாரை வாபஸ் வாங்குவார் ?

கண்ணனின் மனம் துவண்டது.

'' சார் ! என்னை....''

கண்ணனைக் கனகசபை பேச விடவில்லை. '' உள்ளே வந்து உட்காரப்பா ! இந்தச் சதுரங்கப் பைத்தியம் உன்னை எப்போ பிடித்தது ? நீ பெரிய சதுரங்க நிபுணனாமே? இன்றுதான் கேள்விப்பட்டேன் !''

அவர் பேச்சு மேற்கொண்டு கண்ணன் செவிகளில் விழவில்லை. குழப்பம் குபீரென்று அதிகமாயிற்று.''இவரென்ன புதுப்பாதையில் பேச்சைக் கொண்டு போகிறாரே ?'' என்ற அதிர்ச்சி. கண்ணன் ஒரு சதுரங்க விளையாட்டு நிபுணன்தான்! அவன் தொழிற்சாலை பொழுது போக்கு சங்கக் கோப்பைகள் எல்லாம் அவனுக்குத்தான் வரும்!....'அதற்கும் கனகசபைக்கும் இப்போ என்ன சம்பந்தம்?'

''இல்லே !....ஏதோ பொழுது போக்காக....'' என்று கண்ணன் இழுத்தான்.

குளிர்பானத் தட்டுடன் வந்தாள் சாருமதி. கடகட வாங்கிக் கட்டிக்கொள்ளத் தயாராக வந்த கண்ணனுக்கு இந்தக் காட்சி இரண்டாவது அதிர்ச்சி.

'' அப்பா! இவர் ரொம்பப் பிரமாதமாக ஆடுவாராம் ! அவருடைய ஆபீஸ் சூபரின்டென்டே புகழ்ந்தார் ! இங்கு வந்து கற்பித்துத்தர அனுமதியளிப்பதாகவும் சொன்னார். இவரை ஏற்கனவே பொருட்காட்சியில் பார்த்திருந்தாலும் இவர்தான் சதுரங்க விளையாட்டுக்காரர் என்று ஆபீஸ் சூபரின்டென்ட் சொன்ன பிறகுதான் தெரிந்தது. இதை எடுத்துக்கொள்ளச் சொல்லுங்கள், அப்பா!'' என்று தட்டை நீட்டினாள்.

கண்ணனுக்குச் சந்தேகம் வந்து விட்டது. இது கனகசபை வீடுதானா, அல்லது ககன மார்க்கமாகப் பறந்து சுவர்க்க பூமிக்கே வந்து விட்டோமா என்று. மலைபோன்ற குப்பையைக் 'குபுக்' என்று ஒரே சாய்ப்பில் கீழே கொட்டும் முனிசிபல் லாரிபோல், பயத்தையும் குழப்பத்தையும் மொத்தமாக இதயத்திலிருந்து வெளியேற்றினான். இதயம் காற்றாடியாக மிதந்தது இன்ப வானிலே.

''கண்ணா! நம்ப சாரு இப்போ சதுரங்கம் கற்றுக்கொள்ள ஒற்றைக் காலில் நிற்கிறாள்.. நீ அவளுக்கு....''

''அதுதானே ஆபீஸ் துரை சொன்ன மறு வினாடி இங்கு வந்தேன். இன்றே நல்லநாள். ஆரம்பிக்கலாம். மூன்றே மாதத்தில் ரஷ்யாவுக்குப் போய் ஆடி ஜயிக்கும்படியாக ஆக்கி விடுகிறேன்'' என்று சமத்காரமாகப் பேசினான்

கண்ணன். மன அரங்கில் மூன்று விநாடிகளில் அந்த மூன்று மாதத் திட்டத்துக்கு ஒத்திகை நடத்தினான். மூன்று மாதம் என்ன? இரண்டாவது மாதத்துக்குள்ளாகவே திருமணம் நடந்து விடாதா? எத்தனையோ ராஜாக்களையெல்லாம் திறமையால் மடக்கி ஆட்டத்தில் வெற்றி காணும் அவனுக்கு ஒரு பெண்ணின் இதயத்தை மடக்கத்தானா முடியாது!

அந்தக் கணத்தில் அவன் ஆசைக்கோட்டையின்மீது கனகசபை வீசிய ஹைட்ரஜன் குண்டு அசுர வேகத்தில் வந்துவிழுந்து தலை கிறங்கச் செய்து கொண்டிருந்தது.

"கண்ணா! இரண்டே மாதம் போதும்: அகில இந்திய சதுரங்க நிபுணன் சாரங்கபாணி எனக்கு மாப்பிள்ளையாக வரப்போகிறான். நிச்சயதார்த்தம் ஆகிவிட்டது! அவன் தன் மனைவிக்கு ஆட்ட சம்பந்தமான நுணுக்கங்கள் தெரிய வேண்டுமென்று விரும்புவானல்லவா? ஏற்கனவே நன்கு தெரியும் என்று அவனிடம் சொல்லியாயிற்று! இப்போது அந்த வார்த்தையைக் காப்பாற்ற உன் உதவி தேவை!" என்றார் கனகசபை.

கண்ணனது கற்பனைக் கோட்டை இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது.

படித்துப் பாருங்கள்

பிராதமிக் கைடு (ஹிந்தி)

ஆண்டுதோறும் ஹிந்தி பரீட்சைகளுக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் போகிறார்கள். அவர்களில் பலர் உபாத்தியாயர்களின் உதவி யின்றியே தாமாகப் படித்தவர்களாகவும் இருக்கலாம். யாருக்குமே பரீட்சையில் தேறிவிட வேண்டும் என்ற துடிப்பு இருப்பது இயல்புதான். இதை அறிந்து உஷா பிரகாசன் மந்திரத்தார் மாணவர்களுக்கு வழி காட்டியாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த 'கைடு' தயாரித்து வெளியிடும் பணியை மேற் கொண்டிருக்கிறார்கள். ஹிந்தி பரீட்சையில் தேற விரும்பும் மாணவர்கள் இப் புத்தகத்தின் துணை கொண்டு வெற்றி பெற முயலலாம்.

பிரசுரித்தவர்: உஷா பிரகாசன் மந்திர், தபால் பெட்டி நம்பர் 1422, தியாகராய நகர் சென்னை—17. விலை ரூ. 1—8—0.

டைப்பிஸ்ட் கைடு (ஆங்கிலம்)

நாட்டில் டைப்பிஸ்டுகளுக்கு நல்ல கிராக்கி. அதிலும் பிழையின்றி அழகாக டைப் அடிப்பவர்களுக்குள்ள மதிப்பு வெகு அதிகம். கவனக் குறைவால் ஏற்படும் சிறு எழுத்துப் பிழைகூட சில சமயம் தவறான பொருள் கொள்ளும்படி செய்து விடுவது உண்டு. என்ன என்ன பிழைகள் ஏற்படக் கூடும்! அவற்றைத் தவிர்ப்பது எப்படி? இவை போன்ற விஷயங்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

பிரசுரித்தவர்:—இ டைப் ஸ்கூல், மேல புதுத் தெரு, சாத்தூர். விலை: அணா 12.

என் வாழ்க்கையின் அம்சங்கள்

மகா கனம் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியாரைப் பற்றி நம் நாட்டில் அறியாதவர்களே இருக்க மாட்டார்கள். ஆங்கிலத்தில் அவருக்கிருந்த வாக்கு வன்மை, அவருக்கு உலகப் பிரசித்தியைத் தேடித் தந்தது. இவர் பள்ளி ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிப் பிறகு தம் திறமையினால் மிக உயர்ந்த பதவிகளையெல்லாம் வகித்தார். நம் நாட்டு விடுதலைக்கு உழைத்தவர் சாஸ்திரியார். காந்தி மகானின் அருமை நண்பர். சுமார் ஐம்பது வருஷகாலம் பொது வாழ்வில் பங்கெடுத்துக் கொண்டு பல துறைகளிலும் சேவை செய்த அவர், நம் தலைவர்களைப் பற்றியும், பிற நாட்டு நல்லறிஞர்களைப் பற்றியும் தம் சொந்த அநுபவத்திலிருந்து மிகவும் சுவை தரும் வண்ணம் எழுதியிருக்கிறார். இத்தகைய நூல்கள் பல வர வேண்டும்.

ஆசிரியர்: வ. ச. சீனிவாச சாஸ்திரி; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை—4. விலை ரூ. 2—4—0.

மாஜி மனைவி

இந்தக் கதைத் தொகுதியில் அடங்கியிருக்கும் பதினெட்டுக் கதைகளும் பதினெட்டுக் கோணங்களில் செல்லுகின்றன. மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் இந் நூலாசிரியர் தம் கதைகளில் இழைய விட்டுக் களிக்கச் செய்கிறார். கோபம், ஏமாற்றம், மன உருக்கம், ஹாஸ்யம், கனவு உலகில் நிகழும் அதிசயக் காட்சி எல்லாம் கதைகளாக உருவெடுத்துப் படிப்பவர்களுக்கு விதம் விதமான சுவைகளை அள்ளித் தருகின்றன. கதைகளின் ஊடே பேச்சு நடையும் கலந்து கதா பாத்திரங்களை நம் கண் முன்னே தத்ரூபமாகக் கொணர்ந்து நிறுத்துகின்றன. இந் நூலிலுள்ள சிறுகதைகள் மிகவும் அபூர்வ சித்திரங்கள் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்: கி. ரா. பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை—4. விலை: ரூ. 2—4—0.

சுந்தரகாண்டம் (இரண்டு பாகங்கள்)

புனித தீர்த்தங்களான காவிரியையும் யமுனையையும் போல நம் நாட்டில் வால்மீகி ராமாயணமும் தனி மதிப்புடன் விளங்கி வருகிறது. அதிலும், சுகிர்தங்களனைத்தையும் தரவல்ல சுந்தரகாண்டத்துக்கு என்றும் தனி மதிப்பு உண்டு. சிறையிருந்த அன்னை சீதையின் துயர் களைந்து, ஐயன் ராமனுக்கு மகிழ் லூட்டிய அநுமனின் வீரக் கதையல்லவா அது?

சம்ஸ்கிருத சுலோகங்களுடன் பிரதி பதத்துக்கும் தமிழில் பொருள் கொடுக்கப்பட்டு இப்பதிப்பு நல்ல தாளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

பிரசுரம்: வ ா வி ள் ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ், நெ. 490, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை—21 விலை: ஒவ்வொரு பாகமும் ரூ. 12—0—0.

தேவியின் கடிதம்

தாம்பத்ய வாழ்க்கை

வசுமதி ராமசாமி

அன்புள்ள சுஜாதா,

நீ தாம்பத்தியத்தைப் பற்றி எழுதச் சொல்லிக் கேட்டிருக்கிறாயே. அது அவ்வளவு சுலபமாகச் சொல்லி விடக் கூடிய விஷயமல்லவே.

காந்திஜி உயர்தர தாம்பத்தியத்துக்கு உதாரணமாக ராமனையும் சீதையையும் சொல்வது வழக்கம். குழந்தைகளிடம் அன்பைச் செலுத்தி, அன்பைப் பெற வேண்டுமென்று சொன்னேனல்லவா? அதைப்போல் கணவனுக்கு மரியாதை செய்து மரியாதை பெறவேணுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

நாகரிகத்தில் முன்னேறிய நாடுகளில் கல்யாணம் செய்து கொள்ளவே ஆண்கள் பயப்படுகிறார்கள். மனைவியைத் தனக்கு ஒரு சுமையாகக் கருதி நாற்பத்தைந்து வயது வரையில் விவாகத்தைத் தள்ளிப் போடுகிறார்கள். பிறகும் உறுதியான மனமில்லை. நிச்சயமற்ற வாழ்வில் மன அமைதி குறைகிறது. அளவற்ற வருவாய் இல்லாதவன் கல்யாணம் செய்து கொள்ள அஞ்சுகிறான். இப்படியெல்லாம் பார்க்கும்போது வாழ்வு சாரமற்றுப் போய் விடுகிறது. அந்தக் கஷ்டம் அங்கே பெண்களுக்கும் இருக்கிறது. கணவனைக் கைப் பிடிக்கும் நோக்கத்துடன் உத்தியோகம் பார்க்கப் போகிறார்கள்.

அதற்கு நேர்மாறானது நம் நாட்டின் சூழ்நிலை. பெண்ணுக்கு விவாக வயது வந்ததும் கல்யாணத்தைச் செய்துவிட வேண்டுமென்று பெற்றோர்கள் துடிக்கிறார்கள். கல்யாணம் செய்து கொண்டு கைப்பிடித்த கணவனுடன் அன்பு வாழ்க்கை நடத்துவதுதான் நம் பாரதப் பெண்ணினுடைய வாழ்க்கை லட்சியம். ஒரு கன்னிகையின் வாழ்வு அவள் கல்யாணத்தில்தான் மலருகிறது. கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து செய்யும் நற்காரியங்கள்தான் பலன் தரும். இல்லற தர்மத்தை ஏற்காமல் தனி மனிதனாக நின்று ஒருவன் செய்யும் நற் காரியங்களேதுவும் பலன் தர மாட்டா. ''காதல் ஒருவனைக் கைப் பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து'' வாழ்வதைத் தானே மகாகவி ஒரு பெண்ணின் லட்சிய வாழ்வாகக் கூறியிருக்கிறார்!



முக்கிய விசேஷ தர்மங்களுக்கு மனைவியின் கையினால் தண்ணீர் விட்டால் தான் பூர்த்தியாகுமென்று அந்தக் காலத்துக்கு உகந்தபடி ஏற்பாடுசெய்து விட்டார்கள். அவர்கள் பழக்க வழக்கங்கள் எளிமையானவை.

அற்ப விஷயத்தில் அறுந்து விடக் கூடிய சின்னக் காரியமல்ல விவாகம். கணவன், மனைவிக்கு அபிப்பிராய பேத மிருக்கலாம். ஒருவருக்கொருவர் மனப்பான்மையில் வித்தியாச மிருக்கலாம். அதற்காக ஐக்கிய பாவம் பாதிக்கப்படவேண்டியதில்லை. எல்லாத் துறைகளிலும் மாறுதல் செய்து கொள்வது தான் நாகரிகத்தின் வளர்ச்சி யெனக் கருதி நம்முடைய நாட்டின் தாம்பத்தியத்தில் விவாகரத்து என்ற பரிதாபமான பயங்கரமான ஆயுதம் கையாளப் படாமல் இருக்கத் தான் விரும்புகிறேன். எவ்வளவுதான் காலம் மாறினாலும் சில விஷயங்கள் எந்தக் காலத்திலும், எந்த நிலையிலும் மாறுபடாத புனிதத்துவம் வாய்ந்தவை. நம் நாட்டு தாம்பத்திய வாழ்க்கையில் குணபேதங்களுக்காகத் தன்னுடைய உயர்வை, கணவனோ, மனைவியோ இழக்க வேண்டாமல்லவா?

அமெரிக்காவில் மிகப் பெரிய பணக்காரியான மாது ஒருத்தி தற்கொலை செய்து கொண்டதாக நீகூடப் பத்திரிகையில் படித்திருக்கலாம். தனக்குக் கஷ்டமே யில்லையென்றும், அன்பு, தியாகம் செய்ய ஆசை யிருந்தும் ஒருவருமில்லை யென்றும், நினைத்தபடி நடப்பதால் சலிப்பு ஏற்பட்டு விட்டதாகவும் கூறித் தன்னுடைய தற்கொலையின் காரணத்தை விவரித்திருக்கிறாள்.

இன்றையச் சூழ்நிலையில் தாம்பத்தியத்தில் மாறுதல்கள் இருக்கின்றன. அதைப்பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

—பூமாதேவி



குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்

ரம்மிய மணம் கொண்ட ப்ரோடெக்ஸ் உயர்ந்தரக சர்வ பிரயோக வாசனைப் பௌடர்; மிக மிகக் குறைந்த விலையில் மிக மிகப் பெரிய டப்பா! இந்தியா வெங்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ப்ரோடெக்ஸ் டால்கம் பௌடரைவிரும்புகின்றன—அதன் வசீகரமான வாசனையினாலும் எல்லாவற்றிற்கும் உபயோகப்படும் பரிமள டால்கம் பௌடர் என்பதனாலும்......

இன்று ப்ரோடெக்ஸ் உபயோகித்தீர்களா?

குணம் உத்தரவாதம்
கால்கேட் பாமாலிவ்
அளிக்கிறது



ப்ரோடெக்ஸ்
சர்வப்பிரயோக
வாசனைப்பௌடர்



சம்சாரி ஒருவன் ராஜாவைப் பற்றி அதிருப்தி அடைந்து காட்டுக்குச் சென்று தவம் செய்தான்.

"தெய்வமே! நம்முடைய ராஜா நல்லவன் அல்ல. எங்களுக்கு ஒரு நல்ல அரசனைக் கொடு!" என்று அவன் தவம் செய்தான்.

இன்னொருவன், ஒரு ஏழை. அதே காட்டில் தவம் செய்தான். "நான் நம்பிய நண்பன் மோசம் செய்து விட்டான் சுவாமி! எனக்கு வேறே ஒன்றும் வேண்டாம். நல்ல நண்பனைக் கொடு!" என்று அவன் வேண்டிக் கொண்டு தவம் செய்தான்.

ஒரு சேவகன் "நான் என்ன செய்தாலும் இந்த எஜமானனுக்குத் திருப்தியில்லை" என்று காட்டுக்கு ஓடிப் போனான். அவனும் அங்கே தவம் செய்தான்.

"என் தகப்பனே எனக்குச் சத்துருவாகி விட்டான்" என்று ஒரு மகன் வீட்டை விட்டு வனம் சென்று தவம் செய்யப் போனான்.

மற்றொருவன் தன் தாயின் பேரில் கோபங் கொண்டு, "கடவுளே, எனக்கு ஒரு நல்ல தாய் வேண்டும்" என்று தவம் செய்தான்.

இன்னொருவன் சுவாமி பேரிலேயே கோபித்துக் கொண்டு எல்லாவற்றையும் துறந்து விட்டு, காடு சென்று இன்னது செய்வது என்று தெரியாமல் பித்தனாக உட்கார்ந்து தவம் செய்ய ஆரம்பித்தான்.

அங்கே ஒரு வேடன் அவனுடைய நாயுடன் வந்து சேர்ந்தான். தவம் செய்பவர்களைக் கண்டு வேட்டை நாய் சிரித்தது.

ஊமைப் பிராணி

"அடே, பயல்களே! ஏன் உங்களுக்குப் புத்தி இப்படிக் கெட்டுப் போச்சு? நீங்கள் என்னைப் போல் நாயாகப் பிறந்திருந்தால் சந்தோஷமாக இருந்திருப்பீர்கள்" என்றது.

"அது எப்படி?" என்றான் தெய்வத்தின் மேல் கோபங் கொண்ட பக்தன்.

மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக "அது எப்படி?" "அது எப்படி?" என்று கேட்டு நாயைச் சுற்றிக் கொண்டார்கள்.

"பாருங்கள், என் எஜமான் வேடனே! எனக்கு அவன் தகப்பன், அவனே தாயும், அவனே நண்பன், அவனே ராஜா, அவனே கடவுள்! எனக்கு என்ன குறை? நீங்களும் ஒவ்வொருவரும் ஒரு நாயாகப் பிறந்து ஒரு மனிதனிடம் போய்ச் சேருங்கள். சந்தோஷமாக இருப்பீர்கள்! பக்தியில் அல்லவோ சுகம் இருக்கிறது. விவேகத்தை நம்பி அவிவேகிகள் ஆகிவிட்டீர்கள்!" என்றது நாய்.

வேடன் யார் தெரியுமா? அவனே மகாதேவன். அற்ப மிருகத்தைக் காட்டித் தவம் செய்து கொண்டிருந்தவர்களுக்குப் புத்திகற்பிக்க வந்தான்.

குழந்தைகளே! நீங்களும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களைக்

கவனித்துப் பாருங்கள்—நான் சொன்னது விளங்கும். நாய் ஊமைப் பிராணி, பேசாது. ஆனால் அதன் கண்களைப் பாருங்கள். கண்களைப் பார்த்தால் உள்ளே ஒரு நல்ல குழந்தை, மிக நல்ல குழந்தை நாயின் உடலில் ஊமையாக அடைத்து வைக்கப் பட்டிருப்பதைக் காண்பீர்கள்!

நாய் மிக நல்ல ஜந்து. அதை நம்பலாம். அவசியம் ஏற்பட்டால் அது தன் உயிரையே கொடுக்கும்—ஒரு யோசனையுமில்லாமல் கொடுத்து விடும்!

நாயை நன்றாக அன்பாக, வளர்க்க வேண்டும். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு நோய் வந்து விட்டால் பார்த்துச் சகிப்பது கஷ்டம். அழ முடியாமல் அழும்.

வெள்ளைக்காரர்கள் தாங்கள் வளர்க்கும் நாய்களை மிக அன்புடன் நன்றாகப் பார்த்துக் கொள்ளுகிறார்கள். நாம் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்களில் நாய்க் கதைகள் ரொம்ப உண்டு. நம்முடைய நாட்டில் நாய்க் கதைகள் அவ்வளவாக இல்லை. ஒரு கதை உண்டு. தருமராஜா பாண்டவர்களில் மூத்தவர். கடைசியாகத் தம்பிகளுடன் மலை ஏறிச் சுவர்க்கம் சென்றார். மலைமேல் ஏறும் போது மனைவியும் தம்பிகளும் ஒருவர் பின் ஒருவராக தேகசக்தி தீர்ந்து போய் நடக்க முடியாமல் விழுந்து மாண்டார்கள். அப்போது ஒரு நாய் மட்டும் தருமராஜாவைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. மனைவி திரௌபதியும் தம்பிகளும் ஒருவர் பின் ஒருவராக உடல்களை விட்டுப் பிரிந்து அவர்களுடைய ஆத்மாக்கள் சுவர்க்கம் சென்று விட்டன. ஆனால் நாய் மட்டும் தருமபுத்திரன் கூடவே கடைசிவரையில் சென்றது.




இந்திரன் தருமபுத்திரனைச் சுவர்க்கம் அழைத்துப் போக ரதத்துடன் வந்தான். "நாயை விட்டு விட்டு நான் மட்டும் ரதம் ஏறமாட்டேன்" என்று தருமபுத்திரன் சொன்னதைக் கண்டு இந்திரன் வியந்து மிகவும் பாராட்டினான்.

அப்போது யுதிஷ்டிரன் கண்டு கொண்டான்; நாயானது தரும தேவதையே என்றும் தன்னைச் சோதனை செய்யவே அது வந்து தன்னை அடைந்தது என்றும் கண்டு கொண்டான்.

இது நாயைப் பற்றிய கதையல்ல; தரும புத்திரனுடைய குணத்தைப் பற்றிய கதை. ஆனாலும் புராணத்தில் தருமத்தை ஒரு நாயாக்கிச் சொன்னது கவனிக்கத் தக்கது.

பசு பால் தரும். நாய் தன் அமுதமான பக்தியைப் பாலாகச் சொரிந்து தருகிறது.



குவாக் குவாக்

'குவாக் குவாக்' என்குது பார்
குள்ள வாத்து—அதைக்
குரல் கொடுத்து அழைக்குது பார்
வெள்ளை வாத்து

ஒய்யாரமாய் நடக்குது பார்
சீமை வாத்து—தன்
உடலை ஆட்டி நடக்குது பார்
ஊமை வாத்து

தையா தையா என நடக்குது
நொண்டி வாத்து—
தாளம் போட்டுச் சிரிக்குது பார்
குண்டு வாத்து

'பராக் பராக்' என்குது பார்
அம்மா வாத்து—சுற்றிப்
பார்த்து டக்காய் நடக்குது பார்
அப்பா வாத்து


பறக்கத் துடிக்குது பார்
சோனி வாத்து—அதைப்
பரிகாசம் செய்யுது பார்
கோணல் வாத்து


குள்ள வாத்து வெள்ளை வாத்து
கோணல் வாத்தோடு
குண்டு வாத்து நொண்டி வாத்தைக்
கூட்டிப் போகுது பார்

சேனை போலச் சேர்ந்து பழைய
சேற்றுக் குளத்தில்
சிங்காரமாய் நீந்துது பார்
வாத்துக் கூட்டம்

பட்டை மூக்கை நீரில் மூக்கிப்
பாசிப் புழுவைப்
பார்த்துத் தேடிப் பிடிக்குது பார்
வாத்துக் கூட்டம்

—காட்டூர் கண்ணன்





குட்டிக் காளை

ஒரு கிராமத்தில் சொக்கன் என்ற வயோதிகனும் அவன் மனைவியும் வசித்து வந்தார்கள். இருவரும் சாலைகள் போடுவதற்கு வேண்டிய தார் எண்ணெய் தயார் செய்து பிழைத்து வந்தார்கள்.

ஒரு நாள் சொக்கனிடம், அவன் மனைவி "வைக்கோலில் எனக்கு ஒரு சின்னக் காளைக் கன்றுக்குட்டி செய்து கொடுங்கள்" என்று கேட்டாள்.

"எதற்கு?" என்று கேட்டான் சொக்கன் வியப்போடு.

"நான் வேலைக்குப் போகும் இடங்களில் அந்தக் குட்டிக் காளையுடன் கொஞ்ச நேரம் வேடிக்கையாகப் பொழுது போக்குவேன்" என்றாள் கிழவி.

சொக்கன் ஓர் அழகிய காளைக்கன்றுக் குட்டியைச் செய்து அதன் முதுகிலும் பக்கவாட்டிலும் தார் எண்ணெயைக் கனமாகப் பூசிக் கொடுத்தான். வைக்கோலில் செய்த காளைக்கன்று பார்ப்பதற்கு ரொம்ப ரொம்ப அழகாகவும் வேடிக்கையாகவும் இருந்தது!

ஒரு காட்டுக்குப் பக்கத்தில் சாலை போட்டுக் கொண்டிருந்தார்கள். சொக்கன் அங்கே தார் எண்ணெய் காய்ச்சிக் கொண்டிருந்தான். சொக்கன் மனைவி அங்கே வேலை செய்யப் போகும்போது அந்தக் குட்டிக் காளையையும் தூக்கிச் செல்வாள். ஓய்வு நேரத்தில் அதைப் பக்கத்தில் கட்டி வைத்து விட்டு நூல் வேலை செய்வது வழக்கம். அன்று ஒரு நாள் நூற்று நூற்றுக் களைத்துப் போனதால் கிழவி தூங்கிப் போய் விட்டாள். அப்போது இருட்டி விட்டது. சொக்கன் ரொம்பத் தூரத்தில் இருந்த சாலைக்குப் பக்கத்தில் தார் வேலை செய்து கொண்டிருந்தான்.

திடீரென்று கிழவி இருந்த இடத்துக்குக் காட்டுக்குள்ளிருந்து ஒரு கரடி வந்தது. கிழவியின் பக்கத்தில் இருந்த குட்டிக் காளையைப் பார்த்து அதிசயப் பட்டது. அதன் அருகில் சென்று "நீ யார்?" என்று கேட்டது.

காளைக்குட்டி கண்களை அகல விழித்துக் கொண்டே, "நான் குட்டிக் காளை. என் எஜமானன் என்னை வைக்கோலிலும் தாரிலும் செய்தார்" என்றது.

"அப்படியா! எனக்கு நீ ஒரு உபகாரம் செய்ய வேண்டும். என்னை ஒரு நாய் கடித்து என் உடம்பில் கொஞ்சம் கிழிந்து விட்டது. தார் வைத்து அதை ஒட்டிவிட வேண்டும். கொஞ்சம் தார் தருகிறாயா?" என்று கேட்டது.

குட்டிக்காளை பேசாமல் மௌனமாக நின்றது. கரடிக்குக் கோபம் வரவே அதன் மீது பாய்ந்து தாரைப் பிய்த்தது. அவ்வளவுதான்! கரடி, குட்டிக் காளை உடம்பிலிருந்த தாருடன் ஒட்டிக் கொண்டு விட்டது. தாரிலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு அப்பால் போக முடியாமல் தவித்தது.

இதற்குள் கிழவி தூக்கம் கலைந்து எழுந்து பார்த்தாள். குட்டிக் காளையுடன் கரடி ஒன்று ஒட்டிக் கொண்டு தவிப்பதைக் கண்டு கூச்சலிட்டாள். சாலையில் வேலை செய்து கொண்டிருந்த சொக்கன் ஓடி வந்து அந்தக் கரடியைப் பிடித்துக் கூண்டில் அடைத்து விட்டுக் கொண்டு போனான்.

சொக்கனும் கிழவியும் மறுநாளும் காட்டுக்குப் போனார்கள். கிழவி நூல் வேலை செய்து கொண்டே தூங்கி விட்டாள். வழக்கப்படி பக்கத்தில் குட்டிக் காளையைக் கட்டிப்போட்டாள். பொழுது போன சமயம் அங்கு வந்த ஓநாய் ஒன்று குட்டிக் காளையைப் பார்த்துத் தன் முதுகுப்புறம் கிழிந்திருப்பதால் கொஞ்சம் தார் வேண்டும் என்று கேட்டது.

குட்டிக்காளை பதில் சொல்லாமல் அப்படியே நின்றது. ஓநாய் அதன் மீது பாய்ந்தது. கரடியைப் போலவே ஓநாயும் தாருடன் ஒட்டிக் கொள்ளவே தப்பி ஓட முடியாமல் தவித்தது. கிழவி எழுந்து கூப்பாடு போட்டாள். சொக்கன் வேகமாக ஓடி வந்து ஓநாயைப் பிடித்துக் கூண்டில் அடைத்து விட்டுக் கொண்டு போனான்.



அதற்கு மறுதினமும் காட்டில் கிழவி தூங்கிக் கொண்டிருந்தபோது குட்டிக் காளையைப் பார்க்க

வந்த ஒரு குள்ளநரி கரடியையும் ஓநாயையும் போலவே தாரில் மாட்டிக் கொண்டது. குள்ளநரியும் சொக்கனிடம் அகப்பட்டுக் கொண்டது.

அன்று வீட்டுக்குச் சென்றதும் சொக்கன் கூரிய கத்தியுடன் கரடியிடம் வந்தான். "உன்னை நான் குத்திக் கொல்லப் போகிறேன். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"ஐயோ, வேண்டாம்! நான் செத்துப் போவேன். என்னை விட்டுவிடு. உனக்கு நிறையத் தேன் தருகிறேன்" என்றது கரடி.

"பிறகு ஏமாற்றி விடுவாய். உன்னை விடமாட்டேன்" என்றான் சொக்கன்.

"சத்தியமாகத் தேன் தருகிறேன்! விட்டுவிடு" என்று கெஞ்சியது கரடி. சொக்கன் கரடியை விட்டுவிட்டான்.

பிறகு ஓநாயிடம் சென்று கத்தியைக் காட்டி அதைக் கொல்லப் போவதாகப் பயமுறுத்தினான்.

"ஐயையோ! வேண்டாம். உனக்குப் புண்ணியம் உண்டு. என்னை விட்டு விடு. நான் உனக்கு நிறைய ஆடுகள் கொண்டு வந்து தருகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டது ஓநாய்.

"சத்தியமாகத் தருவாயா? அல்லது ஏமாற்றி விடுவாயா?"

"சத்தியமாகத் தருவேன்."

"சரி; நீ போகலாம்" என்று ஓநாயை விடுவித்தான் சொக்கன்.

பின்னர், குள்ளநரியைக் கொல்லப் போனான். குள்ளநரி நிறையக் கோழிகள் கொண்டு வந்து தருவதாக வாக்களித்தது. குள்ளநரியையும் சொக்கன் விடுதலைசெய்துகாட்டுக்கு அனுப்பினான்.

மறுநாள் காலை யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டுக் கிழவன் வெளியே வந்து எட்டிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! வாசலில் கரடி, ஓநாய் குள்ளநரி மூன்றும் தாங்கள் வாக்களித்தபடியே தத்தம் பரிசுகளைக் கொண்டு வந்திருந்தன. ஒரு மந்தை ஆடு, ஒரு குடம் தேன், ஒரு பெரிய கோழிக் கூட்டம் இவ்வளவையும் மகிழ்ச்சியுடன் அவைகளிடமிருந்து பெற்றுக் கொண்டான் சொக்கன்.

பதிலுக்கு அம்மூன்றுக்கும் நிறையத் தார் எண்ணெய் கொடுத்து அனுப்பினான். கரடியும், ஓநாயும் நரியும் மகிழ்ச்சியுடன் கிழவனை வாழ்த்திக் கொண்டே சென்றன. (உக்ரேனியக் கதை)

'க்யூ'வில் சேராதவர்!

விடுமுறைக்குப் பிறகு அன்றுதான் பள்ளிக்கூடம் திறந்தார்கள். ஆகையால் பையன்களைப் புதிதாகச் சேர்க்க வந்தவர்களும் சேர்ப்பதற்குச் சிபாரிசு செய்பவர்களும் குழுமி இருந்தார்கள். எல்லோருக்கும் ஒரே வார்த்தையில், 'இடமில்லை' என்று தலைமை ஆசிரியரும் சொன்னபடியே இருந்தார்.

அப்போது கறுப்புக் கோட்டு அணிந்த சாதாரண மனிதர் ஒருவர் மிக அலட்சியமாகத் தலைமை ஆசிரியர் அறையில் நுழைந்தார். திடீரென்று வந்த அவருக்கு ஏக உபசாரங்கள் நடந்தன.

"முனிசாமி! போய் எதிர் ஓட்டலில் பாதாம் அல்வா, வாங்கி வா!" என்றார் தலைமை ஆசிரியர். வந்தவர் வேண்டாம் என மறுத்துச் சொல்லியும் பயனில்லை.

'உள்ளே போனவர்களெல்லாம் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் ஐந்தே நிமிஷத்தில் வெளியில் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். ஆனால் இந்த ஆசாமிக்கு மட்டும் இத்தனை உபசாரம் ஏன்?' என்று க்யூவில் நின்றவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். அவரைச் சிபாரிசுக்குப் பிடித்தால், நிச்சயம் தங்கள் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கும் என்று எல்லோரும் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.


இதைப் பார்த்துக் கொண்டிருந்த முனிசாமி 'ஏதேது! மனுஷன் வெளியில் வந்தவுடன் அவர் மேல் எல்லோரும் பாய்ந்து அவரைத் திக்கு முக்காடச் செய்து விடுவார்கள் போலிருக்கிறதே!' என்று பயந்தான். உடனே அவர்களிடம் "அந்த மனிதருக்கு அவ்வளவு உபசாரம் நடப்பதற்குக் காரணம் என்ன தெரி




யுமா? அவர் சிபாரிசுக்காகத் தலைமை ஆசிரியரைத் தேடி வராததால்தான்!" என்றான் பியூன் முனுசாமி. —குமார்

வேடிக்கை விளையாட்டு










ஒரு வகை தாவரங்களுக்குப் பூமியில் உணவுச் சத்து கிடைக்காமல் போய் விடும். அம்மாதிரி சமயங்களில் அவை தங்கள் தலையில் உள்ள உணவுக் கூண்டுகள் மூலம் பூச்சிகளை உட்கொண்டு உயிர் பிழைக்கும். மேற்படி கூண்டுகளில் உள்ள தேனுக்காக பூச்சிகள் வந்து உட்கார்ந்ததும் அந்தக் கூண்டின் மேல் பாகம் மூடிக்கொள்ளும். பிரிட்டன், அமெரிக்கா. இந்தியா இம் மூன்று தேசங்களிலும் இந்த வகைச் செடிகள் இருக்கின்றன.





ஒரு காகிதத்தில் படத்தில் உள்ளதைப் போல் வளையம் வெட்டிக் கொள். பிறகு அந்த வளையத்திலேயே மற்றொரு வளையம் மாட்டப் பட்டிருக்க வேண்டும். வேறு காகிதம் எடுத்து இன்னொரு வளையம் செய்து ஒட்டக் கூடாது. இன்னொரு வளையம் மாயமாக வரும் விதம் எப்படி?

(விடை அடுத்த இதழில்)





1. ஜலத்தை அளந்துகொள்ளவும்



2. நெஸ்ப்ரே சேர்த்து, வேகமாக கலக்கவும்



3. உபயோகத்திற்கு தயார்



நெஸ்ப்ரே
தயாரிப்பதில்
80 வருஷ
அனுபவம்

மிக நேர்த்தியான பால் உங்களுக்கு
பத்திரமான சிக்கனமான பால்
கிடைக்க விசேஷமாக பவுடராக்கப்பட்டது.

நெஸ்ப்ரே

சொன்னால் போதும்

நெஸில்லின் உயர்தர
சரக்குகளில் இன்னொன்று

NS/G/58



குத்துவிளக்கு சொன்ன கதை

ஸ்ரீவத்ஸன்

மேளக்காரன் தவுல் கிழிந்து போகும்படியாக, 'டும், டும்' என்று கெட்டி மேளம் கொட்டினான். அதற்கு அனுசரணையாக நாகஸ்வர வித்வான் நாயனத்தை ஆகாயத்தை நோக்கி நிமிர்த்தி வாசித்தான்.

பெரியவர்கள் தம்பதிகள் நீடூழி வாழ ஆசி வழங்கினார்கள்.

ஆங்காங்கே சிலர் மணம் கமழும் பன்னீரை எல்லோர்பேரிலும் தெளித்த படி நின்றார்கள். மல்லிகைப் பூவின் மணம் அத்துடன் சேர்ந்து கொண்டு மணவறையைச் சொர்க்க லோகமாக்கிக் கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட மங்களகரமான இன்பச் சூழ்நிலையில்-நன் முகூர்த்தத்தில் அவன் அவள் கழுத்தில் பவித்திரமான திருமாங்கல்யத்தைக் குதூகலத்துடன் அணிவித்துக் கொண்டிருந்தான்.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு நானும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தேன். பாவம், தனக்கும் நல்லகாலம் வராதா என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தாள்.

எவ்வளவோ நாட்கள் மாலையானதும் பூஜை யறையில் தேவி படத்துக்கு முன்பு என்னை ஏற்றி வைத்து விட்டு, தேவியைப் பிரார்த்தித்திருக்கிறாள். தேவியும் கண் திறந்தாள். அவள் கதையே அலாதி!

★

எல்லாக் கதைகளும் எங்கெங்கேயோ ஆரம்பித்துக் கடைசியில் கலியாணத்தில் வந்து முடியும். ஆனால் இவள் சம்பந்தப்பட்ட வரையில் முதலில் கலியாணம், பிறகுதான் அதற்கு முன்பு நடந்த சம்பவங்களைப் பார்க்கிறோம்.

எனக்கு எப்படி இதெல்லாம் தெரியும் என்று கேட்கிறீர்கள்? அவள் தாயார் கணவன் வீட்டுக்கு வரும்போது என்னைக் கொண்டு வந்தாள். அதுமுதல் இன்றுவரை நான் பூஜையறையில்தான் இருந்து கொண்டு வருகிறேன்.

கலியாணத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளை அழைப்புக்கு எல்லோரும் ஈசுவரன் கோயிலுக்குப் போனார்கள்.

அவள் மட்டும் தேவி படத்துக்கு முன்பு உட்கார்ந்து கொண்டு, "தேவி! ஏதோ இந்த அதிர்ஷ்டக் கட்டையை இப்போதுதான் கண் திறந்து பார்த்திருக்கிறாய்! அது என் அதிர்ஷ்டமே. கலியாணம் நல்லபடியாக முடிந்து, என் கழுத்தில் நல்லபடியாக அவர் மூன்று முடிச்சுப் போட வேண்டும். நானும் நாலு பேரைப் போல் வாழ்க்கைப்பட்டுச் சௌக்கியமாய் வாழ நீ அருள வேண்டும். தாயில்லாப் பெண்ணாகிய எனக்கு நீதான் தாய்" என்று

வேண்டிக் கொண்டாள். பிறகு பக்திப் பாடல்கள் சொல்லி வணங்கினாள்.

எவ்வளவு நாட்கள் தேவி படத்தின் முன்பு உட்கார்ந்து அவள் மனமுருகிப் பாடியிருக்கிறாள் தெரியுமா? தேவியை வணங்கிய பலன் வீணாகிப் போகுமா? தன்னை அண்டியவர்களைத் தேவி கை விட்டு விடுவாளா?

★

பாவம்! ருக்மிணி பிறந்த இரண்டு மாதங்களுக்கெல்லாம் அவள் தாயார் இறந்து விட்டாள். அவள் தகப்பனார் ஒரு கிராமக் கணக்குப் பிள்ளை. குழந்தையைக் காப்பாற்ற என்று சொல்லி அவர் மறுமணம் செய்து கொண்டார்.

உலக இயல்புக்கு மாறுதல் இல்லாமல் அவள் சித்தியும் அவளைப் படாத பாடு படுத்தி வந்தாள். அவள் தந்தையோ அவளுடைய சித்தியின் வார்த்தைக்கு அடங்கி நடப்பவர் என்பதை அவள் தெரிந்து கொண்ட போது, ருக்மிணிக்குப் பத்து வயதாயிற்று.

ஒவ்வொரு நாளும் அவள் படாத பாடு படுத்தப்பட்டு வந்தாள் என்பதைப் பற்றி ஒரு புத்தகமே எழுதிவிடலாம். என்ன செய்வது?

இப்படியும் அப்படியுமாக ருக்மிணி மணப் பருவத்தை அடைந்தாள்.

அவ்வளவு நாள் பட்ட துன்பங்களைவிட அவள் கலியாணப் பருவத்தை அடைந்த போது பட்ட வேதனையைச் சொல்லி முடியாது.

எல்லாரையும் போல, இளைஞனையே அவள் மணக்க விரும்பினாள். அவள் தகப்பனாரோ அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும் என்ற எண்ணமே இல்லாது இருந்து வந்தார். அவள் சிறிய தாயாரோ அவளுக்கு எங்கேயாவது நல்ல வரனாகக் கிடைத்து விடப் போகிறதே என்று பயந்து கொண்டிருந்தாள்.

இப்படியாக அவளுக்கு இருபத்திரண்டு வயது ஆயிற்று. அவள் உள்ளம் உருகிச் செத்தாள். அவள் அப்பா கவலையற்று இருந்தார்.

★


இப்படிப்பட்ட நிலையில் ருக்மிணி அனுபவித்த துயரம் போதாது என்று மேலும் துன்பம் அவளை வந்து சூழ்ந்து கொண்டது.

அவள் சித்தியின் தமையன் ஒருவன்; நாற்பத்து எட்டு வயது. அவன் மனைவி இறந்துவிட்டாள், ஏழெட்டுக் குழந்தைகளை விட்டு விட்டு. அதோடு அவனுக்குக் கொடிய ஆஸ்த்துமா வியாதி வேறு.

இந்த வியாதிக்காரனையும், ஏழெட்டுக் குழந்தைகளையும் காப்பாற்ற அவள் சித்தி அவனுக்கு இவளை மணம் முடித்து வைக்கத் தீர்மானித்து விட்டாள். தன் கணவனிடம் சொன்னாள். அவர் என்ன செய்ய முடியும்? தம் மனைவியின் பேச்சை மறுத்துப் பேச அவருக்குச் சுதந்திரம் ஏது? பேசத்தான் வாய் ஏது?

அவள் சித்தி, ருக்மிணியிடம் இதைப் பற்றிச் சொல்லாமலேயே அவள் தமையனுக்குப் பாக்குவெற்றிலை மாற்ற வரும்படியும் எழுதி விட்டாள். இதை அறிந்த அந்தப்பெண் துடியாய்த் துடித்தாள். ஏழெட்டுக் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமே என்று அவள் கவலைப்பட வில்லை. நாற்பத்தெட்டு

யார் இவர்கள் ?




ருசியான உணவை சமைக்க
ஏற்றது...
துஷார்
விட்டமின் சேர்ந்த
வனஸ்பதி
Tushar
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்.
துஷார் சுத்திகரித்த எண்ணெயும் கிடைக்கும்


புத்தம் புதியது-சுத்தமானது — ஏனெனில்
இந்த பார்லி
டின்னில்
அடைக்கப்பட்டது!
ROBINSONS
PEARL
BARLEY
ராபின்ஸன்ஸ் பெர்ல் பார்லி எப்பொழுதும் உங்கள் நம்பிக்கைக்கு உகந்தது. அது புஷ்டிமிக்க, உயர்ந்த ரக தானியங்களிலிருந்துத் தயாரிக்கப்பட்டு அவைகளின் புதுமையும் சுத்தமும் சிறிதளவும் கெடாவண்ணம் சுகாதார முறைப்படி காற்றுப்புகாமல் டின்களில் அடைக்கப்படுகின்றன. நோயாளிகள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியவர்களுக்கு இது ஒரு முழு பாதுகாப்புள்ள உணவு.
ராபின்ஸன்ஸ் பெர்ல்
பார்லியையே
கேட்டு வாங்குங்கள்
முற்றிலும் சுத்தமானது
RPL 37G



வயதைக் கடந்த ஆஸ்த்துமாக்காரருக்கு எப்படி வாழ்க்கைப்படுவது? அவளுக்கு உலகமே இருண்டது. தனியாய்த் தவித்தாள். சித்தியிடம் கெஞ்சினாள்; மன்றாடினாள். சித்தி அவள் புலம்பலைக் காது கொடுத்துக் கேட்கவில்லை.

பொழுது விடிந்தால் அவளுக்கு நிச்சயதார்த்தம். வீட்டை விட்டு ஓடினால் குடும்பத்துக்கு அல்லவா அவக்கேடு. வீட்டை விட்டு ஓடாமல் இருந்தால் அவளுக்கு வாழ்க்கைப்பட்டாக வேண்டும். இந்த இடையூறிலிருந்து எப்படித் தப்ப முடியும்?


★

அன்று கிராமச் சாவடியில் கிராம கர்ணத்தின் கணக்குகளைச் சோதனை செய்யப் புதிதாகத் தாசில்தார் முகாம் செய்திருந்தார். அவர் சாவடியில் தம் மனைவியுடன் வந்திருப்பதாக அவள் அப்பா சொல்லியிருந்தார்.

இந்தக் கலியாணம் நிற்க வேண்டுமானால் அவள் தந்தை அவள் சித்தியுடன் வாதாடி, ''வியாதிக்காரனுக்குக் கொடுக்க முடியாது'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும். அதற்கு அவள் தகப்பனாருக்குத் தைரியமில்லை. ஆனால் தாசில்தார் கூப்பிட்டுத் தந்தையைக் கண்டித்தால் அவருக்காக, அவருக்குப் பயந்தாவது அவள் தகப்பனார் இந்தக் கலியாணத்துக்குச் சம்மதிக்க மாட்டார். ஏனெனில், அவள் தந்தையின் உத்தியோகச் சீட்டு அவர் கையில் இருக்கிறது. அப்பா அவர் சொற்படி நடந்துதான் ஆக வேண்டும்.

ஆனால் முன்பின் தெரியாத ஒரு ஆடவரிடம் போய் எப்படிச் சொல்வது? பரவாயில்லை. அவர்தான் அவர் மனைவியுடன் வந்திருக்கிறாரே! அவளிடமே போய் முறையிடுவது. அவள் மூலமாய் அவளுடைய கணவனிடம் சொல்லச் சொல்லித் தன் தகப்பனாரிடம் தெரிவிக்க வைக்க வேண்டியது என்று தீர்மானித்தாள்.

அதே சமயம், 'தான் இப்படியெல்லாம் செய்வது சரியில்லையா? பேசாமல் இருந்தால் நாளைக் காலை நிச்சயதார்த்தம் ஆகிவிடும். வீட்டை விட்டு ஓடிவிட்டால் அவக்கேடு. தற்கொலை செய்து கொள்வதோ பாவம். இந்நிலையில் தான் செய்யக் கூடியது இது ஒன்றுதான். போய்ப் பார்ப்பது. அவர்களும் கையை விரித்து விட்டால் பிறகு கடவுள் விட்ட வழி' என்று அவள் தீர்மானம் செய்து கொண்டாள்.



பட்டுப்பூச்சி :— என்ன பல்லியாரே! சௌக்கியமா?

பல்லி :— சௌக்கியமாவது! மறுபடியும் வால் அறுந்து போச்சு!

பட்டுப்பூச்சி:— ஆமாம்! அறுந்து போகாமல் என்ன செய்யும்! இவ்வளவு பெரிய வீட்டில் உனக்குத் தங்குவதற்குக் கதவு மூலைதானா அகப்பட்டது?

ஈசுவரன் கோயிலுக்கு எண்ணெய் எடுத்துக் கொண்டு அன்று மாலை புறப்பட்டாள். கோயிலுக்குச் சற்றுத் தள்ளித்தான் சாவடி இருந்தது.

அவள் அங்கு தயங்கித் தயங்கிப் போனாள். வாசல் முகப்பில் அந்தத் தாசில்தார் உட்கார்ந்திருந்தார். இவள் தயங்கியபடி வருவதைப் பார்த்த அவர், ''ராஜி! யாரோ ஒரு பெண் வருகிறாள் பார். உள்ளே அழைத்துக் கொண்டு போ!'' என்றார்.

அடுத்த கணம் ஒரு பெண் வந்து, ''உள்ளே வாருங்கள்'' என்று ருக்மிணியை அழைத்துப் போனாள்.

ருக்மிணியும் ராஜியும் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். விடைபெறும் போது, ''அவசியம் நீங்கள் உதவி செய்ய வேண்டும். என்னுடைய வாழ்க்கை மலருவதும் கருகுவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது'' என்று ருக்மிணி சொன்னாள்.

''நீ கவலைப்படாதே, ருக்மிணி! இனிமேல் அது என்னுடைய பொறுப்பு'' என்றாள் ராஜி.

வாசலைத் தாண்டிப் போகும் போது நல்ல விளக்கு வெளிச்சத்தில் அவள் கண்கள் அவளையும் அறியாமல் அவரைப் பார்த்தது. அவள் மனத்தை

என்னவோ செய்தது. அழகு ததும்பும் அவரது கம்பீரமான தோற்றம்.

*

மறு தினம் பொழுது விடிந்ததும் ருக்மிணியின் தகப்பனாரைத் தாசில்தார் சேவகன் வந்து அழைத்துப் போனான்.

அவள் தகப்பனார் தாசில்தாரிடம் போய்விட்டு ஒரு மணி நேரம் கழித்துத்திரும்பி வந்தார். ருக்மிணி அவர் முகத்தைவெகுஆவலுடன் பார்த்தாள்.



அவள் தந்தை உள்ளே வந்ததுமே மனைவியை அழைத்து, ''இதோபார், கமலம்! புதிதாக வந்திருக்கும் தாசில்தார் ரொம்பவும் ஏழையாக இருந்து முன்னுக்கு வந்தவராம். எவ்வளவோ இருந்தும்கூட ஏழைப் பெண்ணைத் தான் மணம் புரிவேன் என்று பிடிவாதம் பிடித்தாராம். யாரோ நம் ருக்மிணியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவர் நம் ருக்மிணியைத் தமக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார். என்ன சொல்வது? 'சரி' என்று சொல்லி விட்டேன். அவர் நமக்குப் படி அளப்பவர். அவர் சொல்லை எப்படி மீற முடியும்? கலியாணமானதும் உன்னையும் என்னையும் தம்முடன் வந்து குடும்பத்துக்குப் பெரியவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டார்'' என்றார்.

''அவர் மனைவியுடன் வந்திருப்பதாகச் சொன்னீர்களே!'' என்று கவலையுடன் கேட்டாள் கமலம்.

''அவர் முதலில் ஒரு பெண்மணியுடன் வந்தபோது நானும் அப்படித்தான் நினைத்தேன். அது அவர் தங்கை. தமையனும் தங்கையும் அவ்வளவு அன்யோன்யம். தமையன் எங்கே போனாலும் தங்கையும் கூட வருவாளாம். அவர்களுக்குத் தாய் தகப்பன் இல்லையாம்'' என்றார். சித்திக்கு அப்புறம் பேச வாய் ஏது? இடிந்து போனாள்.

ருக்மிணிக்கு அவள் காதுகளை நம்பவே முடியவில்லை. ஓடி வந்தாள் பூஜை அறைக்கு. என்னைத் தூண்டி விட்டாள். நான் பிரகாசமாக எரிந்தேன். ''தேவி! நீதான் என் கண்கண்ட தெய்வம்'' என்று உள்ளம் உருகி வணங்கினாள்.

*

மறு நாள் ராஜியைக் கோயிலில் பார்த்தாள் ருக்மிணி. ''தாங்கள்தான் என் தெய்வம். குப்பையில் கிடந்த என்னைக் குன்றின் மேல் ஏற்றி மலர விடுகிறீர்கள். ஆனால் நீங்கள் அவர் சகோதரி என்று கூறவில்லையே?'' என்று கேட்டாள்.

''நீ வந்துபோனதை அண்ணாவிடம் சொன்னேன். அவன் உன் அழகில் மயங்கியதைச் சொன்னான். நீதான் அவனுக்குச் சொக்குப் பொடி போட்டு மயக்கி விட்டாயே. பலே கைகாரி!''

''அப்பாவுக்கு இதெல்லாம் தெரியாதே?'' என்று கேட்டாள் ருக்மிணி.

''நாங்கள் சொல்வோமா, அதையெல்லாம்!'' என்றாள் ராஜி.

ருக்மிணியின் முகம் நன்றி உணர்ச்சியால் மலர்ந்தது. அவளுக்கு அதற்கு மேல் என்ன பேசுவது என்று தோன்றவில்லை. ராஜியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

இந்த மௌனத்தைக் கலைத்து, ''உன் சிறிய தாயார் ஏதாவது சொல்லுகிறாளா?'' என்று கேட்டாள் ராஜி.

''என் சிறிய தாயாரின் மனமாறுதல் எனக்குப் புரியவேயில்லை. அவர்கள் கூட மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். எல்லாம் உங்கள் அன்பினால்தான்.''

''நான் என்ன பிரமாதமாகச் செய்து விட்டேன்? நல்ல மனசுதான் உன் சிறிய தாயாரின் உள்ளத்தையும் மாற்றி விட்டது'' என்றாள் ராஜி. ருக்மிணி மகிழ்ச்சிக் கடலில் மிதந்தாள்.

இவ்வளவு தான் அவள் கதை.

சரி, சரி! நாழிகை யாகிவிட்டது. புறப்படுங்கள். அதோ! மணமக்களைச் சேர்த்து வைத்து ஆரத்தி எடுக்கிறார்கள். நாமும் போய்ப் பார்க்கலாம், அந்தக் கண்கொள்ளாக் காட்சியை.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam


அஞ்சலி தேவி எப்பொழுதும்
லக்ஸ் டாய்லெட் சோப்
உபயோகிக்கிருர்
"நானறிந்த சோப்புக்களில்
மிகவும் தூய்மையான
வெண்ணிற சோப்!"
அவர் வாக்கை நீங்கள் தயங்காமல் ஏற்றுக் கொள்ளலாம். லக்ஸ் டாய்லெட் சோப்பின் பூரணமான வெண்மை அதன் தூய்மையைப் பிரதிபலிக்கிறது—உங்கள் மேனியின் பூப்போன்ற பராமரிப்புக்கு அதுவே அடையாளம்! லக்ஸின் நுரையைஎன்னென்பது! நறுமணம் கமழும் மென்மையான லக்ஸ் நுரை உங்கள் சருமத்தைப் பரிபூரணமாக சுத்தம் செய்து, உன்னதமான புதுமையுடன் மிளிரச் செய்கிறது. சிக்கனத்தை உத்தேசித்து பெரிய சைஸ் வில்லைகளை வாங்க மறவாதீர்கள்!
இந்தியாவில் தயாரித்தது
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின்
அழகு
தரும் சோப்
LTS. 455-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

